REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மே 20 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 117 | Friday 20, May, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## கோபா குழு முதலாவது அறிக்கை இன்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் அரசாங்க கணக்குகள் பற்றிய (கோபா) குழுவின் முதலாவது அறிக்கை, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ 06

## அத்தியாவசியமற்ற அரசாங்க ஊழியர்களுக்கு இன்று விடுமுறை

### இன்று சமுகமளிக்கத் தேவையில்லையென அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரச ஊழியர்கள் இன்று வெள்ளிக்கிழமை கடமைக்கு சமுகமளிக்க வேண்டிய அவசியம் கிடையாதென பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்று அரசதுறையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரச ஊழியர்களை கடமைக்கு சமுகமளிக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அது எரிபொருள் பிரச்சினைக்கு உதவியாக அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.

### தவறான படத்துடன் பொய்யான செய்திகள்

## பாராளுமன்றத்துக்கு மஹிந்த விமானத்தில் வரவில்லை

### சமூக ஊடக செய்திகளுக்கு மறுப்பறிக்கை




பாராளுமன்ற அமர்வுகளுக்காக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்திகளை அவரின் அலுவலகம் நேற்று வியாழக்கிழமை நிராகரித்துள்ளது.

இந்த விடயம் குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் 06

### இனப்படுகொலை என்பது அப்பட்டமான பொய்

## கனேடிய பாராளுமன்றத்தில் இனப்படுகொலை பிரேரணை

### இலங்கை அரசு வருத்தத்துடன் நிராகரிப்பு



கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான பிரேரணையை இலங்கை நிராகரித்துள்ளது.

கனேடிய பாராளுமன்றத்தில் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு இலங்கை அரசாங்கம் வருத்தம் தெரிவித்துள்ளது. இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல் மற்றும் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையாக அங்கீகரித்துள்ளது. இனப்படுகொலை என்ற அப்பட்டமான பொய்யான 06

# வெளிநாட்டு நாணயங்களை கையிருப்பில் வைத்திருப்போருக்கு இறுதிச் சந்தர்ப்பம்

### வங்கியில் வைப்பிலிட 02 வாரங்கள் அவகாசம்



**றிஸ்வான் சேகு முகைதீன்**

எந்தவொரு நபரும் தனது கையிருப்பில் வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தாள்களின் பெறுமதி 15,000 அமெரிக்க டொலர்களிலிருந்து 10,000 அமெரிக்க டொலர்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நேற்று (19) இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற, அதன் நாணயக் கொள்கை தொடர்பான முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட மத்திய வங்கி ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

அந்நியச் செலாவணிச்சட்டத்தின் கீழ், தற்போது நபர் ஒருவர் வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கக் கூடிய உச்ச வரம்பாக 15,000 டொலர் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது.



அத்துடன், இச்சட்டத்தின்கீழ் வெளிநாட்டு நாணயம் எவ்வாறு தனக்கு கிடைக்கப் பெற்றது என்பதை அந்நபர் விளக்கமளிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமெனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நபர் ஒருவர் வெளிநாடு சென்று திரும்பிய போது அல்லது 06

**கையிருப்பில் வைத்திருக்கும் டொலர் 15,000 இலிருந்து 10,000 ஆக குறைப்பு**



ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் போர் வீரர்களின் 13 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று (19) முற்பகல் ஸ்ரீ ஜயவர்தனபுர போர்வீரர் நினைவுத்தூபியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண, பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜகத் அல்விஸ், பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



## நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்தாலும் ஒன்றரை வருடம் எடுக்கும்

தலைகளை மாற்றும் அரசால் பலனில்லை 03

## கோதுமை மாவின் விலை 35 ரூபாவால் அதிகரிப்பு



**அரசு நடவடிக்கை எடுக்காவிடின் பேக்கரி உற்பத்திகள் நிறுத்தப்படலாம்**

கோதுமை மாவின் விலை உடன் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்படுவதாக பிரீமா நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது. அதன்படி, கோதுமை மா கிலோ ஒன்றின் விலையை 35 ரூபாவால் அதிகரித்துள்ளதாக பிரீமா நிறுவனம் 06

## சமையல் எரிவாயு விநியோகம் வழமைக்கு திரும்பியது

### நேற்று முதல் 8,000 சிலிண்டர்கள்



நாளாந்தம் 8,000 சமையல் எரிவாயு சிலிண்டர்களை நேற்று முதல் சந்தைகளில் விநியோகிக்க லிற்றோ நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதேநேரம், 3,800 மெற்றிக்தொன் அளவிலான எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 06

## பாடசாலைகளுக்கு நேற்று முதல் விடுமுறை

### ஜூன் 06 இல் மீள ஆரம்பம்



அனைத்து அரச பாடசாலைகளுக்கும், நேற்று முதல் முதலாம் தவணை விடுமுறை ஆரம்பமாவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின், இந்த 06

## மானிய விலையில் எவருக்கும் எரிபொருள் வழங்கப்படவில்லை

### எம்.பிமாருக்கு வழங்கியதான செய்தி பொய்யானது

*(லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்)*



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில் எரிபொருள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர முற்றாக நிராகரித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில் எரிபொருளை வழங்குவதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென்று 06



## மே 09 வன்முறைகள் இதுவரை 1,059 பேர் கைது

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு 03



### வாக்குகளால் செய்ய முடியாததை

## வன்முறை மூலமாக செய்ய ஜே.வி.பி.முயற்சி

03



### அஹிம்சை வழி போராட்டம்

## தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்

03

### களுவாஞ்சிக்குடியிலிருந்து

## சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 21 பேர் கைது



### கடற்கரை பகுதியில் படகுடன் கைதாகினர்

*(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)*

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு 06

## கடும் வங்குரோத்து நிலையில் இலங்கையின் பொருளாதாரம்

### அமெரிக்க பொருளாதார நிபுணர் எச்சரிக்கை

இலங்கையில், உயர் பணவீக்கத்தினால் நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் ஸ்டீவ் ஹென்கே தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான ஹென்கே, இலங்கை ஊடகமொன்றுக்கு கருத்து 06

## புதிய அமைச்சர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு, அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவியேற்போர் அமைச்சர்களுக்கான சம்பளம் மற்றும் சலுகைகளை பெற்றுக்கொள்ளாத வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எரிபொருள் நெருக்கடி நிலைமை தொடர்பில் உரையாற்றும் போதே பிரதமர் 06

## ஒரு இறாத்தல் பாணின் விலை ரூ.30 ஆல் அதிகரிப்பு




கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பாண் ஒன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து பேக்கரி பொருட்களின் விலைகளும் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை 06

### பதுளையில் குளவிக் கொட்டு

## நான்கு பெண்களின் நிலை கவலைக்கிடம்

*(லுணுகலை நிருபர்)*



பதுளை லுணுகலைப் பகுதியின் அடாவத்தை பெருந்தோட்டப் பிரிவைச் சேர்ந்த நான்கு பெண் தொழிலாளர்கள், குளவிக் கொட்டுக்கு இலக்காகி, லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று (19) அடாவத்தை பெருந்தோட்டப் பிரிவில் 06

## தலவாக்கலையில் மண்சரிவு அபாயம்

### ஒருவர் காயம், 25 பேர் இடம்பெயர்வு



*(ஹற்றன் சுழற்சி நிருபர்)*

மலையகத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை தொடர்ச்சியாக பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக 06

## ஜனாதிபதியின் அலுவலகம் முன்பாக நினைவேந்தல்

### நல்லதொரு புதிய சமிக்ஞை

*(லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்)*



யுத்தத்தினால் உயிரிழந்த தமது உறவினர்களை நினைவு கூருவதற்கு கடந்த வருடம் தடை விதிக்கப்பட்டிருந்தும், இம்முறை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தின் முன்பாக நினைவேந்தல் நடைபெற்றது.

இது ஒரு புதிய சமிக்கையை காட்டுவதால், இதனை அங்கீகரிக்க 06

### விக்கல் வீராச்சாமி



பாராளுமன்றத்தில ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லையெண்டு கொண்டுவந்த பிரேரணை படுதோல்வி அடைஞ்சு இருக்கே....

அப்ப அவர் மீது நம்பிக்கை இருக்கெண்டுதானே அர்த்தம், தெரிஞ்சு வேணுமெண்டே உத கொண்டுவந்து நாடகமாடினாங்களோ தெரியாது...!!!

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# சர்வதேச செய்திகள்

## பாகிஸ்தான் அரசின் மீது இம்ரான்கான் குற்றச்சாட்டு



பாகிஸ்தான் மத்திய அரசு அதன் எதிர்ப்பாளர்களது குரல்களை நசுக்கும் வகையில் செயற்படுவதாக அந்நாட்டு முன்னாள் பிரதமர் இம்ரான் கான் குற்றம்சாட்டியுள்ளார்.

அரசியலமைப்பை மீறியதாக பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தமது அரசு வெளியேற்றப்பட்டதாக பெண் வழக்கறிஞர்களுடனான சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

சபாநாயகரின் தீர்ப்பு, ஆளுநர் மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பாராளுமன்ற இறைமை ஆகியவை இந்த சதித்திட்டத்தின் வெற்றிக்காக பறிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசுக்கு எதிராக போராட இந்த தேசம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

## பாகிஸ்தான் ஊடகங்களை கட்டுப்படுத்த வழிகாட்டல்



தற்போதைய அரசியல் சொல்லாடல்களைக் கவனத்தில் கொண்டு, அரசு, நீதித்துறை மற்றும் ஆயுதப்படைகளுக்கு எதிரான விடயங்களை ஒளிபரப்புவதைத் தவிர்க்குமாறு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களில் அரசு நிறுவனங்களுக்கு எதிரான விடயங்களை ஒளிபரப்புவதை தவிர்க்குமாறு அனைத்து செய்மதி தொலைக்காட்சி சேவைகளுக்கும் பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

எனினும் நாட்டின் ஆயுதப் படைகள் மற்றும் நிதித்துறை மீது குற்றம் சுமத்துவதாக எந்த அரசியல் கட்சிகள் அல்லது குழுக்களையும் இந்த ஆணையம் குறிப்பிட்டு கூறவில்லை.

## இந்தியாவுடன் உறவை மேம்படுத்தும் வியட்நாம்

சமாதானம், ஸ்தீரத்தன்மை மற்றும் உரையாடலுக்கான சூழலை மேம்படுத்துவதற்காக நாம் மிகவும் சினேகபூர்வமான நட்புறவை இந்தியாவுடன் கொண்டுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ள இந்தியாவுக்கான வியட்நாம் தூதுவர் பாம் சான் சௌவ், பாதுகாப்பு, அணுசக்தி தொழில்நுட்பம் போன்ற முக்கிய துறைகளில் தெற்காசிய நாடான இந்தியாவினால் மாத்திரமே எமக்கு உதவ முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## உக்ரைனிய போர்: உலக உணவு நெருக்கடி பற்றி ஐ.நா எச்சரிக்கை

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பல ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய சர்வதேச உணவு நெருக்கடி ஒன்றை விரைவில் ஏற்படுத்தக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

விலை அதிகரிப்புக் காரணமாக ஏழை நாடுகளில் உணவு பாதுகாப்பின்மை இந்தப் போரினால் மோசமடைந்திருப்பதாக ஐ.நா செயலாளர்நாயகம்அன்டோனியோ குட்டரஸ் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனிய ஏற்றுமதிகள் போருக்கு முந்திய நிலைக்கு மீட்டெடுக்கப்படாவிட்டால் சில நாடுகளில் நீண்ட கால பஞ்சம் ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

உக்ரைன் பெருமளவான சமையல் எண்ணெய் அதேபோன்று சோளம் மற்றும் கோதுமை போன்ற தானியங்களை ஏற்றுமதி செய்யும் நிலையில் அந்நாட்டு துறைமுகங்களில் இருந்து விநியோகங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் சர்வதேச விநியோகங்கள் குறைந்திருப்பதோடு மாற்று பொருட்களின் விலை அதிகரிப்புக்குக் காரணமாகியுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உலக உணவு விலைகள் கிட்டத்தட்ட 30 வீதத்திற்கு மேல் அதிகரித்திருப்பதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

நியூயோர்க்கில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய குட்டரஸ், போருடன் காலநிலை மாற்றம் மற்றும் பெருந்தொற்றும் சேர்ந்து பல மில்லியன் கணக்கான மக்களின் உணவு பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருப்பதோடு தொடர்ந்து ஊட்டச்சத்து குறைபாடு, பட்டினி மற்றும் பஞ்சத்திற்கு வழிவகுக்கும் என்றார்.

"நாம் ஒன்றாக இணைந்து செயற்பட்டால் இப்போது எமது உலகில் போதுமான உணவு உள்ளது. ஆனால் இன்றே நாம் இந்தப் பிரச்சினையை தீர்க்காவிட்டால்,



எதிர்வரும் மாதங்களில் உணவு பற்றாக்குறை அச்சுறுத்தலுக்கு முகம்கொடுப்போம்" என்று அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனின் உணவு உற்பத்தியை மீள் ஒருங்கிணைப்பது மற்றும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் இரு நாடுகளின் உர உற்பத்தி சர்வதேச சந்தைக்கு திரும்புவதே இந்தப் பிரச்சினைக்கு ஒரே சரியான தீர்வாக உள்ளது என்றும் அவர் எச்சரித்தார்.

உக்ரைனின் துறைமுகங்களில் உள்ள தானியங்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்குமாறு அவர் ரஷ்யாவைக் கேட்டுக்கொண்டார். ரஷ்யாவும் உக்ரைனும் உலகின் கோதுமை இருப்பில் 30 வீதத்தை உற்பத்தி செய்கின்றன.

உக்ரைன், மாதந்தோறும் சுமார் நாலரை மில்லியன் தொன் அளவிலான உணவுப் பொருட்களை அதன் துறைமுகங்கள் வழி ஏற்றுமதி செய்கிறது. ஆனால் ரஷ்யப் போர்க் கப்பல்கள் அந்தத் துறைமுகங்களை முடக்கியுள்ளன.

இருப்பில் ஏற்பட்ட இடையூறு காரணமாக உலகெங்கிலும் உணவு விலைகள் அதிகரித்துள்ளன.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதத்தில் ரஷ்யா படையெடுப்பை ஆரம்பித்தபோது, ஏற்றுமதி சீர்குலைந்து, விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்தது.

கடந்த சனிக்கிழமை கோதுமை ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்தபின் அதன் விலைவாசி இன்னும் உயர்ந்தது.

ரஷ்ய படையெடுப்புக்கு முன்னதாகவே, உணவு பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உயர்ந்துவந்த நிலையில், ரஷ்யா இன்னும் கடினமான சூழலுக்கு தள்ளியுள்ளதாக, ஜெர்மன் வெளியுறவு துறை அமைச்சர் அன்னலேனா பேர்போக் புதன்கிழமை குற்றம் சாட்டினார்.

"தானியப் போரை ரஷ்யா தொடங்கியுள்ளது. உலகளாவிய உணவு நெருக்கடியை அது தூண்டியுள்ளது" என அவர் தெரிவித்துள்ளார். "மில்லியன் கணக்கான மக்கள், குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் உள்ள மக்கள் பட்டினி ஏற்படும் ஆபத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் ரஷ்யா இதை செய்துள்ளது" என அவர் தெரிவித்தார்.

இதனிடையே, "மிகப் பெரியளவில் உலகளாவிய உணவு நெருக்கடியை சமகாலத்தில்" உலகம் எதிர்கொண்டு வருவதாக, அமெரிக்க வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் 'தேர்ந்தெடுக்கப்பட்ட போர்' மூலம் இச்சூழல் மோசமாகி விட்டதாக அவர் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பின்மையை சரிசெய்யும் திட்டங்களுக்கு உலக வங்கி மேலும் 12 பில்லியன் டொலர் நிதியுதவியை அறிவித்த அதே நாளில் குட்டரஸ் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.



## மரியுபோலில் மேலும் 700 உக்ரைன் வீரர்கள் சரண்

உக்ரைனின் மரியுபோலிலுள்ள அஸோவ்ஸ்டல் உருக்காலையில் பதுங்கியிருந்த மேலும் 700 வீரர்கள் தங்களிடம் சரணடைந்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா, அந்நாட்டின் மீது கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி படையெடுத்தது. மூன்று மாதங்களை எட்டியுள்ள போரில் உக்ரைன் தரப்பில் அதிக இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

தலைநகர் கியேவ், கார்கீவ் உள்ளிட்ட பகுதிகளைத் தொடர்ந்து மிகப்பெரிய நகரமும், தங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் டொன்பாஸ் கிரீமியா தீபகற்பத்துக்கும் இடையே உள்ளதுமான மரியுபோல் நகரைக் கைப்பற்றுவதற்காக ரஷ்யப்படை தொடர்ந்து போரிட்டு வருகிறது. மரியுபோலின் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றினாலும் மிகப்பெரும் உருக்காலையில் உக்ரைன் வீரர்கள் பதுங்கியிருந்து சண்டையிட்டு வந்தனர்.

கடந்த இரு மாதங்களாக மரியுபோல் இரும்பாலையில் பதுங்கி போராடி வந்த உக்ரைன் வீரர்கள், வேறுவழியின்றி தற்போது ரஷ்யாவிடம் சரணடைந்துள்ளனர்.

கடந்த திங்கள் இரவு 959 பேர் சரணடைந்த நிலையில் மேலும் 771 வீரர்கள் சரணடைந்துள்ளதாகவும் இதனால் தற்போது 1,730 உக்ரைன் வீரர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் ரஷ்ய பாதுகாப்புத் துறை தகவல் தெரிவித்துள்ளது. இவர்களில் 80 பேர் காயமடைந்திருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரணடைந்த ஒவ்வொரு வீரரிடமும் விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிகிறது. சரணடைந்த வீரர்கள், டொனட்ஸ்க் குடியரசு கட்டுப்பாட்டில் உள்ள ஒலியோநிவ்காவில் உள்ள சிறைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

உக்ரைன் வீரர்கள் சரணடைந்துள்ளது குறித்து உலக செஞ்சிலுவைச் சங்கம் பதிவு செய்துள்ளது. அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

## அணு ஆயுதச் சோதனை நடத்த வடகொரியா தயார்



வட கொரியா அணுவாயுதச் சோதனையை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

அதற்குப் பொருத்தமான நேரத்தை எதிர்பார்த்து அது காத்துள்ளது என்று தென் கொரியாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

தென் கொரியாவின் தேசிய உளவுச் சேவைப் பிரிவுக்கு அவர் விளக்கம் தந்துள்ளார்.

வட கொரியா கொவிட்–19 நோய் பரவலால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதன் அணுவாயுதத் தயார்நிலையில் மாற்றமில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இன்று தென் கொரியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் நேரத்தில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி பைடன், தென் கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் வருகை புரியும் நேரத்தில் வட கொரியா அணுவாயுதச் சோதனையை நடத்தக்கூடும் என்று அமெரிக்க உளவுத் துறை கூறியிருந்தது.

வட கொரியா கடைசியாக 2017ஆம் ஆண்டில் அணுவாயுதச் சோதனையை நடத்தியது.

## ரஷ்ய எரிபொருளை கைவிடும் ஐரோப்பாவின் திட்டம் வெளியீடு



ரஷ்யாவின் எரிபொருளில் தங்கி இருப்பதை ஐந்து ஆண்டு காலத்தில் முடிவுக்குக் கொண்டுவர 220 பில்லியன் டொலர் திட்டம் ஒன்றை ஐரோப்பிய ஆணையம் அறிவித்துள்ளது. பசுமை ஆற்றலுக்கு மாறுவதை விரைவுபடுத்தவும் அது திட்டமிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ரஷ்யா 40 வீத எரிவாயுவையும் 27 வீத எண்ணெய்யையும் வழங்குகிறது. இதற்கு எதிராக தடை விதிப்பதற்கு இந்த ஒன்றிய நாடுகளிடையே இணக்கம் ஒன்றை எட்டுவதில் சிக்கல் இருந்து வருகிறது.

'கூடிய விரைவில் ரஷ்ய எரிபொருளில் இருந்து நாம் விடுதலை பெறுவதை உறுதி செய்வதற்கு எமது திட்டத்தை மற்றொரு கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறோம்' என்று பிரசல்ஸில் இந்தத் திட்டத்தை அறிவித்த ஐரோப்பிய ஒன்றிய ஆணைய தலைவர் உர்சுலா வொன் டெர் லெயேன் தெரிவித்தார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்தே ஐரோப்பிய ஒன்றியம் இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கும் வகையில் ரஷ்யாவின் நிலக்கரிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருப்பதோடு ஆண்டு இறுதியில் ரஷ்யா எரிபொருளுக்கான கேள்வியை மூன்றில் இரண்டு பங்காகக் குறைக்க திட்டமிட்டுள்ளது.

## வடகொரியாவில் 2 மில். பேருக்கு 'காய்ச்சல்' பாதிப்பு

வட கொரியாவில் கொவிட்–19 வைரஸ் தொற்று சூழல் மோசமடையும் வேளையில் மருந்துகள், மருத்துவச் சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

காய்ச்சலைக் குறைக்கும் பாரம்பரிய மருந்துகளின் உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டதாக நாட்டின் அரச செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மோசமான வைரஸ் பாதிப்பை தடுக்கவும் அதிலிருந்து குணமடையவும் அந்தப் பாரம்பரிய மருந்துகள் பயனுள்ளதாய் இருப்பதாக நிறுவனம் கூறியது.

இதற்கிடையே வட கொரியாவுக்கு உதவ அமெரிக்காவும் தென் கொரியாவும் முன்வந்துள்ளன. ஆனால் அவற்றுக்குப் பியோங்யாங் பதில் அளிக்கவில்லை.

அது சீனாவிடமிருந்து அவசரகால இருப்புகளைப் பெறுவதாகத் தகவல்கள் வெளியாயின.



வட கொரியாவில் புதிதாக 260,000க்கும் அதிகமானோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களையும் சேர்த்து சுமார் 2 மில்லியன் பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நிலைமையைக் கட்டுப்படுத்தாவிட்டால் புதிய வைரஸ் தொற்றுரகங்கள் உருவெடுத்து உலகமே பாதிக்கப்படக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்தது.



## 'கணவரை எப்படிக் கொல்வது' என புத்தகம் எழுதியவர் கணவரைக் கொன்றதாகக் கைது

"கணவரை எப்படிக் கொல்வது" என்ற புத்தகத்தை எழுதிய அமெரிக்க எழுத்தாளர் நான்சி கிராம்ப்டன் புரோபி கணவனை கொன்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 63 வயதான தனது கணவர் டேனியல் புரோபியை துப்பாக்கியால் சுட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

71 வயது கிரேம்ப்டன் புரோபி பணப் பிரச்சினையில் சிக்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அவரது கணவனின் பெயரில் பல காப்பீடுகள் இருந்ததாகவும் அவர் இறந்தால் மொத்தம் 1.4 மில்லியன் டொலர் வழங்கப்படும் என்றும் அரசுத்தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

சமையல் வல்லுநராக வேலைசெய்த டேனியல் புரோபி சமையல் கல்லூரியின் வகுப்பு ஒன்றின் வெளியே கொல்லப்பட்டார். கிட்டத்தட்ட அதே நேரம் கிரேம்ப்டன் புரோபி சமையல் கல்லூரி வெளியே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிரேம்ப்டன் புரோபி வைத்திருந்த அதே வகை துப்பாக்கியைக் கொண்டு தான் அவர் கொல்லப்பட்டார்.

ஆனால் தமது துப்பாக்கி காணாமல்போய் விட்டதாக கிரேம்ப்டன் புரோபி கூறினார். நிதி நெருக்கடியிலும் 10 காப்பீடுகளுக்கு அவர் தொடர்ந்து பணம் செலுத்திவந்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 20 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

20 முதல் 25 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.34 |
| லுஹர் | 12.08 |
| அஸர் | 03.32 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் வைகாசி 6

ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

**ஜூன் வரை தேவையான எரிபொருள் கையிருப்பில்**

# பெற்றோல் தட்டுப்பாடு விரைவில் முடிவுக்கு

**இன்று அல்லது நாளை நிலைமை வழமைக்கு திரும்பும்**

**பரீட்சை எழுதும் மாணவருக்கு போக்குவரத்து பிரச்சினை இருக்காது**



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அடுத்த எரிபொருள் கப்பல் வரும் வரை காத்திருக்காத வகையில் தேவையான எரிபொருளை களஞ்சியப்படுத்தக் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். எரிபொருள் கப்பலொன்று (18) வந்துள்ளது.

அத்துடன் இன்று (20) இந்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் 'சொர்ணமாலா' என்ற கப்பல் நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

அதேவேளை மார்ச் (28) ஆம் திகதி கப்பலொன்று வந்துள்ளது. கைவசம் டொலர் இல்லாமையினால் அதற்கான டொலரை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எரிபொருளுடன் சில கப்பல்கள் வந்துள்ளதுடன் தொடர்ந்தும் சில கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

06

# வாக்குகளால் செய்ய முடியாததை வன்முறை மூலமாக செய்ய ஜே.வி.பி.முயற்சி

**சபையில் சமல் ராஜபக்ஷ சாட்டை**



**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

வாக்குகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாததை வன்முறை மூலம் பெற்றுக் கொள்ளலாமென்ற எதிர்பார்ப்பிலேயே ஜேவிபி செயற்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொறுமை இல்லாத நிலையே அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு காரணமென தெரிவித்த அவர், மக்களை உசுப்பிவிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நாடு தீக்கிரையாக வழிவகுத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளதுடன் அனைவரும் இணைந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே அவசியமாகும். மக்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து புதிய பிரதமரின் கீழ் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக கட்சி பேதங்களைக் கடந்து நாம் சிந்திக்க வேண்டும்.

அரசியலில் சூழ்நிலைக்கேற்றவாறு விட்டுக் கொடுப்புகளும் அவசியம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

06



குணசிங்கபுர பிரதேசத்தில் நேற்று படையினர் எரிவாயு சிலிண்டர்களை பொதுமக்களுக்கு விநியோகித்த போது பிடிக்கப்பட்ட படம். இதில் பிரதேசவாசிகள் பலர் எரிவாயுவைப் பெறுவதற்காக வரிசையில் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# இரு ஊடகவியலாளர்களின் கைபேசிகள் பறிக்கப்பட்ட சம்பவம்; சபையில் அறிவிப்பு

**வீடியோ எடுத்ததாலேயே குழப்பநிலை**



**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

பாராளுமன்றத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற இரு ஊடகவியலாளர்களின் கைபேசிகள் பறிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சபாநாயகர் தனது முடிவை நேற்று சபைக்கு அறிவித்தார்.

இது தொடர்பில், தான் விசாரணை நடத்தியதாகவும் அனுமதி வழங்கப்படாத பகுதியில் வீடியோ செய்ததாலேயே இந்த குழப்ப நிலை உருவானதாகவும் ஊடகவியலாளர்கள் வழிகாட்டல்களை முறையாக பேண வேண்டுமெனவும் அவர் கோரினார். இது தொடர்பில் நேற்று விஷேட அறிவிப்பொன்றை

06

# நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பித்தாலும்: ஒன்றரை வருடம் எடுக்கும்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

தலைகளை மாற்றி அமைக்கப்படும் அரசாங்கத்தை சர்வதேசம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு ஒன்றரை வருட காலம் எடுக்கும். ஒழுங்கு பத்திரத்தில் இடம் பெற்றிருந்தபோதும் அதனை உடனடியாக எதுவும் செய்ய முடியாதென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த (09) இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் (09) நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள், சர்வதேச ரீதியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதனால் சர்வதேச ரீதியில் எமது நாடு நம்பிக்கை இழந்துள்ளது.

அன்றைய தினம் அலரி மாளிகையிலிருந்தே இந்த வன்முறை வெடித்துள்ளது. அமைதியான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது.

06

# G.C.E.O/L பரீட்சை திங்கள் ஆரம்பம் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

**3,844 நிலையங்களில் 5,17,496 பேர் தோற்றுகின்றனர்**

நெருக்கடியான சூழலிலும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் (23) திங்கட்கிழமை தொடக்கம் ஜூன் (01) வரை நடைபெறுகிறது.இதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் தயார்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ. தர்மசேன தெரிவித்துள்ளார்.

ஆணையாளர் இதுதொடர்பாக (18) அரசாங்கதகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடத்திய கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினார். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.இங்கு அவர் தெரிவித்ததாவது,

பாடசாலை விண்ணப்பதாரிகள் 4,07,129 பேரும் 1,10,367 தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கலாக மொத்தம் 5,17,496 விண்ணப்பதாரிகள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இதற்கென 3,844 பரீட்சை நிலையங்கள் மற்றும் 542 ஒருங்கிணைப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தேவையான கடதாசி உள்ளிட்ட ஏனைய பொருட்கள் தற்போது பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.பரீட்சை வினாத்தாள்கள் எதிர்வரும் நாட்களில் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால், பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு பாடசாலையில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் தாமதமானால், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும். பரீட்சைக்காக

06

**புலம்பெயர் மக்களின் உதவிகளுடன்:**

# நாட்டுக்கு தேவையான மருந்துகள், அத்தியாவசியப் பொருட்கள்

**எதிர்க்கட்சி விஷேட வேலைத்திட்டம்**



**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

வெளிநாடுகளில் வசிப்போர் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் உதவியுடன், நாட்டுக்கான மருந்துப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த (09) நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் எதிர்க்கட்சி தமது பங்களிப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் நாட்டில் தட்டுப்பாடு நிலவும் மருந்துப் பொருட்கள் மருத்துவ உபகரணங்கள், பாடசாலை உபகரணங்களை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை எதிர்க்கட்சி நடைமுறைப்படுத்தி வருகிறது.

அத் திட்டத்தின் கீழ்,

06

# ஜனாதிபதி தலைமையில் போர் வீரர்களின் 13 ஆவது நினைவு தின நிகழ்வுகள்

தாய்நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த போர்வீரர்களை நினைவு கூரும் வகையில் நேற்று (19) முற்பகல் ஸ்ரீ ஜயவர்தனபுர போர்வீரர் நினைவுத்தூபியில் (ரணவிரு ஸ்மாரகய) விஷேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உயிர் நீத்த போர் வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது, பிரதம அதிதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டதுடன் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண (ஓய்வு), பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜகத் அல்விஸ், பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், ரணவிரு சேவை அதிகார சபையின் தலைவர் மற்றும் முப்படை அதிகாரிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நாடு 53 பில்லியன் டொலர் கடனில் தனித்து ஒருவரால் பொறுப்பேற்க முடியாது

**அதிகாரத்தைக் கைப்பற்றுவதை விடவும் ஒற்றுமையாக செயற்படுவது அவசியம்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பை கிழித்தெறிந்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென நினைத்தால், நாட்டின் எதிர்காலம் சீரழிவது உறுதியென முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு 53 பில்லியன் டொலரை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

ஒருவர் மட்டுமே அதனை பொறுப்பேற்க முடியாது. நெருக்கடியான சூழ்நிலையில் தவறுகளை சரி செய்து, நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்படுவது அவசியமெனவும் அவர் தெரிவித்தார்.

நாடு பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. 22 மில்லியன் மக்களும் துரதிர்ஷ்டமான நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

ஆனால் ஒருவர் மீது மட்டும் விரல் நீட்டுவது முறையல்ல என்றும் தெரிவித்த அவர், அரசியலமைப்பை கிழித்தெறிந்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்று நினைத்தால், அது நாட்டின் எதிர்காலத்தை சீரழித்து விடும் என்றும் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற கடந்த (09) இடம்பெற்றுள்ள வன்முறை சம்பவங்கள் தொடர்பான சபை

06

**அஹிம்சை வழி போராட்டம்**

# தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்



காலிமுகத்திடலில் அஹிம்சை வழியில் போராட்டம் நடத்திய இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாகவும் அதனை தடுக்க உரிய அதிகாரிகள் தவறியது குறித்தும் உரிய விசாரணை நடத்தி நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார். ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் அவ்வப்போது இவ்வாறான வன்முறைகள் வெடித்திருக்கிறது. இந்த மோசமான கலாச்சாரம் மாற்றப்பட வேண்டும் .குரோதத்தின் மூலம் எந்த தீர்வும் கிடைக்காது என அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன. காலிமுகத்திடலில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஏனைய ஆர்ப்பாட்டங்களை விட மாற்றமானது .அதனை முழு உலகமும் அவதானித்தது. ஆனால் அலரிமாளிகையிலிருந்து வந்த குண்டர்கள் தாக்குதல் நடத்தினர்.

# மே 09 வன்முறைகள்; இதுவரை 1,059 பேர் கைது

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு**

நாடுமுழுவதும் கடந்த (09) இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் நேற்று (19) வியாழக்கிழமை காலை வரை 812 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் மேல் மாகாணத்திலிருந்தே கிடைத்துள்ளன. இம்மாகாணத்தில் மாத்திரம் 455 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன்,தென் மாகாணத்தில் 121 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய நாடு முழுவதும் 1,059 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 452 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. 473 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவை, தொடர்பில்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.83 |
| குவைத் டினார் | 1,188.53 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் வைகாசி மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 18

## குறள் தரும் சிந்தனை



இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்

சோதனைகளை எதிர்த்து வெல்லக் கூடியது, அந்தச் சோதனைகளைக் கண்டு கலங்காமல் மகிழ்வுடன் இருக்கும் மனம்தான்.

# அரசியல் பேதங்களை புறந்தள்ளி விட்டு அபிவிருத்தியில் கவனம் செலுத்துவோம்!

அரசியல் விவகாரங்களில் கவனம் செலுத்துவதைப் பார்க்கிலும் பொருளாதார மீட்சிக்கான விடயங்களிலேயே இலங்கையின் அரசியல்வாதிகளும் சாதாரண பொதுமக்களும் இப்போது அதிக கரிசனை செலுத்த வேண்டியிருக்கின்றது. இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியைப் பற்றிச் சிந்திக்கின்ற எவரும் இதனை ஒப்புக் கொள்வர்.

தாய்நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்ட எமது அரசியல்வாதிகள் இந்த யதார்த்தத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். அரசியல் போட்டாபோட்டிகளில் அவர்கள் தொடர்ந்தும் காலத்தை விரயம் செய்து கொண்டிருப்பார்களானால், எதிர்காலத்தில் அரசியல் செய்வதற்கே நாடொன்று இல்லாமல் போகும் நிலைமை உருவாகக் கூடும்.

நாட்டின் பொருளாதார நிபுணர்கள் பலர் இதுபற்றிய எச்சரிக்கையை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர். மத்திய வங்கியின் ஆளுநரும் கூட இலங்கையின் பொருளாதாரம் ஆபத்தான நிலைமையில் உள்ளதை சமீபத்தில் கவலையுடன் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் எமது அரசியல்வாதிகளில் பலர் அந்த எச்சரிக்கை அறிவிப்பை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவர்களில் பலர் அரசியல் விவகாரங்களிலேயே இன்னும் தமது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரம் இனிமேலும் மோசமடையுமானால் நாம் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து விடுவோமென்ற யதார்த்தத்தை அரசியல்வாதிகள் பலர் இன்னுமே புரிந்து கொள்ளவில்லை. அரசியல் மாத்திரமே அவர்களுக்குத் தேவையாக உள்ளது. எமது அரசியல்வாதிகள் இன்று மக்களுக்கு ஆற்ற வேண்டிய நன்மை ஒன்றேயொன்றுதான்.

அரசியல் மாயையில் இருந்து அவர்கள் முதலில் வெளியே வர வேண்டும். அரசியல் போட்டாபோட்டிகள், அதிகார மோகம் ஆகியவற்றையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு, நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்பதையிட்டும், மக்களின் எதிர்காலம் குறித்தும் அவர்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லையேல் பொருளாதார நெருக்கடியானது மேலும் மோசமடைவதற்கே இடமுண்டு. மக்களை நெருக்கடிக்குள் தள்ளி விட்ட குற்றத்துக்குரிய பாத்திரவாளிகளாக அவர்கள் கணிக்கப்படுவார்கள்.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலைமை குறித்தும், பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான எதிர்கால துரித திட்டங்கள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெளிவுபடுத்தியிருந்தார். புதிய பிரதமராகப் பதவியேற்ற இரண்டாவது நாளன்று ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதுபற்றி விளக்கமளித்திருந்தார். பிரதமரின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருந்து அரசியல்வாதிகள் பலர் பாராட்டுத் தெரிவித்திருந்தனர்.

இலங்கை மக்கள் அனைவரும் ஒரு விடயத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பொருளாதாரப் பின்னடைவைப் பொறுத்தவரை எமது நாடு அதிக தூரத்துக்கு பின்னோக்கித் தள்ளப்பட்டு விட்டது. இன்றைய வீழ்ச்சியானது எமது நாட்டின் வரலாற்றில் முன்னொரு போதும் ஏற்படாததாகும். இந்த வீழ்ச்சிக்கு யார் காரணமென்று ஒருவரையொருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதனால் எதுவித பயனும் எமக்கு ஏற்படப் போவதில்லை. அது காலத்தை மேலும் வீணடிக்கும் செயலாகும்.

பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் நிகழாதவாறு நாம் எம்மைத் திருத்திக் கொள்வதே இன்றைய நிலையில் சமயோசிதம் நிறைந்ததாகும். அது மாத்திரமன்றி பொருளாதாரத்தில் துரிதமாக முன்னேறுவதற்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்துவதே இன்றுள்ள தேவையாகும். இந்த விடயத்தில் இன்னும் அரசியல் பேதங்களை முன்வைத்து முரண்பட்டுக் கொண்டிருந்தால் துன்பங்களே மேலும் தொடர்வதற்கு இடமுண்டு.

பொருளாதார மீட்சியென்பது ஒரே இரவில் நடந்து விடுவதல்ல. பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை எமது நாடு முன்னெடுத்தாலம் கூட, இன்றைய நெருக்கடியானது மேலும் சில காலத்துக்கு தொடருமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். குறிப்பிட்ட சில காலப் பகுதிக்குப் பின்னரே நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக முன்னேறிச் செல்லுமென அவர்கள் கூறுகின்றனர். அதுவரை அர்ப்பணிப்பை மேற்கொள்ள வேண்டியவர்களாக மக்கள் உள்ளனர். மக்களின் சகிப்புத் தன்மையிலும், அரசியல்வாதிகளின் புரிந்துணர்விலும்தான் நாட்டின் பொருளாதார மீட்சி தங்கியுள்ளது என்பதே உண்மை.

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகுந்த ஆற்றலும், அனுபவமும் மிக்கவரெனப் போற்றப்படுகின்றார். அவர் சர்வதேச ரீதியில் நன்மதிப்பும் செல்வாக்கும் பெற்ற ஒரு அரசியல் தலைவராவார். அவர் பதவியேற்றதும் சர்வதேச நாடுகள் வெளியிட்டிருந்த அறிக்கைகள் இதற்குச் சான்றாகும். எனவே இன்றைய நெருக்கடியில் இருந்து மீள்வது பற்றி மாத்திரமே நாம் அனைவரும் தற்போது சிந்திக்க வேண்டும். அரசியல் வன்மமும், போட்டாபோட்டியும் இங்கே தொடருமானால் எமது அழகிய தேசம் மென்மேலும் சீரழிந்து போகுமென்ற யதார்த்தத்தை ஒவ்வொருவருமே புரிந்து கொள்ள வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# ஒஸ்டியோபதி வைத்தியசாலை

# முதுகெலும்பு உபாதை, என்பு, நரம்பு வியாதிகள் அனைத்துக்கும் சிகிச்சையளிக்கும் மத்திய நிலையம்



நாட்டின் நல்வாழ்வுக்கு ஆரோக்கியமான சிறுவர்கள் சந்ததியொன்று அவசியம். இன்று பாடசாலை மாணவர்களிடையே மிக வேகமாகப் பரவி வரும் 'முதுகுத்தண்டு வளைவு' உபாதை ஆரோக்கியமான பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை சீர்குலைக்கிறது. விசேடமாக பாடசாலை மாணவர்கள் கொண்டு செல்லும் அதிக நிறையுடன் கூடிய புத்தகப்பை அவர்களின் கல்விக்கு உதவியாக இருப்பதைக் காட்டிலும் அவர்களின் உடல் நலத்திற்கு பெரும் பாதிப்பாகவே உள்ளது. மேலும் தற்போது காணப்படும் நிகழ்நிலை கல்வி (online studies) காரணமாக இந்த நிலைமை மேலும் அதிகரித்துள்ளமைக்கு காரணம் அவர்கள் தவறான முறையில் அமர்ந்தபடி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும்.

அதனால் இந்தப் பிரச்சினை உள்ளிட்ட என்பு மற்றும் நரம்பு பாதிப்புகளுக்காக மிகவும் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கும் இடம் பற்றி நாம் இந்தக் கட்டுரையில் கவனத்தைச் செலுத்தியுள்ளோம்.

முதுகெலும்பு தொடர்பான அனைத்து நோய்கள் என்பு நோய்கள் மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்களை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பிரபலமான ஒஸ்டியோபதி வைத்திய முறை மூலம் குணப்படுத்தும் இலங்கையில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்திய மத்திய நிலையம் ஒஸ்டியோபதி கிளினிக் நிறுவனமாகும்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் பிரபலமான இந்த ஒஸ்டியோபதி வைத்திய முறையை ஆன்மீக சிகிச்சை முறை, இயற்கை மருத்துவ அறிவியலின் முன்னேற்றத்துடன் கலந்து ஹீலிங்பதி என்னும் புதிய சிகிச்சைமுறையை இலங்கை பேராசிரியர் ஒருவர் உருவாக்கியுள்ளார். அதன் பிரகாரம் ஒஸ்டியோபதி மற்றும் ஹீலிங்பதி சிகிச்சை பரந்த அளவிலான பல நோய்களை குணமாக்கும் திறன் இந்த புதிய வைத்திய முறையில் காணப்படுகின்றது.

## இலங்கையில் அமைந்துள்ள ஒரேயொரு நம்பிக்கையான வைத்திய மத்திய நிலையம் ஒஸ்டியோபதி கிளினிக்

அதன் வரம்பு எவ்வளவு விரிவானதென்றால் குணமாக்க முடியாது எனக் கூறப்படும் பார்க்கின்சன், கவிட் போன்ற நோய்களுக்கும் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கக் கூடியதாக காணப்படுவதோடு, இது இந்த மருத்துவ அறிவியல் பெற்ற பாரிய வெற்றியாகும். தற்போது உலகம் பூராவும் உள்ள இலட்சக்கணக்கான நோயாளிகள் இச்சிகிச்சை முறை மூலம் குணமடைந்துள்ளார்கள். இந்த வைத்திய முறையில் உள்ள விசேட தன்மை என்னவென்றால் எந்தவொரு மருந்தையும் உட்கொள்ளாமலும் மற்றும் சத்திரசிகிச்சையின்றியும் நோய்களுக்கான சிகிச்சை அளிப்பதாகும்.

இதுவரை இலங்கையில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளார்கள். இந்த சிகிச்சை முறை இலங்கைக்கு சில வருடங்களுக்கு முன்னரேயே அறிமுகம் செய்யப்பட்டது. இந்தக் குறுகிய காலத்தில் இலங்கையில் நாலாபுறமும் வசிக்கும் நோயாளிகள் பெருமளவில் குணமடைந்துள்ளதுடன், அவர்களின் முதுகெலும்பு தொடர்பான நோய்கள், மூட்டுவலி, என்பு நோய்கள், உணர்வின்மை, ஒஸ்டியோபொரோசிஸ் நரம்புச் சுருக்கம், மனஅழுத்தம், பார்க்கின்சன், முதுகெலும்பு வளைவு, பக்கவாதம், நரம்பு நோய்கள், தூக்கமின்மை, சோர்வு, குருதி தொகுதி தொடர்பான நோய்கள், தசைநார் இறுக்கம் போன்ற பல நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் குணமடைந்துள்ளார்கள். பாடசாலை மாணவர்களுக்கிடையே மிக வேகமாகப் பரவி வரும் முதுகெலும்பு வளைவு சிகிச்சை இதில் விசேடமாகும்.

அவ்வாறான பிள்ளைகள் பெருமளவு சிகிச்சை பெறுவதோடு பலர் குணமடைந்து வெளியேறியும் உள்ளார்கள். அத்துடன் சமூகத்தில் குறைந்தளவு அவதானத்தைப் பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கும் விஷேடமாக சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது இலங்கையர்களுக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாகும். வெளிநாடுகளில் உள்ள இளைஞர்கள் தங்களது தாய் நாட்டிற்கு வந்து அந்நாட்டில் அவர்கள் பெற்ற சிகிச்சை போன்று அதாவது அதையும் விட சிறப்பாக இங்கு சிகிச்சை பெறும் சந்தர்ப்பம் உள்ளதோடு, அவர்கள் இலங்கையில் கழிக்கும் காலத்தை மிகவும் நலத்துடன் கழிப்பதற்கான சந்தர்ப்பமும் கிட்டியுள்ளது.

ஹீலிங்பதி பற்றிய மருத்துவ அறிவியலை உலகுக்கு அறிமுகம் செய்த இலங்கையரான டொக்டர் பேராசிரியர் சாகர கருணாதிலக்க தலைமையில் மேற்கொள்ளப்படும் இந்த அரிய சேவையானது தற்போது தேசிய மற்றும் வெளிநாட்டவர்களின் பாராட்டுக்கும் விருதுக்கும் பாத்திரமாகியுள்ளது. 'லயன்ஸ் கழகம்', அகில இலங்கை தஹம் சுவந்த மன்றம் உள்ளிட்ட பல அமைப்புகள் தேசமானிய மற்றும் புகழ் பெற்ற கௌரவ விருதுகள் பலவற்றால் கௌரவிக்கப்பட்ட பேராசிரியருக்கு 'அனைத்து மக்களினதும் ஒருங்கிணைந்த அமைப்பு' மூலம் 'வைத்திய வித்யா கீர்த்தி' என்னும் கௌரவ விருது அண்மையில் வழங்கப்பட்டது. இங்கிலாந்தின் இரண்டு நைட் பதவிகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்த வைத்திய முறை மூலம் இலட்சக்கணக்கான நோயாளிகளை குணப்படுத்தியதற்காகவே இவ்விருதுகள் அளிக்கப்பட்டன. அது அவரின் உயரிய பணிக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகும்.

ஒஸ்டியோபதி கிளினிக் நிறுவனத்தின் மூலம் மேலுமொரு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதரவற்ற நோயாளிகளுக்கான தொண்டர் சேவையாகும். மதகுருமார்கள் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் கலைஞர்களை மிகவும் கருணையுடன் நோக்கும் பேராசிரியர் மதகுருமார்களுக்கும் இராணுவ வீரர்களுக்கும் இலவசமாக சிகிச்சை அளிப்பதோடு ஆதரவற்ற நோயாளிகள் மற்றும் கலைஞர்களுக்கு சலுகை விலையில் சிகிச்சை அளிக்கிறார். அத்துடன் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது ஒஸ்டியோபதி கிளினிக்கின் கிளையொன்று மாத்தறை மிரிஸ்ஸ பிரதேசத்திலும் திறக்கப்பட்டுள்ளது. மாத்தறை பிரதேச மக்களுக்கு அது ஒரு ஆறுதலான விடயமாகும்.



**ஹீலிங்பதி பற்றிய மருத்துவ அறிவியலை உலகுக்கு அறிமுகம் செய்த இலங்கையரான மருத்துவ பேராசிரியர் சாகர கருணாதிலக்க தலைமையில் மேற்கொள்ளப்படும் இந்த அரிய சேவையானது தற்போது தேசிய மற்றும் வெளிநாட்டவர்களின் பாராட்டுக்கும் விருதுக்கும் உள்ளாகியுள்ளது**

### டொக்டர்கள் மற்றும் குணமடைந்தவர்களின் சில கருத்துகள் பின்வருமாறு:

**Dr. Thilini Dayarathna (M.B.B.S)**




I am doctor tilini Dayarathna. I came to professor Sagar Karnathilake, 3 months ago. I had back pain and scoliosis for 14 years. I suffered immensely. I fed up of everything my paining was venished soon after I got treatments. All the others recommended medicines and surgeries now I am spending normal life. This is fine treatment system I recommended it for anyone I thank full for doctor for curing all illnesses that I had.

**டொக்டர் விஜயன் (MBBS)**
இரத்தினபுரி



எனக்கு மோசமான முதுகு வலி காணப்பட்டது. நான் நாட்டில் பிரபலமான வைத்தியர்களிடம் சென்றேன். ஆனால் எதுவித பயனும் இல்லை. என் நண்பர் ஒருவர் கூறியதால் டொக்டர் சாகரவிடம் சென்றேன். முள்ளந்தண்டில் L4, L5 நரம்பு இறுக்கம், வலது காலில் காணப்பட்ட பலவீனம், கெண்டைக்கால் தசை இறுக்கம் என்பவற்றிற்கு சிகிச்சை பெற்றுக் கொண்டேன். இப்போது 80% குணமடைந்துள்ளேன். யாராலும் சுகமாக்க முடியாது என்று கூறிய நோயை டொக்டர் குணப்படுத்தியுள்ளார். இவ்வாறான நோயுள்ளவர்கள் டொக்டரை சந்தித்து சிகிச்சை பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**Doctor v.p.c RajaKaruna (M.B.B.S)**
Dip.HA PG Dip.HD Colombo & lecturer



Thank you very much professor Sagara Karunathilaka and his team for giving great relief for my mother who was suffering from a bad backache for more than 10years time . As a doctor, to me it was such a surprise to see mothers improvement with the treatment method which is called "osteopathy and healing Pathy" especially for spinal problem such as backache scocliosis, frozen shoulder & many other conditions.

**டொக்டர் வீரவர்தன**



நான் வசிப்பது இங்கிலாந்தில். எனக்கு பத்து வருட காலமாக கடுமையான தலைவலி காணப்பட்டது. மேற்கத்திய மருத்துவம் மற்றும் ஆயுர்வேத சிகிச்சையும் எடுத்துக் கொண்டேன். ஆனால் குணமடையவில்லை. பின்னர் இணையதளம் ஊடாக இந்த சிகிச்சை பற்றி அறிந்து கொண்டேன். நான் ஐந்து நாட்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டேன். எனக்கு பெருமளவு மாற்றம் தெரிந்தது. கழுத்தில் காணப்பட்ட இறுக்கம் குறைந்து விட்டது. தலைவலியும் ஏற்படவில்லை. நான் இந்த நோயால் மிகவும் வருந்தியவள். என்னை குணமடையச் செய்ததற்காக டொக்டருக்கு நன்றி கூறுகின்றேன்.

**William j Burke,**
DO. Family practice program director, doctors hospital.



ஒஸ்டியோபதி வைத்திய சிகிச்சை முறை சிகிச்சையாளர்பெறும் மேலதிக பயிற்சியாகும். ஒஸ்டியோபதி இரு கைகளாலும் அளிக்கப்படும் சிகிச்சை ஆகும். ஒஸ்டியோபதி வைத்திய முறையானது நோய் அறிகுறிகளை அறிந்து கொண்டு அளிக்கும் முறையாகும். மருந்து மாத்திரைகளை அளிப்பதை விட இரண்டு கைகளாலும் சமநிலையற்ற நிலைமையை சீர்செய்வது மிகவும் சிறந்ததாகும்.

**டொக்டர் பூர்ண கீர்த்தி பெரேரா**
(M.B.B.S), பணிப்பாளர், டொக்டர், ஒஸ்டியோ கிளினிக்



மனித உடலுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத மிகவும் தரமான மற்றும் இயற்கை சிகிச்சை முறையாக ஒஸ்டியோபதி சிகிச்சை முறையை குறிப்பிடலாம் இந்த சிகிச்சை முறை பக்கவிளைவுகளற்றது. மருந்து உட்கொள்ளல் மற்றும் சத்திரசிகிச்சையற்றது. முதுகெலும்பு தொடர்பான அனைத்து நோய்களையும் மற்றும் நரம்பு நோய்களுக்கான உயர் தரத்திலான வெற்றிகரமான சிகிச்சை முறையாக இதனை சந்தேகமின்றி குறிப்பிடலாம்.

**ஒஸ்டியோ கிளினிக் வைத்திய மத்திய நிலையம், மாலபே.**
**531/1 அத்துருகிரிய வீதி, மாலபே.**
**அவசர இலக்கங்கள்:**
**0767333971/0775260401**
**தொலைபேசி இலக்கங்கள்:**
**0112054444/0112054433/0112054499**
**கிளை: மிரிஸ்ஸ மாத்தறை**
**மேலதிக தகவல்களுக்கு:**
**www.osteodr.com என்னும் இணைய தளத்தைப் பார்வையிடவும்.**

இந்திக்க பிரியதர்சன விதான...

# கிழக்கின் குரல்

# பொத்துவிலில் டெங்கு பரிசோதனை; 37 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை

## பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி



(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் சுகாதார வைத்திய திகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 37 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தினையொட்டி கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக் கமைய பொத்துவில் பிரதேசத்தில் புதன்கிழமை (18) பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் விசேட டெங்கொழிப்பு செயலணியி னர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

பருவ மழை பெய்ததையடுத்து பொத்துவில் சுகாதார வைத்தியதி காரி பிரிவில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள் ளதாகவும், இதில் கூடுதலாக கர்ப்பி ணித்தாய்மார்கள், சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித் தார்.

பொத்துவில் சுகாதார வைத்திய திகாரி பிரிவுக்குட்பட்ட 07 கிராம சேவகர் பிரிவுகளில் 367 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கொ ழிப்பு பரிசோதனையின் போதே டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங் களை வைத்திருந்த 37 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவித்தார்.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட் டவர்கள் ஒரு வார காலத்திற்குள் குறித்த இடங்களை துப்புரவு செய்ய வேண்டுமெனவும், மீறுபவர்களுக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் தெரிவித்தார். டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்ப வர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித் தார். பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங் கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளு மாறு கேட்டுள்ளார்.



அட்டாளைச்சேனை நிலாமியா வித்தியாலயத்தில் வித்தியரம்ப விழா அதிபர் எம்.எப். நளீம் தலைமையில் புதன்கிழமை (18) ஆரம்பித்து வைக்கப்பட்ட போது.
(படம்;பாலமுனை தினகரன் நிருபர்)



சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் தரம் 1 க்கு மாணவர்களை வர வேற்கும் வித்தியாரம்ப விழா, அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது.
(படம்;சாய்ந்தமருது விசேட நிருபர்)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; திருக்கோவிலில் அனுஷ்டிப்பு



(திருக்கோவில் தினகரன் நிருபர்)

முள்ளிவாய்க்கால் 13வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கஞ்சி வழங்கி ஆத்மசாந்திப் பிரார்த்தனை கள் மற்றும் நினைவுப் பேருரை என்பன திருக்கோவிலில் புதன்கி ழமை (18) இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந் தலானது திருக்கோவில் பிரதேச பொது மக்களின் ஏற்பாட்டில் திருக்கோவில் ஆதார வைத்தியசா லைக்கு அருகில் பிரதான வீதியில் இடம்பெற்றது.

இதன்போது இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகளின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனைகள் மற்றும் நினைவுப் பேருரைகள் என்பன இடம்பெற் றதைத் தொடர்ந்து கஞ்சி வழங்கி அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நினைவேந்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருக்கோ வில் பிரதேச சபை தவிசாளர் இ.வி. கமலராஜன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே.ஜெயசிறில், திருக் கோவில் பிரதேச சபை உறுப்பினர் களான கே.காந்தரூபன், வீ.ஜெயச் சந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசனின் செயலாளர் கண் ணதாசன், கட்சி ஆதரவாளர்கள் உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மூதூர் பிரதேசத்தில் டெங்கு சோதனை



தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் புதன்கிழமை (18) வீடுகள் தோறும் டெங்கு பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. புதன்கி ழமை (18) முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு விசேட வாரமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இச்செயற்பாடு முன்னெடுக்கப்படு வதாக மூதூர் சுகாதார வைத்தியதி காரி முகைதீன் பாவா ஹில்மி தெரி வித்தார் .

இதன் போது மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு, ஆலோசனை களும் வழங்கப்பட்டமை குறிப்பி டத்தக்கது. டெங்கு பரிசோதனை நடவடிக்கையில் மூதூர் சுகாதார பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், கடற் படையினர் உள்ளிட்டோர் ஈடுபட்டி ருந்தனர். மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வருடத்தில் மாத்திரம் 176 டெங்கு நோயாளர் கள் இனங்காணப்பட்டுள்ளதாக, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட ஆலம் குலம் எனுமிடத்தில் டிப்பர் வாகன மொன்று செவ்வாய்க்கிழமை (17) வேக கட்டுப்பாட்டையிழந்து வாய்க்காலுக்குள் குடைசாய்ந்து கிடப்பதைக் காணலாம். (படம்;பாலமுனை தினகரன் நிருபர்)

# தம்பலகாமத்தில் நினைவேந்தல் அனுஷ்டிப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்



முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை (18) திருகோணமலை தம்பலகாமத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் நான்கு வாசல் கோயில் முன் றலில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கான அகவணக் கம் செலுத்தப்பட்டு பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. மக்கள் கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக காணாமல் போன உறவுகளுக்காக கூட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

# அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அஸ் – ஸபாவில் சாதனை விழா



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பள்ளிக்குடியி ருப்பு அஸ் ஸபா கனிஷ்ட வித்தியா லயத்தின் 5 வது சாதனை வருடத்தை நோக்கிய வைபவம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் எஸ்.எம்.லாபீர் தலைமையில் புதன் கிழமை (18) பாடசாலை சிரேஷ்ட ஆசிரியர் திருமதி ஏ.பீ. சுபீன் தலை மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர்களான ஏ.ஜீ. பஸ்மில், ஏ.எம். ஹஸீம், ஏ.எஸ். அஹமட் கியாஸ் உள்ளிட்டோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண் டனர். ஆரம்பப் பிரிவு உதவிக்கல் விப் பணிப்பாளர் எஸ். அம்ஜத்கான் கௌரவ அதிதியாகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.பாயிஸ், அக்கரைப்பற்று பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் முகம்மத் உவைஸ் விசேட அதிதிகளாகவும், நிந் தவூர் மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.ஏ.நபீல், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். அப்துல் கனி முன்னாள் அதிபர் அஷ் சேய்க் கே.ஏ.எல். நைஸர் அதிதிகளா கவும் கலந்து கொண்டனர்.

இதன் போது இவ்வாண்டு தரம் 1 இற்கு இணைப்புச் செய்யப்பட்ட மாணவர்களுக்கு பிரதம அதிதி அக் கரைப்பற்று வலயக் கல்வி அலுவல கத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர்க ளான ஏ.ஜீ.பஸ்மி உட்பட கௌரவ விசேட மற்றும் ஏனைய அதிதிகளால் வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



(காரைதீவு குறூப் நிருபர்)

முள்ளிவாய்க்கால் அவலத்தின் 13ஆவது நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை (18) காரைதீவில் இடம்பெற்றது .

தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசா ளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் காரைதீவு பொதுச் சந்தை கட்டிடத்திற்கு முன்னால் இடம்பெற்றது. முதலில், அங்கு நெய்விளக்கு ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதன்பின்பு கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப் பட்டது. இந் நிகழ்வில், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப் பினர் சிவஞானம் ஜெயக்குமார், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்க ளான திருமதி.சி.ஜெயராணி, ச. சசி குமார், தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரமுகர் தா.பிரதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



அட்டாளைச்சேனை T B ஜாயா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்ப நிகழ்வில், ஆசிரியர் அருஸீனா மாணவன் எம்.ஆர்.மஹி தியிக்கு ஏடு தொடக்கி வைக்கப்படுவதையும், மாணவர்கள் வரவேற்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படம்; கே.எம்.எம்.சபீக்)

# ஏறாவூரில் பெண்களுக்கு பிரத்தியேக நூலகம் திறந்துவைப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்

ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட் டில் பெண்களுக்கான பிரத்தியேக நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ள தாக நகர சபைத் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

ஏறாவூரில்தான் பெண்களுக் கான தனியான பொதுச் சந்தை யும் உள்ளது. அதேபோல் பெண் களுக்கான தனியாக உடற்பயிற்சி ஏற்பாடுகளும் ஏறாவூர் வாவிக்க ரையோரத்தில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். பாத்திமா மகளிர் நூலகம் என்ற பெயரில் ஆரம் பிக்கப்பட்டுள்ள இந்த வாசிகசாலை திறப்பு விழா செவ்வாய்க்கிழமை (17) ஏறாவூர் வாவிக்கரையோரத்தில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில், ஏறாவூரின் பெண் ஆளுமைகளான பிரதேச செயலா ளர் நிஹாறா, ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி ஷாபிறா, பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப் பாளர் சிஹானா, தென்னைப் பயிர்ச் செய்கை ஆய்வுகூடப் பொறுப் பாளர் ஜாஹிறா நகர சபை உறுப் பினர் சுலைஹா உட்பட ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.எச். எம். ஹமீம், நகர சபை பிரதித் தவி சாளர் ஏ.எஸ்.எம். றியாழ் உட்பட இன்னும் பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

## கோதுமை மாவின்...

அறிவித்துள்ளது. கோதுமை மாவின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அடுத்த வாரம்முதல் சகல பேக்கரி உணவு உற்பத்திகளும் நிறுத்தப்படுமென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பேக்கரி உணவு உற்பத்திகளுக்கான சகல மூலப்பொருட்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளதால், சிறு மற்றும் மத்தியதர பாண் உற்பத்தி பேக்கரிகள் தமது உற்பத்திகளை முழுமையாக நிறுத்திவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்நிலையில், 04 ஆயிரம் ரூபாவுக்கும் குறைந்த விலையில் விற்கப்பட்ட கோதுமை மா மூடையொன்றின் விலை தற்போது 12 ஆயிரம் ரூபாவாகவும் 37.5 கிலோ எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 20,000 ரூபாவாக அதிகரித்துள்ளதெனவும் ஜயவர்த்தன சுட்டிக்காட்டினார்.

## G.C.E.O/L பரீட்சை ... (03ஆம் பக்கம் பார்க்க)

மேற்கொள்ளப்படும் விரிவுரைகள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் இன்று (20) நள்ளிரவு 12 மணியுடன் நிறுத்தப்படவேண்டும்.

பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் மற்றும் அடையாள அட்டைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரம் கிடைத்தவுடன் அதனைச் சரிபார்த்துக்கொள்ளவேண்டும். திருத்தப்பட வேண்டுமாயின் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளத்தின் மூலம் திருத்தியமைத்துக் கொள்ளல் வேண்டும். பின்னர் திருத்தப்பட்ட பிரதி அச்சிடப்பட்டு,அதனை அனுமதிப்பத்திரத்துடன் இணைத்து பரீட்சை மண்டபத்தில் பிரதான பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்து பரீட்சையில் தோற்றமுடியும்.

கொவிட் 19 பெருந்தொற்று இன்னும் நிலவுகின்றமையால், பரீட்சை நிலையங்களில் சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிக்கு பரீட்சை நிலையத்தில் விஷேட ஏற்பாடு செய்யப்படும். விஷேடதேவையுடைய மாணவர்கள் 590 பேர் இம்முறை விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## பெற்றோல் தட்டுப்பாடு ... (03ஆம் பக்கம் பார்க்க)

அதன்படி எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதன்மூலம் அடுத்தக் கப்பல் வரும் வரையில் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும் பிரதமர் குறிப்பிட்டார். அதேவேளை, எரிபொருள் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்வது சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலைமை தொடர்பில் உரையாற்றும் போதே, அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜூன் மாத நடுப்பகுதி வரை நாட்டுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது.இந்த வார இறுதியில் பெற்றோல் தட்டுப்பாடு வழமைக்கு திரும்பும். எதிர்க்கட்சியினர் சிலர் கூறுவதைப்போன்று க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு போக்குவரத்து தொடர்பான பிரச்சினை ஏற்பட சந்தர்ப்பமிருக்காது.

எரிபொருள் நெருக்கடிகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் அதேவேளை, அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

## வாக்குகளால் செய்ய... (03ஆம் பக்கம் பார்க்க)

அதேவேளை, கடந்த (09) திகதி நடைபெற்ற காலிமுகத்திடல் சம்பவத்தில் பொலிஸாரும் தமது கடமையை நிறைவேற்றத் தவறியுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது.பெருமளவிலான அரசியல்வாதிகளின் வீடுகள்,வாகனங்கள் பஸ்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. எமது வீடுகளும் சொத்துக்களும் அளிக்கப்பட்டுள்ளன. நாம், 1932 ல் இருந்து அரசியல் செய்பவர்கள். மிக நேர்மையான அரசியல் செய்பவர்கள். அதனால்தான் இன்றும் அப்பகுதி மக்கள் எமக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரு ஊடகவியலாளர்களின்... (03ஆம் பக்கம் பார்க்க)

வெளியிட்ட அவர், இச்சம்பவம் தொடர்பாக நான் படைக்கள சேவிதருக்கு வழங்கிய அறிவுறுத்தலின்படி, பாராளுமன்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு என்னிடம் அறிக்கை சமர்ப்பித்தனர்.

17052022 அன்று காலை குழு அறை எண். 01 இல் நடைபெற்ற அரசாங்கக் கட்சிக் கூட்டத்துக்குப் பின்னர். காலை 10.00 மணியளவில் வந்து கொண்டிருந்த எம்.பி.க்களை இருவர் வீடியோ எடுத்துள்ளனர்.

இந்நடவடிக்கையில் அதிருப்தியடைந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், இருவருடைய இரண்டு கைத்தொலைபேசிகளையும் கைப்பற்றி, சபைக்குள் வந்து, சம்பவம் தொடர்பில் விளக்கமளித்ததுடன், இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்கள் இருவரும் பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பாக செய்தி திரட்ட வந்த பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் என தெரியவந்துள்ளது. எம்.பிக்களின் கருத்துக்களை பதிவு செய்ய குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில், அவற்றை பெற படைக்கள சேவிதரின் அனுமதியை பெற வேண்டும்.

இந்நிலையில், அவ்வாறான விஷேட அனுமதி எதுவும் பெறப்படாததால், இரு ஊடகவியலாளர்களும் அனுமதியற்ற இடத்தில் இருந்து பணியை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## நம்பிக்கையில்லா ... (03ஆம் பக்கம் பார்க்க)

அலரி மாளிகைக்கு வந்தவர்களே இந்த தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.சிலர் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்துவதை காணமுடிந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு தூபமிட்டுள்ளனர்.இது சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் வரலாற்றில் இதுவரை எந்த அரசாங்கமும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளவில்லை. இம்முறை நாட்டின் ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானங்களே, இந்த வங்குரோத்து நிலைக்கு காரணமாகியுள்ளது.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டு வந்தபோது அவரது எவரதும் யோசனைகளை பெற்றுக் கொள்ளவில்லை. சபாநாயகர் அதில் பங்காளர் என்றே நான் குறிப்பிட விரும்புகின்றேன். நிலையியற் கட்டளையை நிறுத்தி அவர் செயற்பட்டுள்ளார்.

அதனால் இப்போது பாராளுமன்றத்திற்கு 05 சதவீத அதிகாரங்கள் கூட இல்லாமல் போயுள்ளது. பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் நியமனங்கள் கூட அரசியல்வாதிகளின் விருப்பப்படியே நடக்கிறது. சட்ட மாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலையாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு 35 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற சில காலங்களில் மனித உரிமை ஆணைக்குழுவில் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ளது.

## நாட்டுக்குத் தேவையான ... (03ஆம் பக்கம் பார்க்க)

இதுவரை 138 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் 153 இலட்சம் ரூபா பெறுமதியான கணினி உட்பட கல்வி உபகரணங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது இருதய நோய்க்கான மருந்துகளை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடு 53 பில்லியன் டொலர்... (03ஆம் பக்கம் பார்க்க)

ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

நாட்டில் 1956,1971, 1983, 1988 1989 காலங்களில் அழிவுகள் ஏற்படாதிருந்திருந்தால், நாடு தற்போது பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கும்.

இன்று நாடு எதிர்கொண்டுள்ள நிலைக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும். எவரும் கை கழுவி விட்டுச் செல்ல முடியாது.

கடந்த இரண்டு வருட கால செயற்பாடுகளே, இதற்கு காரணமென எவராவது சொன்னால் அது பெரும் விந்தையாகும்.

அதேபோன்று எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அரசியலமைப்புக்கிணங்கவே அதனை மேற்கொள்ள வேண்டும்.அதை மீறி செயற்பட்டால் எவருக்கும் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாமல்போகும். பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம் எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் 225 பேரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். அப்போதுதான் நாம் இணைந்து சர்வதேச முன்னிலைக்கு செல்ல முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மே 09 வன்முறைகள்; ... (03ஆம் பக்கம் பார்க்க)

புதன்கிழமை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 176 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 66 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 60 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா...

மாவட்டம் புதுக்குடியிருப்பு கடற்கரையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்லமுற்பட்ட 21 பேரே வியாழக்கிழமை(19) அதிகாலை புதுக்குடியிருப்பு கடற்கரையில் வைத்து கைது செய்யப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து இரண்டு இயந்திரப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, புதன்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் விசேட அதிரடிப்படையினர் புதுக்குடியிருப்பு கடற்கரையில் சுற்றிவளைத்தனர். இதன்போது இரு படகுகளில் அவுஸ்திரோலியாவுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு தயாராகிய 04 பெண்களும் ,17 ஆண்களுமாக, 21 பேர் கைதானதுடன் இரு படகுகளும் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் திருகோணமலை மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைதாகியுள்ளனர்.



தாய்நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த போர்வீரர்களை நினைவு கூரும் வகையில் நேற்று (19) ஸ்ரீ ஜயவர்தனபுர போர்வீரர் நினைவுத்தூபியில் (ரணவிரு ஸ்மாரகய) விஷேட நிகழ்வு நடத்தப்பட்டது. இங்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதை காணலாம்.

## பாராளுமன்றத்துக்கு மஹிந்த...

முன்னாள் ஒருங்கிணைப்பு செயலாளர் கீதாநாத் காசிலிங்கம், மஹிந்த ராஜபக்ஷ கொழும்பிலிருப்பதாகவும், சமூக வலைதளங்களில் கூறப்படுவது போல் ஹெலிகொப்டரில் அவர் பாராளுமன்றுக்கு வரவில்லையென்றும் வீதி வழியாகவே அவர் பாராளுமன்றத்துக்கு வந்ததாகவும் கூறினார்.மேலும் சமூக ஊடகங்களில் வெளியான புகைப்படம் பழையது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சமையல் எரிவாயு விநியோகம்...

நேற்றுமுன்தினம் 2, 800 மெற்றிக்தொன் எரிவாயு தாங்கிய கப்பல் ஒன்று நாட்டுக்கு வந்திருந்தபோதும், சீரற்ற வானிலை காரணமாக அதிலிருந்து எரிவாயுவை தரையிறக்குவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து, கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டு, அதிலிருந்து சமையல் எரிவாயு தரையிறக்கப்பட்டதுடன், தாங்கி ஊர்திகள் ஊடாக கெரவலப்பிட்டிக்கு கொண்டு செல்லப்பட்டது. இதனால் திட்டமிட்டப்படி நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவிருந்த எரிவாயு விநியோகம் தடைப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் 8,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலைகளுக்கு...

ஆண்டுக்கான முதலாம் தவணை விடுமுறை இன்று வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு ஏற்கனவே தெரிவித்திருந்தது. இந்நிலையிலேயே, முதலாம் தவணை விடுமுறை நேற்று முதல் ஆரம்பமாவதாக கல்வி அமைச்சு பின்னர் அறிவித்துள்ளது. இரண்டாம் தவணை கற்றல் செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 06ஆம் திகதி மீள திறக்கப்படவுள்ளன.

## மானிய விலையில் எவருக்கும்...

தெரிவித்த அவர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் சமூகத்தில் தவறான கருத்து நிலவுவதாக தெரிவித்தார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு அநீதி இழைத்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படமாட்டாதெனவும் குறிப்பிட்டார். சந்தை விலையை விட குறைந்த விலைக்கு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் எந்த காலத்திலும் எம்.பிக்களுக்கு வழங்கப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படமாட்டாதெனவும் அமைச்சர் தெரிவித்தார். பொலிஸ் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எம்.பிக்களுக்கு குறைந்த விலையில் எரிபொருள் வழங்கப்படுவதாக சமூக வலைத்தளங்களில் தெரிவிக்கப்படுவது குறித்து நேற்று சபையில் எதிரணி எம்.பிக்கள் குற்றம்சாட்டினர். இதற்குப் பதிலளித்த அமைச்சர், சில ஊடகங்கள் தவறான செய்தி வெளியிட்டதாகவும் எரிபொருள் நிரப்பு நிலைய இயந்திரம் பழைய விலையை காண்பித்தாலும் கூடுதல் விலையே அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எம்.பிக்கள் பாராளுமன்றம் வருவதற்காக பொலிஸ் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்குமாறு சபாநாயகர் கோரியிருந்தார். ஆனால் எம்.பிகளுக்கு விஷேட சலுகை வழங்குவதை பொதுமக்கள் எதிர்க்கும் நிலையில், இந்த முடிவு தவறானதெனது எதிரணியினர் தெரிவித்திருந்தனர். மக்களின் விரக்தி மற்றும் கோபத்தை புரிந்துக் கொள்ள முடிகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் எரிபொருள் வழங்கப்படுவதாக வெளியாகும் தகவல் பொய்யானது. தற்போது சந்தையில் ஒரே விலையிலேயே எரிபொருள் வழங்கப்படுவதாகவும், எந்த தரப்பினருக்கும் மானிய விலையில் எரிபொருள் வழங்கப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

## வெளிநாட்டு நாணயங்களை...

எவரேனும் பரிசாக வழங்கிய, தனது உடைமையில் உச்சபட்சமாக வைத்திருக்கக் கூடிய 15,000 டொலர் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தை 03 மாதங்கள் வரையே அவ்வாறு தனது உடைமையில் வைத்திருக்க முடியுமெனவும், அதன் பின்னர் தனது வெளிநாட்டு நாணயக் கணக்கிலோ அல்லது சாதாரண கணக்கிலோ வைப்பிலிட வேண்டுமென அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக கறுப்புச் சந்தையில் காண்பிக்கப்படும் இலாப நிலையை கருத்திற் கொண்டு, பொதுமக்கள் வெளிநாட்டு நாணயங்களை சேமிக்க ஆரம்பித்துள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார். இவ்வாறு வெளிநாட்டு நாணயங்கள் பாரியளவில் சேமிக்கப்படுவதை தடுத்து, அவற்றை பெற்று தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய இறக்குமதித் தேவைக்காக பயன்படுத்துவதே இந்நடவடிக்கையின் நோக்கமென கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தற்போது டொலர் விலை குறைவடைந்து வருவதாலும், கையிருப்பில் வைத்திருக்கக்கூடிய உச்சபட்ச வெளிநாட்டு நாணயத் தொகையை 10,000 டொலராக குறைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாலும், இவ்வாறு தங்களது கையிருப்பில் வெளிநாட்டு நாணயங்களை வைத்திருப்போர் அவற்றை வங்கிகளில் வைப்பிலிடுவதற்கான சரியான தருணம் இதுவே என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, இவ்வாறு வெளிநாட்டு பணத்தை வைத்திருப்பவர்கள் அந்தப் பணத்தை வங்கியிலுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கில் டொலராக வைப்பிலிடவோ அல்லது அந்தப் பணத்தை ரூபாவாக மாற்றி ரூபாவில் வைத்திருக்குமாறும் குறிப்பிட்ட அவர், இந்நடவடிக்கைக்காக 02 வார கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். அதன் பின்னர் அவ்வாறு கைப்பற்றப்படும் பணத்துக்கு, அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அபராதம் விதிக்கவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். இது ஏற்கனவே உள்ள சட்டம் என்பதோடு, அதனை தற்போது இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் விடயமே தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும், அவற்றில் மேலும் இறுக்கங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்த அவர், அண்மையில் பல்வேறு இடங்களில் அதிக தொகையிலான வெளிநாட்டு நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டமையும் சுட்டிக்காட்டினார்.

## தலவாக்கலையில்...

பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆங்காங்கே மண்சரிவுகளும் இடம்பெற்றுள்ளன. தலவாக்கலை ஹேமச்சந்திரா மாவத்தை பகுதியில் நேற்று (19) காலை 6.30 மணியளவில் தொடர் குடியிருப்பு தொகுதியின் பின்புறத்தில் 50 அடி உயரத்திலுள்ள மதில் சரிந்து விழுந்ததில் நான்கு குடியிருப்புகள் சேதமாகியுள்ளன.

இதன்போது, ஒரு வீட்டில் இருந்த 53 வயதுடைய தாய் ஒருவருக்கு கைகளில் காயங்கள் ஏற்பட்டது. இதனால், அவர் உடனடியாக தலவாக்கலை தோட்ட மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளார். அத்தோடு, கர்ப்பிணித் தாயொருவர் எவ்வித ஆபத்துக்களுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

அத்தோடு வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதோடு,பெறுமதிமிக்க பொருட்களும் மண் மேட்டில் புதைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.இப்பகுதியில்,தொடர்ந்து மழை பெய்வதால் மண் சரிவு அபாயங்களும் ஏற்பட்டுள்ளன.

மேலும், பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நுவரெலியா பிரதேச செயலகம் மற்றும் தலவாக்கலை பொலிஸார், நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஜனாதிபதியின் அலுவலகம்...

வேண்டுமென லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார். யுத்தம் நிறைவடைந்து சமாதானம் நிலைநாட்டப்பட்ட போதும் நாட்டில் முன்னேற்றம் ஏற்படவில்லையென்று தெரிவித்த அவர் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்காக ஒத்துழைக்க தயார் என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கி சபை ஒன்று உருவாக்கும் யோசனையை வரவேற்ற அவர், புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதாக இருந்தால், அமைச்சுப் பதவிகளுக்காக எதிரணி எம்பிக்களை பலி எடுப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரையில் எந்த தவறும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், அதன்பின்னர் சிலர் ஆதரவாளர்களை தூண்டிவிடும் வகையில் உரையாற்றியதாக குற்றஞ்சாட்டினார்.

வன்முறையை தடுக்க தவறியது தொடர்பில் பொலிஸ்மா அதிபரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தென்னகோனும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பிரதம நீதியரசருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், நிறுவனங்களை குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

இவை தவறான முன்மாதிரிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கனேடிய பாராளுமன்றத்தில்...

குற்றச்சாட்டை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. இலங்கை தொடர்பான பாராளுமன்ற பிரேரணை, உத்தியோகபூர்வ கருத்துக்கு முரணாகவுள்ளது.

கனேடிய அரசாங்கம், இனப்படுகொலை நடந்ததாகக் கண்டறியவில்லை. இலங்கை, கனேடிய அரசாங்கத்திற்கு உண்மையான நிலைமை தொடர்பாக உயர் மட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

இந் நிலையில், இலங்கை அதன் நல்லிணக்க செயல்முறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

அது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதுபற்றி கனேடிய அரசாங்கத்திற்கு தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது. இனப்படுகொலை என்ற வார்த்தைக்கு குறிப்பிட்ட சட்டபூர்வ அர்த்தங்கள் இருப்பதாகவும் அரசாங்கம் மீண்டும் வலியுறுத்துகிறது.

## கோபா குழு முதலாவது...

விதாரணவினால் இன்று(20) பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கப்படவுள்ளது. 2021.08.04 முதல் 2021.11.19 வரையான காலப் பகுதியில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட 07 அரச நிறுவனங்கள் மற்றும் ஒரு விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பான விசாரணை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சமூக அபிவிருத்தித் திணைக்களம், மதுவரித் திணைக்களம், குருநாகல் மாநகர சபை, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், சுற்றாடல் அமைச்சு மற்றும் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விநியோக பிரிவினால் மேற்கொள்ளப்படும் மருத்துவ விநியோகங்கள், விநியோக முறை தொடர்பில் 2018 மார்ச் 14 ஆம் திகதியிலான கணக்காய்வாளர் நாயகத்தின் விஷேட கணக்காய்வு அறிக்கை தொடர்பாக விசாரணை செய்யப்பட தகவல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## கடும் வங்குரோத்து நிலையில்...

வெளியிடும்போதே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள பணவீக்கம் 21.5 சதவீதம் என்ற போதிலும், அவரது அளவீடுகளின்படி உண்மையான பணவீக்கம் 132 சதவீதம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்மைய, அதிகாரபூர்வ பணவீக்க விகிதத்தை விட உண்மையான பணவீக்க விகிதம் 06 மடங்கு அதிகமாக உள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய உயர் பணவீக்கம் ஒரு பொருளாதாரப் பேரழிவு. இதனால் பணக்காரர்களை விட ஏழைகள் அதிகம் பாதிக்கப்படுவதுதான் இங்கு உண்மையான பிரச்சினையென பேராசிரியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறானதொரு, சூழ்நிலையின் இறுதியில் அரசியல் பிரச்சினையே உருவாகுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் தற்போதைய நிலவரப்படி நாடு வங்குரோந்து நிலையை அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. அடுத்து வரும் நாட்கள் மிகவும் மோசமானதாக இருக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## புதிய அமைச்சர்களுக்கு

இதனை தெரிவித்தார். அது தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் அதேவேளை, அமைச்சர்கள் நியமனம் தொடர்பிலும் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அமைச்சர்களாக நியமிக்கப்படுவோர், சம்பளத்தை பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அதேபோன்று அமைச்சர்களுக்கான சலுகைகளை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## ஒரு இறாத்தல்...

பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையை அதிகரித்துள்ளமை காரணாமாக இவ்வாறு பேக்கரி பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

## நான்கு பெண்களின்...

இடம்பெற்றுள்ளது. அடாவத்தை பெருந்தோட்டப் பிரிவில் தேயிலை பறிக்கும் வேளையில் ஈடுபட்டிருந்த பெண் தொழிலாளர்கள் மீது, மரமொன்றிலிருந்த குளவிக் கூடு கலைந்து, பெண் தொழிலாளர்களை கொட்டியுள்ளன.

இச்சம்பவத்தில், பலர் குளவிக் கொட்டுக்கு இலக்கான போதிலும், ஆபத்தான நிலையிலுள்ள நான்கு பெண் தொழிலாளர்களே, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாத பலர் ஆரம்ப சிகிச்சைகளைப் பெற்று வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திரவ பால் உற்பத்தியில் கிளிநொச்சி மாவட்ட தேவைகளுக்கு முன்னுரிமை

## எஞ்சிய பாலை வெளிமாவட்டங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை

பரந்தன் குறூப் நிருபர்



கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பால் உற்பத்தியை மாவட்ட மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் மேம்படுத்துவதற்கு கால்நடை வளர்ப்போருக்கான விசேட கலந்துரையாடலில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போருடனான விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் மாவட்ட செயலக மண்டபத்தில் அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது

கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களத்தின் கால்நடை மருத்துவர்கள், கால்நடை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், மாவட்ட மற்றும் மாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட பல அதிகாரிகளுடன், மாவட்டத்தின் முன்னணி கால்நடை வளர்ப்போர், உள்ளூர் மற்றும் தனியார் பால் சேகரிப்பாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது மாவட்டத்தின் பால் உற்பத்தி தொடர்பாக ஆரம்பத்தில் கவனம் செலுத்தப்பட்டதோடு பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், மாவட்டத்துக்குள்ளே வசிக்கும் மக்களுக்கு கிடைக்கூடிய வகையில் பால் விநியோகத்தை மேம்படுத்துதல் தொடர்பிலும் தனியார் பால் கொள்வனவாளர் மாவட்டத்தின் தேவைக்கு மிஞ்சியதையே வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லும் வகையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து கால்நடை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ளும் பால் சேரிப்பு, விநியோகம், பெறுமதிசேர் உற்பத்திகள் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளிலும் எதிர்நோக்கப்படும் சவால்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதோடு அவற்றுக்குத் தீர்வுகாண எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. அத்தோடு மேலும் கால்நடைகளுக்கான தீவனங்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ளசவால்கள்குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. கால்நடைத் தீவனமாக புல் உற்பத்தியில் ஈடுபடுவதுடன், அதிலிருந்து சைலேஜ் எனப்படும் கால்நடைத் தீவன உற்பத்தியிலும் கால்நடை வளர்ப்போர் கவனம் செலுத்தவேண்டும் என இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தொடர்ந்து அதிகளவு எண்ணிக்கையான பண்ணை வளர்ப்போர் எதிர்கொள்ளும் மேய்ச்சல் தரவைப் பிரச்சினை தொடர்பாக இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. கனகாம்பிகைக்குளம் பகுதியில் ஏற்கனவே மேய்ச்சல் தரவைக்கென ஒதுக்கப்பட்ட காணியை உரிய தேவைக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டதுடன், பூநகரி பள்ளிக்குடா மற்றும் முழங்காவில் பிரதேசங்களிலும் மேய்ச்சல் தரவைக்கான ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதேவேளை, பெரும் எண்ணிகையில் கால்நடை வளர்ப்போர் அதனை ஒரே இடத்தில் பட்டியாக அடைத்து வளர்ப்பதன் மூலம் கால்நடை கழிவுகளிலிருந்து தரம் வாய்ந்த சேதன உரத்தயாரிப்பில் ஈடுபடும் சாத்தியப்பாடுகள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இவை தவிரவும், புறவேலித் திட்டம், மேய்ச்சல் தரவைகளுக்குள் அத்துமீறிய பயிர்ச்செய்கை, ஆற்றுப் படுக்கை, ஒதுக்கீட்டுக் காணிகளை மேய்ச்சல் தரவையாக பயன்படுத்த ஏற்பாடு செய்தல், கால்நடைகளுக்கான காப்புறுதி, வீதிகள் மற்றும் புகையிரதப் பாதைகளில் கால்நடைகள் விபத்துக்குள்ளாவதை தடுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பயிர்ச்செய்கையாளர்களுடன் இணைந்து முடிவு எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக இணைந்த கூட்டமொன்றை எதிர்காலத்தில் நடத்துவது எனவும், தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் கால்நடை வளர்ப்போருக்கான கூட்டங்களை நடாத்துவது என்றும் இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கருகம்பன் கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்



கரவெட்டி தினகரன் நிருபர்

வடமராட்சி, மந்திகை கருகம்பன் கிராம மக்களால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்று பருத்தித்துறை நீதிமன்றம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி கடைக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த 16 வயதுடைய கரகம்பன், மந்திகை, புலோலியை சேர்ந்த ஜெயச்சந்திரன் அனுஜன் என்ற மாணவன் அதே இடத்தை சேர்ந்த நபர் ஒருவரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார். இவர் தற்சமயம் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார். மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பொலிஸ் விசேட பிரிவினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

இதன்போது அங்கு கூடிய மக்கள் சந்தேக நபர் ஏற்கனவே பாரிய குற்றச் சாட்டில் பிணையில் விடுதலை செய்யப்பட்டவரென தெரியவந்துள்ளது. இந்நிலையிலேயே மாணவன் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவருக்கு பிணை வழங்க வேண்டாம் எனக் கோரியே அமைதியான முறையில் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாக சபை தெரிவு

யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் – கொழும்பு வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாகச்சபை தெரிவும் நடைபெறும்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டு:

# வாராந்த சிறப்புச் சொற்பொழிவும், நாயன்மார் குருபூஜை நிகழ்வும்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சிவஸ்ரீ பால.திருகுணானந்தக்குருக்கள் (ரொறன்ரோ, கனடா) அவர்களின் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகின்றன.

20 ஆவது சொற்பொழிவு நிகழ்வு உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில், இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெயமதி செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வும்' எனுந் தொனிப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேலின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. 19 ஆவது சொற்பொழிவு நிகழ்வு நயினைதீவு நாகபூஷணி அமுதசுரபி இந்து அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று பி.ப.2.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா தவசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது .

'நாவலர் பெருமானின் சைவ வாழ்வு' எனுந் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் ச.நவநீதன் சொற்பொழிவு ஆற்றுவார். யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும். ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச் சொற்பொழிவினை சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

திருஞானசம்பந்தர் நாயனார் குருபூஜை நிகழ்வு கோண்டாவில் கைலாசநாதர் வேதசிவாகம அறநெறிப் பாடசாலையில் எதிர்வரும் 22.05.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நகுலா ரபேந்திரராசா தலைமையில் நடைபெறும். யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், ஜப்பான் கக்சுஜின் பல்கலைக்கழக முன்னைநாள் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் பிரதம விருந்தினர்களாகவும் கௌரவவிருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். 'ஞானக்குழந்தை' எனுந் தொனிப்பொருளில் ச.நவநீதன் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

# 4ஆவது கொவிட் 19 தடுப்பு மருந்தேற்றும் திட்டம் ஆரம்பம்

யாழ். விசேட நிருபர்

வடமாகாணத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நான்காவது மேலதிக கொவிட் 19 தடுப்பு மருந்தேற்றும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தடுப்புமருந்தேற்றும் திட்டம் தொடர்பாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்திக்குறிப்பில், கொவிட்19 தடுப்பு மருந்தேற்றும் திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்பு பிரச்சினை உள்ளவர்களுக்கும் மேலதிகமாக நான்காவது தடவையாக கொவிட் 19 தடுப்பூசியானது (பைசர்) இவ்வாரம் முதல் வழங்கப்படவுள்ளது.

மேற்கூறப்பட்டவர்களில் ஏற்கனவே கொவிட்19 தடுப்பூசியை மூன்று தடவைகள் பெற்றுக்கொண்டு மூன்று மாதம் நிறைவுற்றவர்கள் மட்டுமே இத்தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இத்தடுப்பூசியானது அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார வைத்திய அதிகார பணிமனையில் வழங்கப்படும்.

கொவிட்19 மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய நான்காவது தடுப்பூசியினை (பைசர்) பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் சுகாதார அமைச்சானது நாடு முழுவதும் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்பு பிரச்சினை உள்ளவர்களுக்கும் இத்தடுப்பூசியினை நான்காவது தடவையாக வழங்க முடிவு செய்துள்ளது.

எனவே வடமாகாணத்தில் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் மேற்கூறப்பட்ட 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்பு பிரச்சினை உள்ளவர்களுக்கும் இத்தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

20 வயதுக்கு மேற்பட்டவர்களில் பின்வரும் நோய் நிலைமையுள்ளவர்களுக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட உள்ளது.

நோய் எதிர்ப்புக் குறைபாட்டு நிலைமை நோயினாலோ அல்லது நோய்க்குரிய சிகிச்சையினாலோ ஏற்பட்டவர்கள், நாட்பட்ட சிறுநீரக தொகுதியுடன் தொடர்புடைய நோய்நிலைமைகள், திண்ம அங்கங்கள் (சிறுநீரகம், ஈரல், சுவாசப்பை போன்றவை) மற்றும் என்புமச்சை அல்லது ஸ்டெம் செமாற்று அறுவை சிகிச்சைக்குட்பட்டவர்கள், புற்றுநோய் உடையவர்களில் அதற்கான சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் அதற்குரிய சிகிச்சையினை நிறைவு செய்தவர்கள், மண்ணீரல் இல்லாதவர்கள் மற்றும் மண்ணீரல் தொழிற்பாட்டு பிரச்சினை உடையவர்கள், வேறு ஏதாவது நோய் நிலைமைகளினால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த நிலையில் உள்ளவர்கள் என சிகிச்சையளிக்கும் பொது வைத்திய நிபுணரால் தடுப்பூசிக்காக பரிந்துரைக்கப்படுபவர்கள்.

# கடும் காற்று காரணமாக 3 குடும்பங்கள் பாதிப்பு, ஒருவர் உயிரிழப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழில் வீசிய கடும் காற்று காரணமாக மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழில் நேற்று புதன்கிழமை வீசிய காற்று காரணமாக மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டதோடு ஒருவர் உயிரிழந்துள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என் சூரிய ராஜா தெரிவித்தார்.

யாழில் வீசிய கடும் காற்றினால் கோப்பாய் நல்லூர் காரைநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் ஜே 286 கிராம சேவையாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நல்லூர் ஜே 97 கிராம சேவையாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரைநகர் ஜே 41 கிராம சேவையாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சடலம் மீட்பு

பரந்தன் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பாண்டியன்குளம் பகுதியில் கிணற்றுக்குள் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஐயாத்துரை துரைரட்ணசிங்கம் (65) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

குடும்பஸ்தர் நீண்ட காலமாக தனிமையில் வாழ்ந்து வந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நட்டாங்கண்டல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


திகதி 18.05.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4759 — ரூ. 9,061,450.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,387,927.00 — L 1 5 6 9 3 4
ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0068 — ரூ. 5,211,760.00 — கடகம் 32 54 55 61 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,572,044.20
தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 789 — ரூ. 3,863,020.00 — J 15 28 39 68 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,529,918.40
ஜாதிக சம்பத — அச்சிடப்பட்ட திகதி 11.05.2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1245 — ரூ. 1,966,800.00 — வெற்றி இலக்கங்கள் 7 8 1 1 3 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,271,455.60
Mega POWER மெகா பவர் 25+ — சீட்டிழுப்பு இலக்கம் 1107 — ரூ. 3,632,680.00 — ரூ. 251,625,382.00 — Y 20 14 16 22 72 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00
National Lotteries Board — Web : www.nlb.lk

# பதுக்கல்: ஓர் இஸ்லாமிய நோக்கு

வாங்குதல், விற்றல், சந்தையின் இயல்பான போட்டி நிலை போன்ற விடயங்களில் இஸலாம் தனிமனித சுதந்திரத்தை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் சில தனி மனிதர்களின் பேராசையை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. அத்தகைய ஒன்று தான் அடுத்தவர்களுக்கு தேவை இருக்கும் போது, தீங்கிழைக்கும் விதமாக, பொருட்களைப் பதுக்கி விலையை அசாதாரணமான முறையில் உயர்த்தி, அதிக இலாபம் பெற்றுக்கொள்ளும் செயற்பாடாகும். இவ்வாறு பொருட்களைப் பதுக்குவதை இஸ்லாம் தடுத்துள்ளது.

***'நிச்சயமாக நாம் உங்களை அகிலத்தாருக்கு அன்பாக, அருளாகவே அனுப்பினோம் (ஆதாரம்: அன்பியா 107)*** என்று அல்லாஹ் நபி (ஸல்) அவர்களைப் பற்றி குறிப்பிடுகிறான். ***'நிச்சயமாக நான் அன்பைப் பரிசாக பெற்றவன்'*** என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஹாகிம், தபரானி, பைஹகி)

ஒருவன் அன்புள்ளவனாக இருப்பதன் மூலம் இறையன்பை பெற்றுக் கொள்ள முடியும். ***'இரக்கமாக நடந்து கொள்பவர்களை ரஹ்மானும் (அன்பாளன், அல்லாஹ்) நேசிப்பான். பூமியில் இருப்பவர்களுக்கு அன்பு காட்டுங்கள். வானத்தில் உள்ளவன் உங்களுக்கு அன்பு காட்டுவான்'*** என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதி)

இந்த நபிமொழிகளின் ஊடாக முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர், மனிதன், மிருகம் என்ற வேறுபாடின்றி அனைத்து படைப்புகளுடனும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும் என்பதனைப் புரிந்துகொள்ளலாம்.

அந்த வகையில் ஒரு வியாபாரியுடைய முழு எண்ணமும் முயற்சியும் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்வதுடன் மாத்திரம் சுருங்கி விடலாகாது. மனிதாபிமானம் நிறைந்த ஒரு சந்தையைக் கட்டியெழுப்புவதே இஸ்லாத்தின் நோக்கமாகும். இந்த அடிப்படையில்தான் பதுக்கலை இஸ்லாம் ஹராம் ஆக்கியுள்ளது. சந்தையின் சகட ஓட்டத்துக்கு ஏற்ப விலையைத் தீர்மானிக்கவிடாது பொருட்களின் விலையைக் கூட்டுவதற்காக பொருட்களை பதுக்குவதையே இது குறித்து நிற்கிறது.

பதுக்கல் என்பது 'மனிதர்களும், அரசுகளும், உயிரினங்களும் கடுமையான தேவையில் இருக்கும் போது பணம், பொருள், பயன், பணி போன்றவற்றை அதன் பற்றாக்குறை காரணமாக வழமைக்கு மாற்றமாக விலை அதிகமாக உயரும் வரை, அவற்றை வழங்காது தவிர்ந்து கொள்வதை அல்லது பதுக்குவதை குறிக்கும்'

அதாவது மனிதர்களுக்கு அவசியமானவற்றை வழங்காது தடுத்துக்கொள்வதே பதுக்கல் ஆகும். உணவுப்பொருட்கள், ஆடைகள், மருத்துவம், மாத்திரைகள், கருவிகள் போன்ற பொருட்களாக மாத்திரமல்லாமல் தொழில்வாண்மை, போக்குவரத்து, மருத்துவம் போன்ற சேவைகளாகவும் கூட இது அமையலாம். இவை மனிதனுக்கு மிக அவசியமானவை. அவற்றை பெற்றுக்கொடுப்பது வாஜிப் (மிக அவசியம்) ஆகும்.

அதேநேரம் ஒரு பொருள் பற்றாக்குறையாக இல்லாத நிலையில் அவற்றை சேமிப்பது மார்க்க ரீதியாகத் தடுக்கப்பட்டதல்ல. ஆனால் பதுக்கல் மனிதர்கள், நாடு, உயிரினங்களுக்கு தீங்கு விளைப்பதன் காரணமாகவே இஸ்லாம் அதனை ஹராமாக்கியுள்ளது. இங்கு மிருகங்களைக் கூட உள்ளடக்கியிருப்பது இஸ்லாத்தின் சிறப்பம்சத்தை எடுத்துக்காட்டுகின்றன. அதாவது அத்தியாவசியத் தேவை (ழரூரிய்யாத்) தேவைகளை (ஹாஜிய்யாத்) நிறைவேற்றுவது இஸ்லாத்தின் நோக்கங்களில் ஒன்றாகவும் கடமையுமாக விளங்குகிறது. அதனால் தேவைகள் பூர்த்தியடைவதற்கு தடையாக அமைவது தடுக்கப்பட்டவையாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ***'பொருட்களை பதுக்குபவன் பாவியாவான்'*** என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம், அபூ தாவூத், திர்மிதி, இப்னு மாஜா)

பாவியைத் தவிர வேறு யாரும் பொருட்களைப் பதுக்க மாட்டார்கள். பாவி என்ற சொல் ஒரு மென்மையான சொல் அல்ல. அது ஒரு கடுமையான சொல். பிர்அவ்ன், ஹாமான், அவர்களை சார்ந்த கொடூரமானவர்களை குர்ஆன் இத்தகைய சொல்லைப் பயன்படுத்தி கண்டிக்கிறது.

***'பிர்அவ்ன், ஹாமான், அவர்களை சார்ந்தவர்கள் பாவிகளாக இருந்தார்கள்'***

***(கஸஸ் 08)***

இதேவேளை பதுக்குபவன் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, ***'யார் உணவுப் பொருட்களை நாற்பது இரவுகள் பதுக்கி வைக்கிறாரோ அவனை விட்டும் அல்லாஹ் நீங்கிக் கொள்கிறான். அவனும் அல்லாஹ்வை விட்டு நீங்கி விடுவான் என்றுள்ளார்கள்.***

(ஆதாரம்: அஹ்மத்)

மஃகல் இப்னு யஸார் (ரழி) அவர்களின் மரணத்தருவாயில் உமையா கவர்னரான உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் (ரழி) அவர்கள் சுகம் விசாரிப்பதற்காக வந்தார்கள். அப்போது அவர் மஃகல் (ரழி) யிடம் 'நான் ஹராமான முறையில் மக்களின் இரத்தத்தை ஒட்டியுள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா? என்று கேட்க, 'எனக்கு அப்படி தெரியாது' என்றார்கள். மீண்டும் 'முஸ்லிம்களுடைய விலை என்ற விடயத்தில் நான் தலையீடு செய்துள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா? என்று கேட்க, 'எனக்கு அப்படி தெரியாது' எனக்கூறிவிட்டு, என்னை 'உட்கார வையுங்கள்' என்றார்கள். அவரை அமர்த்தி வைத்த போது 'உபைதுல்லாவே செவிமடுங்கள்' என்று கூறி, நான் நபிகளாரிடம் பலமுறை செவிமடுத்த ஒரு விடயத்தை கூறுகிறேன் என்றார்கள். அதாவது, ***'விலையை அதிகரிப்பதற்காக யார் செயல்படுகின்றாரோ அவரை அல்லாஹ் நரகில் மிக கடுமையான இடத்தில் அமர்த்துவான்'*** என்றார்கள்.

(ஆதாரம்: முஸ்னத் அஹ்மத், தபரானி)

மேலும் 'யார் நாற்பது தினங்கள் உணவை பதுக்கி வைக்கிறாரோ அவரது உள்ளம் கடுமையாகிவிடும்' என்று அலி(ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது அவனது உள்ளம் இறுகிவிடும். கருனை, இரக்கம், அன்பு போன்ற தெய்வீக பண்புகள் நீங்கிவிடும். பதுக்கல் செய்பவனின் உள்ளம் கடுமையாகப் பல காரணங்கள் துணை புரிகின்றன. அவன் தனது நலனை மாத்திரமே பார்க்கிறான். சமூகத்துக்கு ஏற்படும் தீங்கை நோக்குவதில்லை. விலைகுறையும் போது கவலைப்படுவான், கூடும் போது மகிழ்ச்சியடைவான். அவனது உள்ளத்திலிருந்து அன்பு நீங்கி விடுவதும் அந்த இடத்தை கடும்போக்கு பிடித்துக்கொள்வதும் ஆச்சரியமானதல்ல. ஒருவனிடம் அன்பு எடுபட்டு போவது ஒரு தண்டனையாகும். எனவே மக்கள் தேவையுடன் இருக்கும் போது பதுக்குபவனிடம் சுயநலனும் அன்பு இல்லாத வரண்ட போக்கும் ஏற்படுவது இயல்பானது. அவன் தனது மாளிகையை மனிதர்களின் எலும்புக்கூடுகளின் மீதுதான் அமைத்துக்கொள்கிறான். அவன் பல்லாயிரக்கணக்கானவர்களின் இரத்தத்தை உறிஞ்சுகின்றவன்.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள், ***'பதுக்குபவன் மிக மோசமானவன். விலைகள் குறைவடைவதை காணும் போது கவலைப்படுவான். விலை உயர்வதை காணும்போது சந்தோஷமடைவான்*** என்றார்கள்.

(ஆதாரம்: தபரானி, பைஹகி)

மற்றொரு தடவைக் குறிப்பிடும் போது, **பொருட்களைக் கொஞ்சம் கொஞ்சமாக சந்தைப்படுத்துபவன் வாழ்க்கை வசதிகள் ரிஸ்க் வழங்கப்படுகிறான். மக்களுக்கு தேவையிருந்தும் பதுக்கி வைத்திருந்து ஒரேயடியாக சந்தைக்கு போடுபவன் சபிக்கப்பட்டவனாவான்** என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: இப்னு மாஜா, தாரமி)

இவ்வாறான பின்னணியில் உணவுப் பொருட்களை பதுக்குவது தான் ஹராம். ஏனைய பொருட்களை பதுக்கலாம் என்று நினைப்பது மிகவும் தவறானதாகும். மனிதர்களுக்கு தேவையுள்ள நிலையில் எந்தவொரு பொருளைப் பதுக்குவதும் ஹராம். அது உணவுப் பொருட்களாகவோ உடை, மருத்துவம், வீட்டுபொருட்கள், பாடசாலைக்கு தேவையானவை, சேவைகள் உள்ளிட்ட அனைத்தும் அடங்கும். அதனால் மனிதனுக்கு பயன்படும் பொருட்களைப் பதுக்குவது பாரிய அளவில் தீங்குகளை ஏற்படுத்தும். மனிதனின் தேவை உணவு மாத்திரமல்ல, மாறாக உண்ணல், பருகல், வாழ்தல், கற்றல், மருந்துசெய்தல், இடம் பெயர்தல், தொடர்புகொள்ளுதல் போன்ற அனைத்துடனும் தொடர்புபடுகின்றது.

மனிதர்களுக்கு தீங்கு ஏற்படும் விதமாக பதுக்கப்படும் அனைத்தும் பதுக்கல் என்ற வட்டத்தில் வரும். மனிதனின் தேவை அதிகரிக்க அதிகரிக்க பாவத்தின் பாரதூரம் அதிகரித்து செல்லும். இதில் மிக பிரதானமானது அத்தியாவசிய பொருட்களாகும்.

மக்களின் வாழ்க்கைப் போக்கு மாறிவிட்டன. மானுட தேவைகள் வளர்ந்துள்ளன. ஒரு காலத்தில் ஆடம்பரமாக கருதப்பட்ட விடயங்கள் இன்று அத்தியாவசியமாக மாறிவிட்டன. இன்று அவசியமாக கருதப்படும் விடயங்கள் நாளை அத்தியாவசியமான தேவையாக மாறலாம். அதனால் மனிதனுக்கு தேவை இருக்கும்போதும் பொருளுக்கு பற்றாக்குறை இருக்கும் போதும் பதுக்குவது முற்றிலும் பிழையான செயற்பாடு என்பது தெளிவாகிறது.

**யூ.கே றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

---

# பொறுமையின் மகத்துவம்

'ஸப்ர்' என்றால் பொறுமை என்று பொருள்படும். அவசரம், கோபம், பதட்டம், பேராசை மற்றும் பழிக்குப்பழி போன்ற தீய குணங்களை அடக்கும் ஆற்றல் கொண்ட பலம் பொருந்திய ஓர் உயர் பண்பே பொறுமையாகும். எனவேதான் நபி(ஸல்) அவர்கள் **மல்யுத்தத்தில் வெற்றி பெறுபவன் உண்மையான வீரன் அல்ல கோபத்தின் போது தன்னை அடக்கிக் கொள்பவனே உண்மையான வீரனாவான்'** என்றார்கள்.

(ஆதாரம்: புகாரி)

பொறுமையின் சிறப்பு பற்றி அல்குர்ஆனும் அல்ஹதீஸும் சிலாகித்துச் குறிப்பிடுகின்றன. ***பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடத்தில்) உதவி தேடுங்கள். (ஸூரா பகரா : 45)***

***எங்கள் இறைவனே எங்கள் மீது பொறுமையை அதிகரிக்க செய்வாயாக. (உனக்கு) முற்றிலும் வழிப்பட்டவர்களாக (எங்களை ஆக்கி) எங்களை நீ கைப்பற்றிக்கொள்வாயாக.***

***(ஸூரா அல் அஃராப் : 126)***

***நாம் உங்களை அச்சம், பட்டினி மூலமும் செல்வம், உயிர், விளைச்சல் ஆகியவற்றில் இழப்புக்களை ஏற்படுத்துவதன் மூலமும் சோதிப்போம். நபியே பொறுமையாளர்களுக்கு நன்மாராயம் கூறுங்கள். பொறுமையாளர்கள் யாரெனில் அவர்களுக்கு ஏதும் துன்பம் நிகழ்ந்தால் நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள் அவனிடமே மீள்பவர்களாகவும் உள்ளோம் என்று கூறுவார்கள்***

***(ஸூரா பகரா : 155-156)***

***முஃமின்களின் காரியங்கள் ஆச்சரியத்தை தருகின்ற அனைத்தும் அவனுக்கு சிறப்பாகவே முடிவுறுகின்றன. முஃமின் அல்லாத வேறு எவருக்கும் அவ்வாறு வாய்ப்பதில்லை. அவனுக்கு மகி ழ்ச்சி ஏற்பட்டால் நன்றி செலுத்துவான். அது அவனுக்கு சிறந்த முடிவைக் கொடுக்கின்றது. துன்பம் நேர்ந்தால் பொறுமை கொள்வான் அதுவும் அவனுக்கு சிறந்த முடிவை கொடுக்கின்றது.***

(ஆதாரம்: முஸ்லிம்)

பொறுமை ஒரு கேடயம். அதற்குரிய நன்மை சுவர்க்கம் என்பது நபிமொழியாகும்..

இவ்வாறு பொறுமை பற்றி ஏராளமான அல்குர்ஆன் அல் ஹதீஸ் காணப்படுகின்றன. எல்லா நிலைகளிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது மிகவும் சிறப்பானதாகும்.

பொறுமை கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உள்ளன. அவ்வப்போது ஏற்படும் நிகழ்வுகளுக்கு ஏற்ப பொறுமை கொள்வது அவசியமாகும். கோபம் வரும் போது அடக்கிக் கொள்ளல், பேராசை வருகின்ற போது போதுமாக்கிக் கொள்ளல், சோதனைகள் வரும் போது தாங்கிக் கொள்ளல், பாவத்தின் பக்கம் உள்ளம் ஈர்க்கப்படும் போது தவிர்ந்து கொள்ளல், நற்காரியங்களில் சோர்வு ஏற்படும் போது திட உறுதியாய் இருத்தல், இழப்புக்கள் ஏற்படும் போது பொருட்படுத்தாமல் நிற்றல், வாழ்க்கைச் சுமைகள் அதிகரிக்கும் போதுதாங்கிக் கொள்ளல், பழிக்குப் பழி உணர்வு ஏற்படும் போது மன்னித்தல், விருப்புக்கு மாறான முடிவுகளை கேட்கும் போது ஏற்றுக்கொள்ளல் ஆகியன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடைபிடிக்கும் பொறுமையானது மனிதனுக்கு அவனது வெற்றிப்பாதையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. அதனால் தான் நபி(ஸல்) அவர்கள், **பொறுமை ஓர் ஒளி** என்றார்கள் (ஆதாரம்: முஸ்லிம்).

தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ், குர்ஆன் திலாவத், திக்ர், இறைவனின் படைப்புக்கள் பற்றிய சித்தனை போன்றன ஆன்மாவை சுத்தப்படுத்தக்கூடிய இஸ்லாம் காட்டித்தரும் பயிற்சிகளாகும். இப்பயிற்சிகள் வெற்றியளிக்கும் போது மனிதன் உயர்ந்த ஆன்மீக பண்புகளை வெளிப்படுத்துவான். இப்பண்புகளை அல்குர்ஆன் அல் ஹதீஸும் பாராட்டுவதுடன் அதனை கடைபிடிக்குமாறும் போதிக்கின்றன. இப்பண்புகளில் பொறுமையும் ஒன்றாகும். எனவே எமது வாழ்வில் பொறுமையைக் கைக்கொண்டு வெற்றி பெற்றிட முயற்சிப்போம்.

மௌலவி :
**எம்.யூ.எம் வாலிஹ்...**
(அல்-அஸ்ஹரி) வெலிகம.

---

# பொது நிதி குறித்து உமர் (ரழி)

உமர் (ரழி) அவர்களது புதல்வர்களான அப்துல்லாஹ்வும் உபைதுல்லாஹ்வும் ஒரு முறை ஈராக்கை நோக்கிச் செல்லும் படையில் சென்றிருந்தனர். அவர்கள் திரும்பி வரும் வேளையில் பஸ்ராவின் கவர்னரான அபூ மூஸா அல்அஷ்அரீ (ரழி) அவர்களை சந்திக்க நேர்ந்தது. அவர் அவ்விருவரையும் வரவேற்றார்.

'உங்கள் இருவருக்கும் மிகவும் பயனுள்ள எதையாவது என்னால் செய்ய முடியுமாக இருந்தால் செய்வேன்' என்றார். பின்னர் 'இங்கு நான் அமீருல் முஃமினீன் அவர்களுக்கு அனுப்ப வைக்கவிருக்கும் பணம் உண்டு. அதனை நான் உங்களிடம் தருகிறேன். அதனைப் பயன்படுத்தி நீங்கள் ஈராக்கிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு சென்று மதீனாவில் விற்பனை செய்யலாம்.

அமீருல் முஃமினீன் அவர்களுக்கு மூலதனத்தைச் செலுத்திவிட்டு, இலாபத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறினார். நாங்கள் அதனை விரும்புகிறோம் என அவ்விருவரும் கூறினர். எனவே, அவர் அவ்விருவரிடமும் பணத்தைக் கொடுத்தார். உமர் (ரழி) அவர்களுக்கு அவ்விருவரிடமிருந்தும் பணத்தைப் பெறுமாறு ஒரு கடிதத்தையும் கொடுத்தனுப்பினார்.

அவ்விருவரும் ஈராக்கில் பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு வந்து மதீனாவில் விற்பனை செய்து இலாபமீட்டினர். மூலதனத்தை உமர் (ரழி) அவர்களிடம் கையளித்த போது, 'படையிலிருந்த அனைவருக்கும் உங்கள் இருவருக்கும் கடன் தந்தது போல் அவர் கொடுத்தாரா?' என வினவினர். அதற்கு அவ்விருவரும் 'இல்லை என்றனர்'. 'நீங்கள் இருவரும் அமீருல் முஃமினீன் அவர்களின் புதல்வர்கள் என்பதனால் உங்களுக்கு பணம் தந்திருக்கிறார். எனவே, பணத்தையும் இலாபத்தையும் தந்துவிடுங்கள்' என்றார்.

அப்போது அப்துல்லாஹ் (ரழி) மௌனமாக இருந்தார். உபைதுல்லாஹ் (ரழி) 'இப்பணம் குறைந்திருந்தால் அல்லது அழிந்திருந்தால் நாங்கள் அதனை செலுத்த வேண்டி இருந்திருக்கும், எனவே நீங்கள் இவ்வாறு இலாபத்தைக் கோருவது நியாயமற்ற ஒரு விடயம்' அமீருல் முஃமினீன் அவர்களே!' என்றார். அப்போது உமர் (ரழி) அவர்கள் திரும்பவும் 'பணத்தையும் இலாபத்தையும் செலுத்துங்கள்' என்றார். தொடர்ந்தும் அப்துல்லாஹ் (ரழி) மௌனம் சாதித்தார். ஆனால், உபைதுல்லாஹ் (ரழி) திரும்பவும் ஆட்சேபம் தெரிவித்தார்.

அவ்வேளை உமர் (ரழி) அவர்களது அவைத் தோழர்களில் ஒருவர் 'அமீருல் முஃமினீன் அவர்களே! இந் நடவடிக்கையை நீங்கள் கிராழாக (முழாரபா) கருதலாமே!' என்றார்.

அப்போது உமர் (ரழி) அதனை நான் கிராழாக கருதுகிறேன் என்றார். பின்னர் மூலதனத்தையும் இலாபத்தில் பாதியையும் பெற்றுக் கொண்டார். அப்துல்லாஹ் (ரழி), உபைதுல்லாஹ (ரழி) அவர்களும் இலாபத்தில் மீதி அரைப்பங்கைப் பெற்றுக் கொண்டனர். (முவத்தா மாலிக்)

**ஏ.எம்.முஹம்மத் ஸப்வான்...**
சீனன்கோட்டை, பேருவளை.

---

# பெற்றோரை மதிப்போம்

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் மனிதர்கள் பல்வேறு விதமான பிரச்சினைகள், நெருக்கடிகளுக்குள் உழன்று கொண்டிருக்கின்றார்கள். என்றாலும் இத்தகைய நெருக்கடியான சூழலிலும் தம்மைப் பெற்ற தாய் தந்தையரைப் பொறுப்பாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். அது அல்லாஹ்வின் அருளையும் அன்பையும் பெற்றுத்தரக்கூடிய செயற்பாடாகும். அதே நேரம் இறைகட்டளையை மதித்து தமது ஆன்மிக நிலையை வளர்த்து கொள்ளவும் இது மாபெரும் வாய்ப்புமாகவும் அமையும்.

இஸ்லாம் தம்மைப் பெற்றெடுத்த தாய் தந்தையருக்காக பிரார்த்திக்கும்படி மாத்திரம் மனிதனுக்கு கட்டளையிடவில்லை. மாறாக, நம்மைப் பராமரித்து வளர்க்க யாருமில்லாது நிராதரவான நிலையில் குழந்தையாக இருந்த வேளையில் எமது சுகத்துக்காகவும், தேவைகளுக்காகவும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தான் பெற்றோர் ஆவர்.

இதனைக் கருத்தில் கொண்டு பெற்றோர் மீது எல்லையில்லா அன்பும் கருணையும் காட்டும்படி இறைவன் கட்டளையிடுகின்றான். குறிப்பாக, தாயை மதித்துப் போற்றும் வகையில் முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். 'சுவனம் அன்னையின் காலடியில் இருக்கின்றது.'

பெற்றோர் வயது முதிந்தவர்களாகி விட்டால், அவர்களை அன்பு கருணையுடன் நடாத்த வேண்டும். அவர்கள் மீது காட்டும் கருணையினாலும், பரிவினாலும் எந்தவொரு குறையும் ஏற்படப் போவதில்லை. பெற்றோருக்குத் தொண்டாற்றுவதும், சேவை புரிவதும் இஸ்லாத்தில் தொழுகைக்கு அடுத்தப்படியான முக்கியத்துவம் வாய்ந்த கடமையாக போற்றப்படுகின்றது.

மேலும் இத்தகையதொரு சேவையைத் தம் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்ப்பதும் பெற்றோர் பெற்றுள்ள உரிமையும் கூட. முதிர்ந்த வயதின் காரணமாக பெற்றோர் அறிந்தும், அறியாமலும் புரிகின்ற தவறுகளுக்காக அவர்களை குற்றம் சாட்டவோ கடிந்து கொள்ளவோ கூடாது. அது மிகவும் வெறுக்கத்தக்க இழிவான செயலாகும். அவ்வாறான செயற்பாடானது பெற்றோரைப் பிள்ளைகள் தொடர்பில் பெரும் கவலைக்கு உள்ளாக்கக்கூடியதாக அமையும்.

பெற்றோரை 'சீ' என்ற வார்த்தை கொண்டு கூட விழிக்கவோ ஏசவோ அல் குர்ஆன் அனுமதிக்கவில்லை என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் அல் குர்ஆன் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

***'உம் அதிபதி(யாகிய அல்லாஹ்) விதித்துள்ளான், 'அவனைத்தவிர வேறெவரையும் நீங்கள் வணங்காதீர்கள். தாய் தந்தையரிடம் மிக கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். பெற்றோரில் ஒருவரோ இருவருமோ முதுமையை அடைந்து விட்ட நிலையில் உம்மிடம் இருந்தால், அவர்களை 'சீ' என்றுகூட கூறாதீர்!***

***மேலும், அவர்களைக் கடிந்து பேசாதீர்! மாறாக, அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக! மேலும், பணிவுடனும், கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக'***

***மேலும், 'என் இறைவனே! சிறுவயதில் எவ்வாறு என்னை இவர்கள் கருணையுடன் பாசத்துடனும் வளர்த்தார்களோ, அவ்வாறு இவர்கள் மீது நீ கருணை புரிவாயாக! என நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக'***

***(அல் குர்ஆன்: 17:23,24)***

ஆகவே பெற்றோருடனும் மூத்தோருடனும் அன்பாகவும் கருணையாகவும் நடந்து கொள்வதில் ஒவ்வொருவரும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களது மனம் நோகாதபடி தம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவும் தவறக்கூடாது. அவற்றின் ஊடாக அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**அபூ மதீஹா...**




# சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் 151 குடும்பங்கள் பாதிப்பு

**தலவாக்கலை குறூப், மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்**

சீரற்ற காலநிலையினால் நேற்று முன் தினம் (18) வரை நுவரெலியா மாவட்டத்தில் 151 குடும்பங்களைச் சேர்ந்த 518 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்துள்ளார். வெள்ளம், மண்சரிவு மற்றும் பலத்த காற்றினால் இந்த பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 121 பேரும், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் 108 குடும்பங்களைச் சேர்ந்த 350 பேரும், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேரும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிலும் 02 குடும்பங்களைச் சேர்ந்த 06 பேர் ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.மேலும், இயற்கை அனர்த்தம் காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் 53 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் வசிக்கும் மக்கள் அறிவுறுத்தல்களுக்கு அமைய மிக அவதானத்துடன் செயற்படுமாறும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 24வது பேராளர் மாநாடு

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

இலங்கை தோட்ட சேவையாளர் சேவையாளர் சங்கத்தின் 24வது பேராளர் மாநாடு நாளை சனிக்கிழமை (21) காலை 8.00 மணிக்கு கொழும்பு 07இல் உள்ள ஸ்டேன்லி விஜயசுந்தர மாவத்தையில் அமைந்துள்ள மேல்மாகாண அழகியற் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் கண்டி, கேகாலை,அவிசாவெல்ல, இரத்தினபுரி, மத்துகம,தெனியாய, காலி, புசல்லாவ, ஹற்றன், தலவாக்கலை, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களிலிருந்து பேராளர்கள் கலந்துக் கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் சங்கத்தின் புதிய தலைவர், இரு உபத்தலைவர்கள், பொருளாளர், கவுன்சில் அங்கத்தினர்கள் அறுவர் ஆகியோர் தெரிவு செயப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாட்டை சங்கத்தின் பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சிஸ் செய்து வருகிறார்.

# கண்டி மாநகர சபைக்கு சு.க உறுப்பினர் நியமனம்



**(மாவத்தகம தினகரன் நிருபர்)**

கண்டி மாநகர சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஒருவரின் வெற்றிடத்திற்கு கிங்ஸ்லி பிரசன்ன குமார புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டி மாநகர சபை உறுப்பினராக கிங்ஸ்லி பிரசன்ன பதவிப் பிரமாணம் பெற்றுக் கொண்டார்.

இதில் இந்நிகழ்வில் கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், சப்ரகமுவ மாகாண சபை முன்னாள் ஆளுநர், கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிஅமைப்பாள சிவபாலன், ஐ. ஐனூடீன், வஹாப் மாஸ்டர் உள்ளிட்ட கட்சியின் மாவட்ட , தொகுதி அமைப்பாளர்கள், பலர் கலந்து கொண்டனர்.

# தலவாக்கலை பிரதேசத்தில் மண்சரிவு நான்கு வீடுகள் சேதம்; ஒருவர் காயம்





**ஹற்றன் விசேட , ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேமச்சந்திரா மாவத்தை பகுதியில் நேற்று காலை குடியிருப்புக்கு பின்புறத்தில் அமைக்கப்பட்டிருந்து பாரிய 50 அடி உயரத்திலுள்ள மதில் ஒன்று சரிந்து விழுந்ததில் நான்கு குடியிருப்புகள் சேதமாகி உள்ளன. இந்த மண்திட்டு சரிந்து வீழ்ந்ததன் காரணமாக சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. இதனால் வீடுகளில் இருந்த பெருமதி மிக்க பொருட்களும் மண் மேட்டில் புதைந்துள்ளன. பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

சம்பவத்தில் வீட்டில் இருந்த 53 வயதுடைய தாய் ஒருவருக்கு கைகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. அவர் தலவாக்கலை தோட்டத்தில் இயங்கும் மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள ார். இந்த அனர்த்தத்தின்போது கர்ப்பிணித் தாயொருவர் எவ்வித ஆபத்துக்களும் இன்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நுவரெலியா பிரதேச செயலகம் மற்றும் தலவாக்கலை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மலையகத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் பல பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

# பெருந்தோட்ட பகுதிகளில் உரம், விறகு தட்டுப்பாடு; தேயிலை உற்பத்தி பாதிப்பு

**ஹட்டன் விசேட நிருபர்.**



பெருந்தோட்டப்பகுதியில் உரம் மற்றும் விறகு தட்டுப்பாடு காரணமாக தேயிலை உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துவருவதாக பெருந்தோட்டத்துறை நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

எமது நாட்டுக்கு அந்நியசெலாவணியை மிகப்பெரிய அளவில் ஈட்டித்தந்த பெருந்தோட்ட துறை கடந்த காலங்களில் இரசாயன உர இறக்கமதி தடை செய்யப்பட்டதன் காரணமாக பாரிய அளவில் பாதிப்புககுள்ளாகியது. இந்நிலையில் தற்போது டீசல் விலையேற்றம் காரணமாக விறகின் விலை அதிகரித்துள்ளதால் தேயிலை தொழிற்சாலைகள் தேயிலை தூள் தயாரிப்பதில் சிக்கலை எதிர்கொண்டுள்ளது. சில தொழிற்சாலைகளுக்கு போதுமான அளவு விறகும் கிடைப்பதில்லை என்றும் இதனால் தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் தொழிற்சாலை நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். தேயிலை தளிர்களை தேயிலை தூளாக மாற்றும் நடவடிக்கை விறகு மூலமே இன்றும் பல தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த காலங்களில் பெருந்தோட்டங்கயில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளுக்கு ஒரு கனமீற்றர் விறகு 2000 ரூபாவுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டதாகவும் தற்போது ஒரு கனமீற்றர் விறகு 4000 ரூபாவாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகரிக்கப்பட்டும் விறகு பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தேயிலை தொழிற்சாலை பொறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகப்பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளுக்கு கடந்த காலங்களில் யட்டியன் தோட்டை, கித்துல்கலை, பலாங்கொடை, மொரட்டுவ,இரத்தினபுரி உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து விறகு பெற்றுக்கொள்ளப்பட்டன. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக விறகு வியாபாரிகள் தொழிற்சாலைகளுக்கு விறகு விநியோகம் செய்வதனை நிறுத்தியுள்ளனர். தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு பெரும் துணையாக உள்ள பெருந்தோட்டத் துறையை பாதுகாப்பது பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையாகும்.

இரசாயன உரம் இல்லாததன் காரணமாக தேயிலை கொழுந்தின் அளவு பாரிய அளவில் குறைந்து பெருந்தோட்டத்துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேலையில்லா பிரச்சினை ஏற்பட்டது. தற்போது விறகு பற்றாக் குறை காரணமாக தேயிலை தூளின் தரம் குறைந்து சர்வதேச சந்தையில் இலங்கை தேயிலைக்கான கேள்வி குறைந்து வருமானம் பாதிக்கப்படும் நிலை உருவாகும். எனவே இது குறித்து பொறுப்பு வாய்ந்தவர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என தேயிலை உற்பத்தித் துறையினர் கோரிக்கை விடுகின்றனர்.

# பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு எச்சரிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடரு ம் மழை காரணமாக இம் மாவட்டத்தில் பரந்தளவில் மண் சரிவு இடம்பெறலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி குருவிட, எஹலியகொடை, கலவான, எலபாத்த, பெல்மதுளை, எஹலியகொடை, கஹவத்த, நிவித்திகலை, இம்புல்பே, கொடக்கவெல, பலாங்கொடை, கிரியெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் நிலவுவ தாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் அறிவுறுத்தல்களுக்கிணங்க ஒவ்வொரு பிரதேச செயலக இடர் முகாமைத்துவ மற்றும் கிராம சேவை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் விசேடமாக ஏற்கனவே மண்சரிவு அபாய இடங்களாக அவதானத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ள இப்பகுதியை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை கலவான, பெல்மதுள, இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவுகளுக்கு சிவப்பு அடையாள எச்சரிக்கை வழங்கப் பட்டுள்ளது.

இப்பிரதேசங்களுக்கு அண்மித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேச செயலகப் பிரிவிலும் மண்சரிவு அச்சுறுத்தல் நிலவுவதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.



நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணுமாறு கோரி லுணுகல பதில் தபால் அலுவலகத்துக்கு முன்பாக அரச ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது... (லுணுகல நிருபர்)

# மாற்றமே காணாத ஹற்றன் பஸ் நிலையம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

ஹற்றன் அரச மற்றும் தனியார் பேருந்துகள் தரிப்பிடம் குன்றும் குழியுமாக காணப்படும் அவல நிலை தொடர்வதால் பயணிகள், மாணவர்கள் ,வயோதிபர்கள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

நாள் ஒன்றுக்கு நூற்று கணக்கான அரச , தனியார் பேருந்துகள் இந்த தரிப்பிடத்திலிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் செல்கின்றன. இந்த பஸ் நிலையத்தில் மழை காலங்களில் சேறும் சகதியுமாக நீர் தேங்கி நிற்கும் அவல நிலை குறித்து பலகாலமாக புகார் தெரிவிக்கப்பட்டு வருகிறது. எனினும் ஹற்றன் பஸ்நிலையத்தின் இந்த பரிதாபகரமான நிலையோ தொடர்கிறது.



# நகர்வலம்



## எம்.பிக்களின் வீடுகள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில்

### ஹரீன் எம்.பி மன்னிப்பு கோரினார்

(லோரன்ஸ்செல்வநாயகம், ஷம்ஸ்பாஹிம்)



பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ (18) சபையில் மன்னிப்பு கோரினார். இந்த சம்பவங்கள் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிய அவர், எம்.பிகளின் வீடுகள் மீதான தாக்குதலை அனுமதிக்க முடியாது என்றார்.

காலிமுகத்திடலில் நடந்த தாக்குதலின் பின்னரே இந்த வன்முறை நிலை ஏற்பட்டது. பந்துல குணவர்தன பல மாணவர்களுக்கு கற்பித்தவர். காமினி லொகுகே எனது திருமணத்தின் போது கையொப்பமிட்டவர். அவர்களின் வீடுகள் தீவைக்கப்பட்டுள்ளன.நடந்த அழிவை அனுமதிக்க முடியாது. இரத்த ஆறு ஓடாமல் இதற்கு தீர்வு காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

**கடந்த 09ஆம் திகதிய அசம்பாவிதம்;**

## துமிந்த திஸாநாயக்க, செஹான் ஆகியோரின் வீடுகளில் திருட்டு

### கைத்துப்பாக்கி, 60 பவுன் நகைகள் கொள்ளை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கடந்த 09 ஆம் திகதி நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின் காரணமாக அநுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் வீட்டில் இருந்த கைத்துப்பாக்கியும் முன்னாள் அமைச்சர் செஹான் சேமசிங்கவின் வீட்டில் இருந்த 60 பவுன் தங்க ஆபரணங்களும் திருடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் விமான நிலைய வீதியில் அமைந்துள்ள துமிந்த திஸாநாயக்க மற்றும் எச் .பீ. சேமசிங்க ஆகியோரின் வீடுகளும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் தீக்கிரையாக்கப்பட்டதுடன் சொத்துக்களுக்கும் சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சினால் துமிந்த திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருந்த (பிரவுனிங்) கைத்துப்பாக்கி சம்பவத்தின் போது அவரின் வீட்டில் இருந்து திருடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

செஹான் சேமசிங்கவின் வீட்டை தீயிட்டு சேதப்படுத்திய குழுவினர் வீட்டின் அலுமாரியில் இருந்த 60 பவுன் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீவைப்பு மற்றும் தாக்குதல் காரணமாக வீடு மற்றும் சொத்துக்களுக்கு பாரிய சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

**நடுத்தர, சிறிய வியாபார நிலையங்களில்**

## பெற்றோல், டீசல் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக பொதுமக்கள் தகவல்?

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவும் நிலையில் அநுராதபுரம் மாவட்டத்தில் நகர மற்றும் கிராமப் புறங்களிலுள்ள நடுத்தர மற்றும் சிறிய வியாபார நிலையங்களில் பெற்றோல் மற்றும் டீசல் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் நிலையங்களில் ஒரு லீட்டர் பெற்றோல் 338 ரூபாவிற்கு விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த வியாபார நிலையங்களில் ஒரு லீட்டர் 400 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒரு போத்தல் பெற்றோல் 320, 340, 360 மற்றும் 380 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதுடன் ஒரு லீட்டர் டீசல் 350 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். எரிபொருள் நிலையங்களில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவும் போது வியாபார நிலையங்களில் பதுக்கி வைக்கப்பட்டு கூடுதலான விலைக்கு எரிபொருள் விற்கப்பட்டு வருவதாக நுகர்வோர் அங்கலாய்க்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

**தென் பகுதியில் கடும் மழை;**

## டெங்கு பரவும் அபாயம் மேலும் அதிகரிப்பு

(வெலிகம தினகரன் நிருபர்)

கடந்த சில நாட்களாக தென் பிராந்தியத்தில் நிலவிவரும் மழையுடனான காலநிலையால் டெங்கு பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார பிரிவினர் எச்சரிக்கின்றனர். குறிப்பாக காலி, மாத்தறை மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அவற்றை உடனுக்குடன் அகற்றுமாறு சுகாதார பிரிவினர் அறிவுறுத்துகின்றனர். மேலும் கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் மூன்று நாட்களுக்கு மேலாக காய்ச்சல் இருக்குமாயின் அண்மையிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபப் பெண் உயிரிழப்பு

(கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

தமுத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் முன்பாக அநுராதபுரம் பாதெனிய பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 67 வயதுடைய பெண் ஒருவர் கடந்த 15 ஆம் திகதி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த 09 ஆம் திகதி தமுத்தேகம பொலிஸ் பிரிவில் தமுத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் முன்பாக இடம்பெற்றுள்ளது. பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட வேளையில் அநுராதபுரம் திசையிலிருந்து தமுத்தேகம நகர் பிரதேசத்தை நோக்கி வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதி இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவனும்,மனைவியும் பயணித்த மோட்டார் சைக்கிளில் பின்பக்கமாக அமர்ந்து வந்த 67 வயதுடைய தமுத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்த விபத்தில் மரணமடைந்துள்ளார். மேலதிக விசாரணைகளை தமுத்தேகம பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பேருவளை மருதானை ஸாவியாவில் 155வது வருட மனாகிப் மஜ்லிஸ்

(பேருவளை விசேட நிருபர் )

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை மருதானை ஸாவியாவில் 155வது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மஃரிப் தொழுகையின் பின் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம். ஐ. எம் ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும்.

ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் ஜாபிர் முஹம்மத், அப்ரார் பள்ளிவாசல் ஜமாஅத் சபைத்தலைவர் சட்டத்தரணி எம். ஏ. எம். ஹனபி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் நடைபெறவுள்ள இம் மஜ்லிஸின் ஆரம்ப தின நிகழ்வில் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா (முர்ஸி) விசேட சொற்பொழிவாற்றுவார். ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா மஷாயிகுமார்களின் ஞாபகார்த்தமாகவும் இம் மஜ்லிஸ் நடைபெறுவதாகவும் ஸாவியா நிர்வாகக்குழு உறுப்பினர் பயாஸ் முஹம்மத் மேலும் தெரிவித்தார்.

22 ஆம் திகதிஆரம்பமாகும் இம் மஜ்லிஸ் மே 30ஆம் திகதிவரை இடம்பெற்று 31 ஆம் திகதி மாலை தமாம் வைபவம் நடைபெறும்.

## வெலிகமயில் அரிய வகை மிருகம் கண்டு பிடிப்பு

(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம, மிதிகம பிரதேசத்தில் இனந்தெரியாத மிருகம் ஒன்று கிராம மக்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மிதிகமவில் இந்த மிருகம் பல தடவை நடமாடியதாக தெரிவிக்கின்ற கிராம மக்கள், அதற்கு அச்சமடைந்து நடமாடியுள்ளனர்.

இதனால் கடந்த 15ஆம் திகதி முதல் கிராம இளைஞர்கள் குழு இந்த விலங்கை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

திடீரென நடமாடிய இவ்விலங்கை பொதுமக்கள் கண்டுபிடித்து வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறான மிருகத்தை தாம் இதற்கு முன்னர் காணவில்லை என்றும் மாத்தறை மிரிஸ்ஸ வனஜீவராசிகள் காரியாலயத்திற்கு தெரியப்படுத்தியபோது, அவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு வருகை தந்து இந்த அரிய இன விலங்கை எடுத்துச் சென்றதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## காத்தான்குடி முகம்மதின் மறைவு முஸ்லிம் சமூகத்திற்கு பாரிய இழப்பு

### ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அனுதாபம்



பிரபல கல்விமானும் சன்மார்க்க அறிஞரும், எழுத்தாளருமான அல்ஹாஜ் எம்.ஏ.ஸெய்யத் முகம்மதுடைய இழப்பு முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பாரிய இடைவெளியை தோற்றுவித்திருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் (18) காலமான அன்னாரது மறைவையொட்டி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த பல ஆண்டு காலமாக சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டு வந்த இவர், கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் அமைப்பை ஸ்தாபிப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டு இன்று அந்த நிறுவனம் பாரிய அளவில் வளர்ச்சி அடைகின்ற அளவுக்கு பல்வேறு தியாகங்களோடு அவற்றை வளர்ச்சியடைய செய்திருக்கிறார்.

இவர், அஹதியா என்ற அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்து மரணிக்கின்ற வரை அஹதியா செயற்பாட்டோடு தன்னை முழுமையாக அர்ப்பணித்து, கிழக்கு மாகாணத்திலேயே அஹதியா பாடசாலை மற்றும் அஹதியா பற்றிய பல்வேறு வகையான செயற்பாட்டோடு தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் ஏற்பட்ட ஒருவராக திகழ்ந்ததை காணக்கூடியதாக இருக்கின்றது. மற்றும் பல்வேறு நூல்களை வெளியிட்டு இருக்கின்ற இவர், 'ஸலவாத்து மாலை' என்கின்ற அவருடைய நூல் மிகவும் புகழ்பெற்றதாகும்.

'ஹாதிமுல் அஹதியா, என்கின்ற பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட அவர், சிரேஸ்ட ஊடகவியலாளராக இருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா பலாஹியின் தந்தையுமாவார். அன்னாருடைய சகல பாவங்களையும் மன்னித்து மேலான ஜென்னத்துல் பிர்தௌஸ் கிடைக்க பிரார்த்திப்பதாகவும் மேற்படி அமைப்பு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

**விவசாய பொருட்களின் விலை அதிகரிப்பு;**

## ஹம்பாந்தோட்டை விவசாயிகள் விவசாயம் செய்வதில் பாதிப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாயிகள் பெரும் போகத்திற்கு விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தபோதிலும் தற்பொழுதுள்ள விலைகளுக்கு ஏற்ப விவசாயத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எண்ணெயின் விலை அதிகரித்ததன் காரணமாக வயல்களை தயார்ப்படுத்துவதற்காக உழவு இயந்திரத்திற்கு 25000 ரூபாவிற்கும் கூடுதல் தொகை செலுத்த வேண்டியுள்ளது. அத்தோடு யூரியா உரத்தின் விலையும் 45,000 ரூபாவிற்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதினால் இந்த விலைகளில் விவசாயத்தினை முன்னெடுத்துச் செல்வது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதெனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இவற்றுடன் வயல் வேலைகளுக்கு கூலிக்காக அமர்த்தப்படும் நபர்களின் நாளாந்த கொடுப்பனவுகளும் 2500 ரூபாவிவிலிருந்து 3000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தையில் உள்ள கிருமி நாசினிகளையும் வியாபாரிகள் நாளாந்தம் பல்வேறு விலைகளில் விற்பனை செய்து வருவதோடு இவற்றினை உரிய காலத்தில் தேவைக்கேற்ப தட்டுப்பாடு இன்றிபெற்றுக் கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் மேற்படி பிச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களேயானால் இம்முறை பெரும் போகத்தின்போது எவ்வித தடங்களுமின்றி விவசாயத்தினை முன்னெடுக்க முடியும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் 'பிள்ளை ஆய்வு' வழிகாட்டல் நிகழ்வு





களுத்துறை மாவட்டத்திற்குட்பட்ட மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் "பாடசாலைப் பக்கத் தோற்றம் மற்றும் பிள்ளை ஆய்வு" செயற்றிட்ட நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் நேற்று (19) பாடசாலையில் நடைபெற்றது.

தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வருகை தந்த கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில பாட விரிவுரையாளர் என். சிவச்செல்வன் தலைமையிலான ஆசிரிய பயிலுனர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அத்துடன் மாணவர்களுக்கு தேவையான கல்வி வழிகாட்டல்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது வருகை தந்த ஆசிரிய பயிலுனர்களால் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

பாடசாலைக்கு வருகை தந்த மேற்படி கல்விக்குழுவினரை பாடசாலை அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையிலான ஆசிரியர் குழாத்தினர் வரவேற்றதோடு அன்றைய தினம் பாடசாலையில் நடைபெற்ற வெசாக் வார நிகழ்விலும் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட வெசாக் கூடுகளையும் கண்டு மகிழ்வுற்றனர்.

இப்போட்டியில் சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவி மற்றும் ஆசிரியைக்கும் கல்விக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் சிவச்செல்வன் பரிசு வழங்கி கௌரவித்தமை விசேட அம்சமாகும்.







அநுராதபுர மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கு இருபது இலட்சம் ரூபா பெறுமதியான இலவச காப்புறுதி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தலைமையில் அண்மையில் கச்சேரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது ஒருவருக்கு காப்புறுதி சான்றிதழ் வழங்குவதையும் கலந்துகொண்ட கலைஞர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)

இடைநிலை கல்விக்காக;

# ஹம்பாந்தோட்டை ஸாஹிராவிற்கு புதிய மாணவர்கள் இணைவு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு இவ் வருடத்திற்கு ஆறாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். எம். ரிஸான் தலைமையில் (18) வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயம், நூர் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய ஆரம்ப பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களே இடைநிலைக் கல்விக்காக ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு முதல் நாள் பாடசாலைக்கு வருகை தந்தமாணவர்கள் பேண்ட் வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு தரம் ஏழு மாணவர்களால் குறித்த மாணவர்களுக்கு சின்னம் மற்றும் மலர்க்கொத்து வழங்கி வரவேற்கப்பட்டனர். இந்நிகழ்வில் விசேட அதிதியாக ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் சிரேஷ்ட ஆசிரியை என்.ஆர். கே. தாஹிரீன் கலந்து கொண்டதோடு அவருடன் நூர் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் எம். இம்தியாஸ் கரீம், இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் பிரதி அதிபர் நிலூஷானியாடேன், ஸாஹிரா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களான டி, யூ. எஸ். அரூஸியா,எம். சீ. எஸ். பாயிஸா, பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களுடன் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ஸ்ரீ கதிரேசன் வீதி கதிர்வேலாயுத சுவாமி ஆலய தேர் திருவிழா நாளை

இலங்காபுரியின் தலைநகரமாகவும் சொர்ணபூமியாகவும் சிறப்புத் திருநகரமான கொழும்பு மாநகரத்தில் ஸ்ரீ கதிரேசன் வீதியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் கலியுகவரதனாகிய முருகப் பெருமான் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி என்ற திருநாமத்தோடு எழுந்தருளி அருள் பாலிக்கும் கதிர்வேலாயுத சுவாமியின் சுப கிருது புதுவருட மகோற்சவ பெரு விழா 13.05.2022 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்களாக நடைபெற்று வருகின்றது.

மகோற்சவத்தில் சிறப்பு உற்சவமாகிய தேர்த்திருவிழா நாளை 21.05.2022 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. சகல ஆன்ம கோடிகளும் வழிபட்டு உய்யும் வண்ணம் கோயில் கொண்டருளியிருக்கும் எம்பெருமான் திருத்தேரில் ஆரோகணித்து கொழும்பு மாநகர வீதிகளில் பவனி வரும் திருக்காட்சி அற்புதமாக அமையவுள்ளது.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்த தொரு இராஜபசாரமாகும். மக்களது

பக்தியின் இலக்கணமாக இறைவனுக்கே அரப்பணிக்கப்பட்ட தேரில் கலை மரபும் சமய மரபும் சங்கமாகின்றன. அனைத்து மக்களது திருப்பணி கைங்காரியத்தினால் உருவாகிய தேர் கலைஞர்களது கைவண்ணத்திற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டு. நீண்டகாலமாக பேணப்பட்டு வரும் சிற்ப விதி முறைகளுக்கேற்ப அமைக்கப்படுவது இத்தேராகும்.

இறைவனது திருமேனியைத் தாங்கி ஆலய வீதியில் அசைந்தாடிச் செல்லும்போது அதன் நிகரற்ற கம்பீரமான தோற்றம் மக்கள் மனதை விட்டகலாதது.




இன்னொரு வகையில் சிவாலித்தெரியும் அக்கினிப் பிழம்பின் வடிவில் தேர் தோற்றமளிக்கிறது. தீமைகள் யாவற்றையும் சுட்டெரித்து விடுவதன் குறியீடு இது. நடேசப் பெருமானின் கையிலுள்ள அக்கினி அழித்தல் தொழிலையே காட்டுகிறது.

அந்த வகையில்சங்காரத் தொழிலை நிறைவேற்ற தமது மெய்யடியார்களை காவல் செய்து வாழ்விக்க ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேரில் ஆரோகணித்து வரும் அழகான திருக்காட்சி அற்புதமாக அமையவுள்ளது. எல்லோரும் வாரீர்! வாரீர்! எழில் கொஞ்சும் கொழும்பு மாநகரத்தின் கதிரேசன் வீதியில் எழுந்தருளும் முருகனின் தேர்த்திருவிழா காண வாருங்கள். வடம் பிடிக்க வாருங்கள்!.

இவ்வாலயத்தில் கடந்த 12ஆம் திகதி மாலை கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி, கிராம சாந்தி என்பன நடத்தப்பட்டு கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற கொடியேற்றத்துடன் இம்மகோற்சவம் ஆரம்பமானது. கடந்த 12ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு தினமும் காலையும் மாலையும் விஷேட அபிஷேகம், தீபாராதனை, வசந்த மண்டப பூஜை என்பன நடத்தப்பட்டு சுவாமி உள் வீதி உலா வருதலும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் இன்று 20ஆம் திகதி 6 மணிக்கு சப்பறத் திருவிழா வெளிவீதி உலா நடைபெறும்.

நாளை 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. நாளை மாலை 5 மணிக்கு தேரடி உற்சவம் நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தில் 22ஆம் திகதி 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு திருக்கல்யாணம் பூந்தண்டிகையும் 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனமும் 27ஆம் திகதி மாலை 5 மணிக்கு வைரவர் பூசையும் நடைபெறும்.

# இளைஞர் பாராளுமன்ற பிரதி அமைச்சர் இந்தோனேசிய அதிகாரி சந்திப்பு



ருஸைக் பாரூக்

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக் இந்தோனேசியாவின் உயர்ஸ்தானிகராலய அதிகாரி போயிக் நூர்தீனை சந்தித்தார்.

தலைமைத்துவம் மற்றும் மொழி ரீதியான கற்கை என்பவற்றை விருத்திசெய்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்த சந்திப்பில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி மற்றும் மொஹமட் அஸீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை இளைஞர்களின் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர நகர்வுகளை விருத்திசெய்யும் முகமாக இளம் சமூகத்தின் மத்தியில் இராஜதந்திர கல்வி முறைகள், மாதிரி ஐக்கிய நாடுகள் நிகழ்வுகள் மூலம் அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களினால் அங்கு கலந்துரையாடப்பட்டது.

# வீதி சோதனை சாவடியில் அதி நவீன கமராக்கள்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பாலத்தில் அமைந்துள்ள பொலிஸ் மற்றும் இராணுவப் படையினர் இணைந்த வீதிச் சோதனைச் சாவடியில் அதி நவீன கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டு அது புதன்கிழமை (18) உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.அபேயவிக்கிரமவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கமல் சில்வா, மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தினேஸ் கருணாநாயக்க, மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுதத் மாசிங்க களுவாஞ்சிகுடிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ஜெயரத்ன உள்ளிட்ட பெலிஸ் உயரதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்துள்ளனர்.

பெரியகல்லாறு பாலத்தில் அமைந்துள்ள பொலிஸ் மற்றும் இராணுவப் படையினர் இணைந்த வீதிச் சோதனைச் சாவடியில் பொருத்தப்பட்டுள்ள அதி நவீன கண்காணிப்புக் கமராக்கள் மூலம், மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பயணிக்கும் சந்தேகத்திக்கிடமான வாகனங்கள், குற்றச் செயல்களில் ஈடுபட்டு விட்டு வாகனங்களில் தப்பிச் செல்பவர்களையும், இலகுவான முறையில் அடையாளம் காண முடியும் என இதன்போது கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அக்கரைப்பற்றில் டெங்கு ஒழிப்பு சோதனை

அக்கரைப்பற்று வடக்கு தினகரன், அக்கரைப்பற்று மத்திய நிருபர்கள்

தேசிய டெங்கு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசத்தில் புதன்கிழமை (18) டெங்கு பரிசோதனை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப். எம்.ஏ.காதர் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், முப்படையினர், டெங்கு கள தடுப்பு பிரிவினர் மற்றும் சுகாதார பணியாளர்கள் இணைந்து இச்செயற்திட்டத்தில் ஈடுபட்டனர். டெங்கு பரவக்கூடிய உட்புற மற்றும் வெளிப்புற இடங்களை அடையாளம் கண்டு அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் பொதுமக்கள் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியம் பற்றி வைத்திய அதிகாரியினால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.


## INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

### STATE MINISTRY OF PROVINCIAL COUNCILS AND LOCAL GOVERNMENT AFFAIRS

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER : P163305

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Hiring of Vans mentioned in the table below.

2) The Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Department of Local Government, Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for Hiring of Vans mentioned in the table below.

| No | Contract No | Contract Name | Types of Vehicles required on rent | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period | Vehicle Required Place, Nos & Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/LDSP/PIU/VEH | Hiring of Vans | Five Vans (Seating capacity – minimum 10 seats) with driver and fuel | July 2022 to December 2022 | 30000.00 per van | Up to 19.08.2022 | Up to 16.09.2022 | Jaffna - 1<br>Kilinochchi - 1<br>Mullaitivu - 1<br>Mannar - 1<br>Vavuniya - 1 |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

4) Qualification requirements are indicated in Section II and Section VII (Bidding Data and Contract Data) of the Bidding document.

5) Interested bidders may obtain further information from **Commissioner, Department of Local Government, Northern Province, Elders Home Complex, A9 Road, Kaithady,** (T.P No: 0212213728, Fax No: 0212215738) and inspect the bidding documents at the address given below from **20th May 2022** until **16th June 2022** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.

6) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project, Department of Local Government, Elders Home Complex, Kaithady, Jaffna from 20th May 2022 until from 16th June 2022 from 09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of Three Thousand Five Hundred Rupees (Rs.3,500.00). The method of payment will be by cash.

7) Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project, Department of Local Government, Elders Home Complex, Kaithady, Jaffna** on or before **14.00 Hrs on 17th June 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend **(17th June 2022, 14.00 hrs).**

8) A pre-bid meeting will be held on **10th June 2022, 14.00 hrs at Department of Local Government, Northern Province, Elders Home Complex, A9 Road, Kaithady.**

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project,**
**Department of Local Government,**
**Elders Home Complex,**
**Kaithady.**

20.05.2022.



கடற்றொழில் அமைச்சு

கடற்றொழில் இராஜாங்க அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

## விலைமனுக்கோரல்

### பெறுகை அறிவித்தல்

**பயிற்சி பெறுபவர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023**

01. இலங்கையின் தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) என்பது நிர் வளம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பு தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வளர்ச்சிக்காக 1998 ஆண்டு இல. 53 ஆம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

02. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (தலைமை) தேசிய போட்டி ஏல நடைமுறையை பின்பற்றி ஒரு வருட காலத்திற்கு பின்வரும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மனுப் பிணை மற்றும் பெறுமதி (SLR) | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| NQ/DPC /2022/NC-B/S/02-R | இரம்படகல்ல அலங்கார மீன்கள் மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி-பெறுபவர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023 | 50,000.00 121 நாட்கள் (2022.10.02) | 2,500.00 | 2022.06.02 பி.ப.3.00 | 2022.06.03 பி.ப.2.00 |

03. இரம்படகல்ல அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் பயிற்சி நிலையத்தில் 15-40 அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு உணவழிப்பதற்காக சிறந்த அனுபவத்துடன் தகுதிவாய்ந்த மற்றும் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களாக இருத்தல் வேண்டும்.

04. தொடர்புடைய மனுக்களை **2022.06.02** ஆம் திகதி **பி.ப.3.00** மணி வரை பின்வரும் இடங்களில் இலவசமாகப் பரிசோதிக்கலாம் மற்றும் மேலதிக தகவல்களை கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.


| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெறுகையின் பெயர் | மனு ஆவனங்களை இலவசமாக பரிசீலனை செய்யக்கூடிய மற்றும் மனு ஆவனங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் | மனு ஆவனங்கள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள கூடிய அதிகாரிகள் பற்றிய விவரம் |
|---|---|---|
| **NQ/DPC/2022/NCB/S/02-R**<br>இரம்படகல அலங்கார மீன்கள் மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனம் நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023 | கொள்முதல் அதிகாரி,<br>இலங்கையின் தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல.<br><br>பொறுப்பு அதிகாரி,<br>இரம்படகல அலங்கார மீன்கள் மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனம் | கொள்முதல் அதிகாரி,<br>தொலைபேசி எண்:<br>011 2786544 / 011 2786495<br><br>பொறுப்பு அதிகாரி,<br>தொலைபேசி எண்கள்:<br>037 2252048<br>தொலைநகல் : 037 2252048 |

05. மேலே இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் கோரிக்கை கடிதத்துடன் மீளச்செலுத்தப்படாத மனுக கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

06. அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து மனுக்களும் **2022.06.03** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே இலக்கம் 02 இல் குறிப்பிட்டுள்ள மீளச்செலுத்தப்படாத மனுக் கட்டணத்தை பணமாக செலுத்துவதன் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுப் காப்புறுதிபிணையுடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (தலைமை)
இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
2022.05.20

# சிறு விளம்பரம்






## மோட்டார் வாகனங்கள்



119

## பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

SP ND-8154 Ashok Leyland Viking 2010, bus கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 031237



122

## மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP AAF - 4890 Bajaj Three wheel 2012 கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 071 1210 810 031238

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

***1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான விற்பனை***

## மக்கள் வங்கி

## பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏல விற்பனை

### கூட்டிணைந்த வங்கிப் பிரிவு

**காணித்துண்டம்:** மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் **அதிகாரி பத்து சியனே கோரளையிலுள்ள கந்துபொட இல. 282 கிராம அலுவலர் பிரிவு மற்றும் பியகம பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றினுள் வருகின்ற கந்துபொடயில்** அமைந்துள்ள ''கரந்தகொல்லவத்த" என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.கே. மஹிந்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.09.03 ஆந் திகதிய 5881 என்னும் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதுமான காணியின் A எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம் கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து இருபது தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சஸ் (A-0, R-0, P-20.40). கம்பஹா காணிப் பதிவகத்தில் இலக்கம் N247/101 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், உரிய இடத்தில் **2022 ஜூன் 15 ஆந் திகதி மு.ப.11.30** மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:-** 2020.08.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2020.08.28 ஆந் திகதிய தினமின டெய்லிநியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகு வழி:-** தெல்கொட சந்தியிலிருந்து பியகம வீதி (புதிய கண்டிவீதி) நெடுகிலும் சுமார் 1 கி.மீ. தூரத்திற்குச் சென்று, சியம்பலாபே கனிஷ்ட பாடசாலை விளையாட்டு மைதானம் கடந்ததும், இடப்புறமாகவுள்ள கொங்கிறீட் இடப்பட்ட P.S. வீதிக்குத் திரும்பவும். அவ்வீதிநெடுகிலும் சுமார் 400 மீற்றர்கள் சென்று லூக்ரடிவ் கார்டன் எனப்படும் பகுதியாக்கம் செய்யப்பட்ட காணிக்குரிய 30 அடி அகலமுடைய கொங்கிறீட் வீதியை அடைவதற்கு இடப்புறமாகத் திரும்பவும். பின்னர் அங்கிருந்து T சந்தி வரை சுமார் 75 மீற்றர்கள் பயணித்து இடப்புறமாகத் திரும்பி 20 மீற்றர்கள் தொடர்ந்து சென்றால் குறித்த காணியானது இடப்பக்க முடிவில் காணப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:-** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவுவிலையின் 10%
2. உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனைகளின் 01% வரி.
3. விற்பனை விலையின் 2½% வீதமான (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்தச் செலவுத் தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் உதவிப் பொது முகாமையாளர் - அறவீடுகள், மக்கள் வங்கி, அறவீடுகள் பிரிவு, தலைமைக் காரியாலயம், 10ஆவது மாடி, சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு- 02 என்பவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி: 011-2481613, 011-2334281 தொலைநகல்: 011 2436947

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) கையகப்படுத்துவதற்கும் ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற் குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி : 011 2053286,**
**072 3207533,076 9217329**

**ஈ. எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும்**
**உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும்,**
**மதிப்பீட்டாளர் மற்றும்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

மக்கள் வங்கி PEOPLE'S BANK

## அட்டோர்னி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல் தொடர்பாக

வடமத்திய மாகாணம், அனுராதபுரம், மாத்தளைச் சந்தி, இல. 181 1/2 இல் வதியும் தேசிய ஆள் அடையாள அட்டை இல 732511091V கொண்ட சார்திய புன்சி ஹேவாகே பிரதீப் சமின்த ஆகிய நான், அனுராதபுரம் உயர் நீதிமன்ற நியாயாதிக்கத்தினுள் கடமை புரியும் பிரசித்த நொதாரிசும் திருமதி மதாரா விஜேசிங்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 365ம் 2021.12.13ஆம் திகதியுடைய அட்டோர்னி அதிகாரப் பத்திரத்தின் மூலம் அனுராதபுரம், I.S. வீதி, இல 17ல் வதியும் அம்பலங்கொடகே பிரதீப் நிலந்த தேசப் பிரிய (தே.அ.அ.இல. 761812882V) என்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேற்படி அட்டோர்னி அதிகாரப் பத்திரம் அனுராதபுரம் பிரதி மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 02ஆம் புத்தகத்தில் 02ஆம் பிரிவில் 406ஆம் தின புத்தகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டள்ளது.

என்னால் வழங்கப்பட்ட மேற்படி அட்டோர்னி அதிகாரப் பத்திரத்தினை இதனகத்து இரத்துச் செய்வதோடு, இன்றைய தினத்தின் பின்னர் மேற்படி அட்டோர்னி அதிகாரப் பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பொறுப்பாக மாட்டேன் என்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பிரஜைகளுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**கார்திய புன்சிஹேவாகே பிரதீப் சமின்த**
**இல. 181/ 1/2, மாத்தளைச் சந்தி, அநுராதபுரம்.**

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மேல் மாகாணம், கம்பஹா மாவட்ட, நீர்கொழும்பு, பெரியமுல்ல, மூர் தெரு, 22 ஆம் இலக்கத்திலுள்ளவரும் 623100383V என்ற தேசிய அடையாள அட்டையின் உரிமையாளரும் AB978307 என்ற கனடா கடவுச்சீட்டின் உரிமையாளருமாகிய நான் 6221 என்ற இலக்கத்தின் கீழும் 2010.07.28 ஆம் திகதியிடப்பட்டதும் ஏ.ஏ. பஷீர் அஹமட் நீர்கொழும்பு பிரசித்த சட்டத்தரணியினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் என்னால் வழங்கப்பட்டதுமான அற்றோணித்தத்துவமானது இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிப்பதுடன் எனது அற்றோணித்தத்துவக்காரரினால் எனது பெயரில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் அல்லது செயற்பட்டுகளுக்கும் நான் 2022 மே 19 ஆம் திகதியிலிருந்து பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## பொது மக்களிடம் அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

## பண்டாரவளை பிரதேச சபை

2023 ஆண்டை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பண்டாரவளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

02. அதனடிப்படையில் அதனோடு சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை 2022 ஜூன் 30ம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் தலைவர், பண்டாரவளை பிரதேச சபை, பண்டாரவளை என்ற முகவரிக்கு அனுப்புமாறு பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களிடம் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தலைவர்,**
**பண்டாரவளை பிரதேச சபை**
**பண்டாரவளை.**
**057-2222544/ 057-2222517**

## மேல் மாகாண சபை

## மாகாண பொறியியல் நிறுவனம்

Solar Photovoltaic (PV) முறைமையை அமுல்நடாத்துவதற்காக மேல் மாகாண சபையின் அரசாங்க கட்டிடங்களின் கூரையை வாடகைக்கு அமர்த்துதல் தொடர்பான விலைமனுப்படிவங்களை வழங்கல் மற்றும் விலைமனுத்திறத்தல் திகதிகளை நீடிப்புச் செய்தல்

குறித்த விடயம் தொடர்பாக 2022.05.04 அன்று தினமின, தினகரன் மற்றும் டெயிலி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பானது.

அதன் பிரகாரம் இதற்கான விலைமனுப்படிவங்களை வழங்கும் இறுதித் தினம் 2022.06.06 வரையும், விலைமனுத்திறக்கும் தினம் 2022.06.07 அன்று மு.ப. 10.30 வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.05.25 அன்று மு.ப. 10.30 இற்கு முன்னைய பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடைபெறும்.

**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்)**
**பொறியியல் நிறுவனம் (மே.மா)**
**5ஆம் மாடி,**
**இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொ.பே. 011-2092504**

**கிராமிய வீடமைப்புத்திட்டம் மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில்கள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு**

## கட்டிடங்கள் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**அரசாங்க கட்டிடங்களுக்கான அவசர விஷேட பழுது பார்த்தல்கள், மேம்படுத்தல், புதுப்பித்தல்கள், சிறிய வேலைகள் மற்றும் பராமரித்தல் வருடம் 2022/2023**

### விலைமனுக்கள் திறத்தலை நீடித்தல்

2022.04.21 ஆம் திகதியிடப்பட்ட 'டெயிலி நியுஸ்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்டுள்ள பெறுகை தொடர்பானது. இவ்விளம்பரமானது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதென தயவு செய்து கவனிக்கவும்.

- விலைமனுக்களை திறத்தல் 2022.06.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- 2022.06.08 ஆம் திகதியன்று மு.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.
- விலைமனுப்பிணையானது 2022 ஒக்ரோபர் 5 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

முன்னைய அறிவித்தலின் விளம்பரத்தின் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**பொறியியலாளர்,**
**கட்டிடங்களின் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**''செத்சிரிபாய", பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## 2022/ 2023 ஆண்டிற்கு யாழ்ப்பாணம் - போதனா வைத்தியசாலையில் உள்ளக தொலைபேசி அமைப்புக்களை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்

1. கீழே விபரிக்கப்படுமாறு, 2022/ 2023 ஆண்டிற்கு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் NEC SVS 8100 IP PABX உள்ளக தொலைபேசியின் வருடாந்த பராமரிப்பு சேவைகளுக்கு தகைமை மற்றும் அனுபவமுடைய மற்றும் நம்பகமான தகைமையான விண்ணப்பதாரிகளிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி (NCB) முறையூடாக விலைமனுக்கள் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் தொலைத்தொடர்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தலுக்காக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRC) இன் கீழ் விலைமனுதாரர் பதிவு செய்திருத்தல் வேண்டும். அத்துடன் இந்த நோக்கத்திற்கான வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கீழ்க்காணும் ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் ரூபா 1,500.00 ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துவதன் பேரில் மற்றும் கீழ்க்காணும் முகவரிக்கு ஓர் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் பேரில் 2022 மே 20 முதல் 2022 ஜூன் 05 மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கும் இடையில் வேலை நாட்களில் யாழ்ப்பாணம் போதனா, வைத்தியசாலையின் நிர்வாக அலுவலரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

   பிரதிகளாவன,

   - வியாபார பதிவுச் சான்றிதழின் ஓர் பிரதி
   - தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRC) அனுமதிப்பத்திரத்தின் ஓர் பிரதி

5. 2022 ஜூன் 5 வரை மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் வேலை நாட்களில் உள்ளக அமைப்பை பார்வையிட முடியும்.
6. பொறியிடப்பட்ட விலைமனுக்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் உள்ள கேள்விப் பெட்டியில் நகல்களுடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை வைப்பிலிடலாம் அல்லது 2022 ஜூன் 06ம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் அவரை அடையுமாறு மேற்படி முகவரியிலுள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மேற்படி முகவரியில் சமுகமளிக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.
7. 119 நாட்கள் செல்லுபடியாகும் காலத்திற்கு (2022.10.03 வரை) இலங்கை ரூபா 100,000.00 பெறுமதியுடைய இலங்கையிலுள்ள நம்பகமான வங்கியினால் வழங்கப்படும் ஓர் விலைமனுப் பிணையை எல்லா விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும். விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகளில் ஒருவர் விலைமனு திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.
8. எந்த அல்லது எல்லா விலைமனுவையும் நிராகரிக்கும் அத்துடன் ஓர் விலைமனுவின் ஏதாவது பகுதியை, எந்தக்காரணமும் கூறாமலேயே ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் எந்த நேரத்திலும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கொண்டிருப்பார். ஆகக்குறைந்த அல்லது எந்த விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் கடப்பாட்டை சேவை நாடுநர் கொண்டிருக்கமாட்டார்.
9. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்கும் இடையில் சேவை நாட்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
10. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2022 மே 27ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறும்.

**பணிப்பாளர் (தலைவர்)**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

2022 மே 20

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

## இறுதி தீர்மான பொது அறிவித்தல்

**உத்தேச கதோட்டுக்கதிர் டீயுப் கண்ணாடியை மீட்டெடுப்பதன் மூலம் ஓடுகளை உற்பத்தி செய்தல் திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கை**

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000 ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக இல. 170/6, கொடபாறகஹலந்த வீதி, கிரிவத்துடுவவில் அமைந்துள்ள சிலோன் வேஸ்ட் மெனேஜ்மன்ட் (தனியார்) நிறுவனத்திற்கு மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசர பியச", இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## வ/ இலங்கை சேமிப்பு வங்கி

## விலைமனுக் கோரல்

### பயிர்ச் செய்கைக்காக காணியொன்றை குத்தகைக்கு வழங்கல்

இலங்கை சேமிப்பு வங்கிக்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணியை பயிர்ச்செய்கைக்காக குத்தகைக்கு வழங்க இத்தால் விலைமனுக் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **முகவரி** | : | இல. 65/11,ஏ பொனவிஸ்டா வீதி நுவரெலியா. |
| **காணியின் விஸ்தீரணம்** | : | ஏக்கர் 1 பேர்ச் 23.51 |
| **குத்தகைக் காலம்** | : | முதலாம் வருட முடிவில், திருப்பி புதுப்பிக்கும் அடிப்படையில் 02 வருடங்கள் |

இலங்கை சேமிப்பு வங்கியின் பெறுகை - சிரேஷ்ட முகாமையாளரினால் வார நாட்களில் அலுவலக நேரங்களில், மு.ப.8.30 இலிருந்து பி.ப.4.00 வரை குத்தகைக்கு வழங்கல் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2022.06.03 அன்று பி.ப 2.00 வரை விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக தகவல்களுக்காக 0711688548/ 071325306 தொடர்பு கொள்ளுங்கள்

**இலங்கை சேமிப்பு வங்கி**

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

### வடமத்திய மாகாணம்

1. வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் பின்வரும் நிர்மாணங்களுக்காக தகைமை வாய்ந்த மற்றும் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி விலைக்கோரல் முறையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும் என்றாலும் இந்த விலைக்கோரல் வடமத்திய மாகாண நிர்வாக எல்லையினுள் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. (அட்டவணையின் தொடர் இலக்கம் இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்கு இது ஏற்புடையதாகாது)
2. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கான வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ICTAD பதிவுத் தரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
3. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் தலைமைக் கணக்காளர், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்தை, அநுராதபுரம் (025-2223790) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 2022-06-09ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்ததன் பின் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை தொடர்பான இலக்கம் மற்றும் விபரம் | நிதியளிப்பு | மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு (ரூபா) | தேவைப் படும் ஆகக் குறைந்த இக்டாட் தரம் | விலைமனுப் பிணைப் பெறுமதி (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அலுவலகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் - (ஏழு மாடிகள்) இரண்டாவது மாடி வேலைகளை நிறைவு செய்தல் | PSSP | 26.6 மில்லியன் | C 4<br>C 5 | ரூபா 300,000.00 (119 நாட்கள் செல்லுபடியாகும்) | 270 நாட்கள் | ரூபா 11,000.00 |
| 02 | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏழு மாடிக் கட்டிடத்தில் நேரடியாக இடிதாங்கி முறைமையொன்றை வழங்கி பொருத்துதல் | PSSP | 1.9 மில்லியன் | EM 3<br>EM 4 | ரூபா 25,000.00 (91 நாட்கள் செல்லுபடியாகும்) | 45 நாட்கள் | ரூபா 2,000.00 |

5. விலைக்கோரல்கள் நகல் பிரதிகள் சகிதம் 2022-06-10ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமத்திய மாகாணம், அநுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதித்த விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து அச்சந்தர்ப்பத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. அனைத்து விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்குச் சமமான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்றை ''மாகாண சுகாதார பணிப்பாளர், வடமத்திய மாகாணம்'' எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தவிசாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்.**
**2022-05-20.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD15/ 972/2022 | Oder Eliminator மற்றும் Technical Alcohol 70% என்பவற்றுக்கான பெறுகை | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 2,160.00 | 10,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD20/ 0961/2021 | டயர்கள் மறுசீரமைப்பதற்கான கேள்வி | | ரூபா 2,160.00 | 20,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD18/ 1193/2022 | 2022 - 2025 (3 வருட) காலத்திற்கு CMC e-LG முறைமைக்கான ஒத்துழைப்பு மற்றும் பராமரிப்பிற்கான கேள்வி | | ரூபா 5,400.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425** எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02** - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-06-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022 ஜூன் 08ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2022.11.05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.10.06ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 ஜூன் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022 ஜூன் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# நீர்கொழும்பு மாநகர சபை

## விலைமனு அறிவித்தல்

கீழ்க்காணப்படும் அட்டவணையில் உள்ள ஆதனங்களை 2022.07.01 முதல் (02) இரண்டு வருட காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக நீர்கொழும்பு மாநகர சபையானது, முத்திரையிடப்பட்ட இரண்டு பிரதிகளில் விலைமனுக்களை கோருகின்றது.

| தொடர் இலக்கம் | குத்தகை ஆதனங்கள் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொச்சிக்கடை ஞாயிறு சந்தை | 1982430/- | 198000/- | 3000/- |
| 02 | சனிக்கிழமை இரவு சந்தை | 6373536/- | 637000/- | 3000/- |
| 03 | அலியாபொள தினசரி சந்தை | 166100/- | 16000/- | 3000/- |
| 04 | ராஜபக்ஷ பூங்காவின் ஐஸ்கிரீம் கூடம் | 25000/- (மாதாந்தம்) | 3000/- | 3000/- |
| 05 | பஸ் நிலையத்திற்கண்மையிலுள்ள கழிவறைத் தொகுதி | 400000/- | 40000/- | 3000/- |
| 06 | புதிய நீதிமன்றத் தொகுதியில் உள்ள வாகனத்தரிப்பிடம் | 65000/- (மாதாந்தம்) | 6500/- | 3000/- |
| 07 | B சாப்புக்கட்டிடத் தொகுதியின் பின்னாலுள்ள கழிவறைத் தொகுதி | 20000/- | 3000/- | 3000/- |

**விலைமனுப்படிவங்களை வழங்கல்** : 2022.05.20 முதல் 2022.06.03 அன்று பி.ப. 02.30 வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில்

**விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளலை முடிவுறுத்துதல்** : 2022.06.06 அன்று மு.ப. 10.00 அவ்வேளையின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுத் திறத்தல்** : 2022.06.06 அன்று மு.ப. 10.30 இற்கு

**நிபந்தனைகள்**

01. அனைத்து விலைமனுக்களும், அவை குத்தகைக்கு விடப்படும் தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு சட்டபூர்வமாக செல்லுபடியாகும். முதலாம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட விலைமனுத் தொகையின் 5% இற்கான தொகையுடன் சேர்த்து இரண்டாம் ஆண்டிற்கான விலைமனுத் தொகை அறவிடப்படும்.
02. படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலத்திய பின்னர் விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும்.
03. விண்ணப்பங்களுடன் வழங்கப்படும் நிபந்தனைகளிற்கமைவாக உங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. சந்தைகளிற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில், விலைமனுத் தொகையின் (06) ஆறு மாதங்களிற்கான தொகைக்கு நிகரான மற்றும் செல்லுபடிக்காலம் ஒரு வருடம் ஆன, மாநகர ஆணையாளரின் பெயரில் அரச அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவு ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
05. ஏனைய ஆதனங்களிற்காக விலைமனுத் தொகை ரூபா 800000/- இற்கு மேல் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் விலைமனுத் தொகையின் 12 மாதங்களின் தொகைக்கு நிகரான மற்றும் ஒரு வருடம் செல்லுபடிக்காலம் உடைய, மாநகர ஆணையாளரின் பெயரில் அரச அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவு ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. குறித்த துறையில் விலைமனுதாரருக்கு அனுபவம் இருப்பின், அவற்றை உறுதிப் படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
07. சித்திகரமான விலைமனுதாரர், சபையின் சந்தைகளிற்காக 03 மூன்று மாத காலத்திற்கான தொகையையும், ஏனைய ஆதனங்களிற்காக (06) ஆறு மாத காலத்திற்கான தொகையையும் ஒரு கிழமையினுள் சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
08. இலங்கைப் பிரசைகள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கலாம்.
09. விலைமனு மாதிரிப்படிவங்களை பிழையின்றிப் பூரணப்படுத்தி, பண வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை இணைத்து, மூலப்பிரதி நகல் பிரதியென தனித்தனி உறைகளில் சேர்த்து அவற்றின் இடது பக்க மேல் மூலையில், ஆதனத்தின் பெயர் மற்றும் மூலப் பிரதி அல்லது நகல் பிரதியெனக் குறிப்பிட்டு, மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் குறித்த திகதி, குறித்த நேரத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் அல்லது நேரடியாக மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளரிடம் (031-2222275) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
10. விலைமனுத் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அனுமதி பெற்ற ஒருவர் சமுகமளித்திருக்கலாம்.
11. இவ்விலைமனுத் தொடர்பாக இறுதித்தீர்மானம் சபைக்கு உரித்தாகும்.

**2022.05.17ஆம் திகதி**
**நீர்கொழும்பு**
**மாநகர சபை அலுவலகத்தில்**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

# நீர்கொழும்பு மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணப்படும் அட்டவணையிலுள்ள ஆதணங்களை 2022.07.01 முதல் (02) இரண்டு வருட காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக, நீர்கொழும்பு மாநகர சபையினால் முத்திரையிடப்பட்ட இரண்டு பிரதிகளில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | குத்தகை ஆதனங்கள் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | விஸ்த்ரீன் மாவத்தை மாட்டிறைச்சிக் கடை | 576,620/- | 57,000/- | 3,000/- |
| 02 | முன்னக்கரய மாட்டிறைச்சிக் கடை | 568,590/- | 56,000/- | 3,000/- |
| 03 | கொச்சிக்கடை மத்திய சந்தை மாட்டிறைச்சிக்கடை | 220,500/- | 22,000/- | 3,000/- |
| 04 | கொச்சிக்கடை மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 27,500/- | 3,000/- | 3,000/- |
| 05 | கொச்சிக்கடை மத்திய சந்தை பன்றி இறைச்சிக் கடை | 181,500/- | 18,000/- | 3,000/- |
| 06 | கீர்த்தி சிங்ஹ வீதி மாட்டிறைச்சிக் கடை | 233,530/- | 23,000/- | 3,000/- |
| 07 | கீர்த்திசிங்ஹ வீதி கோழி இறைச்சிக்கடை | 82,280/- | 8,000/- | 3,000/- |

**பெறுகை விண்ணப்பப்படிவங்களை வழங்கல்** : 2022.05.20 முதல் 2022.06.03 அன்று பி.ப. 02.30 வரை நீர்கொழும்பு மாநகர சபை கணக்காளர் பிரிவில்

**பெறுகை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம்** : 2022.06.06 அன்று மு.ப. 10.00 இற்கு

**பெறுகை விண்ணப்பங்களை திறத்தல்** : 2022.06.06 அன்று மு.ப. 10.30 இற்கு

**நிபந்தனைகள்**

01. இலங்கைப் பிரசைகள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கலாம்.
02. பெறுகை விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
03. மாதிரிப்படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்திய பின்னர் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும். விண்ணப்பங்களுடன் வழங்கப்படும் நிபந்தனைகளிற்கமைவாக உங்கள் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. சித்திகரமான விலைமனுதாரர், மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கு மேலதிகமாக, விலைமனுத் தொயின் 25% இற்கான காசுப் பிணையொன்றும் சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
05. அனைத்து விலைமனுக்களும், அவை குத்தகைக்கு வழங்கப்படும் தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு சட்ட பூர்வமாக செல்லுபடியாகும். முதலாம் ஆண்டில் செலுத்தப்பட்ட விலைமனுத் தொகையின் 5% இற்கான தொகையுடன் சேர்த்து இரண்டாம் ஆண்டிற்கான விலைமனுத் தொகை அறவிடப்படும்.
06. பெறுகை வைப்புத் தொகை தவிர்ந்த, ஏனைய அனைத்து கொடுப்பனவுகளிற்கும் அரச வரித்தொகை செலுத்தப்படல் வேண்டும்.
07. பெறுகைப்படிவங்களில், விலைகள் எழுத்தில் மற்றும் இலக்கத்தில் பிழைகளின்றித் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். பின்னர், விலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த நேருமாயின் ஒற்றைக் கீற்றில் அவற்றை வெட்டி விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மாற்றம் மேற்கொள்ளப்பட்ட விலைமனுக்களும், பிழைகளின்றித் தெளிவாக எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
08. விலைமனுக்கள், மாதிரிப்படிவங்களில் உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு, மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதி தனித்தனி உறைகளில் சேர்த்து முத்திரையிட்டு அவையிரண்டையும் ஒருறையில் சேர்த்து முத்திரையிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ஆதனத்தின் பெயரைக் குறிப்பிட்டு, மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு 2022.06.06 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.
09. விலைமனுத்திறக்கப்படும் வேளையில், விண்ணப்பதாரர் அல்லது அவரின் அனுமதி பெற்ற ஒருவர் சமுகமளித்திருக்கலாம்.
10. எவ்வித நியாயமான காரணங்களுமின்றி சித்திகரமான விலைமனுதாரர், டெண்டரை நிராகரித்தல், அவரின் பிணைத்தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.
11. இவ்விலைமனு தொடர்பான சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளரிடம் (031-2222275) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**2022.05.17ஆம் திகதி**
**நீர்கொழும்பு**
**மாநகர சபை அலுவலகத்தில்**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

# திருத்தம்

## ஊவா மாகாண சபை
## பிரதி பொதுச் செயலாளர்
## (பொறியியல் சேவை) அலுவலகம்

2022 ஏப்ரல் 27ம் திகதி புதன் தினமின பத்திரிகை - 1ஆம் பக்கம், தினகரன் பத்திரிகை 11ஆம் பக்கம் மற்றும் டெயிலி நியூஸ் பத்திரிகை 27ம் பக்கத்தில் பிரசுரமான பெறுகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் விடயங்கள் மட்டும் திருத்தப்படுகிறது.

06. கேள்வி விநியோகிக்கப்படும் இறுதித் திகதி 2022.06.03ம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.
08. கேள்விப் பிணையாக வங்கிப் பிணையொன்றை சமர்ப்பிப்பதாயின் அதன் செல்லுபடியாகும் காலம் 2022.10.06ம் தகிதி ஆகும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலம் 2022.09.06 வரையானதாக இருத்தல் வேண்டும்
11. கேள்வி சமர்ப்பிக்கக்கூடிய இறுதித் திகதி மற்றும் நேரம் 2022.06.06ம் திகதி பி.ப. 2.00 வரை ஆகும்.
12. 2022.06.06 பி.ப. 2.00 இற்கு பதுளை, பிங்அராவ, பிரதிப் பொதுச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர் - பெறுகைக் குழு**
**பிரதிப் பொதுச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்,**
**பிங்அராவ, பதுளை.**
**தொ.பே/ பெக்ஸ் இல. 055-2222218,**
**ஈமெயில் - desengupc@gmail.com**
**திகதி- 2022.05.17**

BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

## 2023 ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

## கொபெய்கனே பிரதேச சபை

1987 இல.15 பிரதேசசபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண ஆளுநரான ராஜாகொல்லுரே அவர்களினால் 2021.10.29 ஆம் திகதி மற்றும் இல.2199/15 இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அதிவிஷேட) பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பிரதேச சபை வரவு-செலவுத்திட்ட பெறுகை மற்றும் செயற்படுத்தப்படும் விதிகள் இல.6 இன் பிரகாரம் கொபெய்கனே பிரதேச சபையின் தலைவரான என்னால் 2020ஆம் ஆண்டின் வரவு-செலவுதிட்டத்திற்காக அபிவிருத்தி ஆலோசனைகளை பொதுமக்களிடமிருந்து கோரப்படுவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது 2023 ஆம் ஆண்டிற்கான, அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகளை 2022 ஜூன் 30ஆம் திகதிக்கு முன் எனக்கு கிடைக்கசெய்யுமாறு தபாலில் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

**2022.05.17ம் திகதி கொபெய்கனே பிரதேச சபையில்**

**தலைவர்**
**கொபெய்கனே பிரதேச சபை.**

## உடுபத்தாவ பிரதேச சபை

## 2023 வரவு செலவு முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல்

2023ஆம் ஆண்டிற்கான உடுபத்தாவ பிரதேச சபையின் வரவு செலவுகளிற்கான உத்தேச மூலதன செலவுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உள்வாங்குவதற்காக, உடுபத்தாவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

உங்கள் முன்மொழிவுகளை 2022 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் ‘தலைவர், உடுபத்தாவ பிரதேச சபை’ என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது அலுவலகத்தில் நேரடியாக ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்**
**உடுபத்தாவ பிரதேச சபை**
**தொ.பே.இல. 037-2286577/ 037-4947095**

## பிரதேச அபிவிருத்தி வங்கி
## RDB Regional Development Bank

# அடகு ஆபரணங்களை ஏல விற்பனை மேற்கொள்ளும் தினத்தினை பிற்போடுதல் – 2022

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய காலம் பூர்த்தியாகிய மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2022.05.07ம் திகதி முதல் 2022.05.15ம் திகதி வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏல விற்பனை செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு தினகரன் பத்திரிகை மூலம் 2022.04.22ம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் இவ் ஏல விற்பனை குறித்த தினத்தில் இடம் பெறாது என்பதுடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த இடங்களிலேயே 2022.05.28ம் திகதி காலை 9.00 மணிக்கு அடகு ஆபரணங்கள் ஏல விற்பனை மேற்கொள்ளப்படும் என்பதனை அன்பான வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதற்கேற்ப அடகு ஆபரணங்களை மீட்டுக்கொள்வதற்கான இறுதித் திகதியானது 2022.05.27 வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

| அடகு வைக்கப்பட்ட இறுதி திகதி | அடகு காலம் | அடிப்படையாகிய திகதி | பூர்த்தியாகிய காலம் |
|---|---|---|---|
| 2020.12.31 | 12 மாத காலத்திற்கு அடகு வைக்கப்பட்டவை | 2021.12.31 | 01 வருட காலம் பூர்த்தியாகியவை |
| 2021.06.30 | 06 மாத காலத்திற்கு அடகு வைக்கப்பட்டவை | 2021.12.31 | 06 மாத காலம் பூர்த்தியாகியவை |
| 2021.09.30 | 03 மாத காலத்திற்கு அடகு வைக்கப்பட்டவை | 2021.12.31 | 03 மாத காலம் பூர்த்தியாகியவை |

**பிரிவுத் தலைவர் - கடன் அறவீடுகள்**
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
**இலக்கம் - 933, கண்டி வீதி,**
**வெதமுல்ல,**
**களனி.**
2022.05.20

# மாகோ பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளைக் கோரல்

மாகோ பிரதேச சபை அதிகாரப் பிரிவின் 2023ஆம் ஆண்டிற்கான உத்தேச மூலதன செலவினங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்குவதற்கான உங்கள் முன்மொழிவுகளை 2022 ஜூன் 30 இற்கு முன்னர் எனக்கு அனுப்பிவைக்குமாறு, 2020 பிரதேச சபை வரவு செலவு அறிக்கை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல் விதிமுறைகளின் 6(1) விதியின் பிரகாரம் அறிவித்துக்கொள்கின்றேன்.

**எச்.எம். விஜித்த அமுனுகம**
**தலைவர்,**
**மாகோ பிரதேச சபை**

# மாவத்தகம பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

1989 இல. 12 மாகாண (விளைவு விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 இல. 15 பிரதேச சபை சட்டத்தின் 184ஆம் பிரிவின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் ராஜா கொல்லூரே அவர்களினால் 2020.10.29ம் திகதி மற்றும் இல. 2199/15 எனும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (அதி விசேட) வர்த்தமானியில் பிரசுரிக்க தீர்மானிக்கப்பட்ட பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதிகள் இல. 6இன் பிரகாரம் மாவத்தகம பிரதேச சபையின் தலைவரான என்னால் 2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்கு உத்தேசிக்கும் ஆலோசனைகள் (அபிவிருத்தி ஆலோசனைகள்) பொது மக்களிடமிருந்து கோரப்படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

அவ் ஆலோசனைகள் 2022.06.30ம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2021.05.09**
**மாவத்தகம பிரதேச சபை,**
**037-2299821**

**தலைவர்,**
**எஸ்.கே. அநுர கமல் பெரேரா,**
**மாவத்தகம பிரதேச சபை.**

# குளியாப்பிட்டி நகர சபையின்

## 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்காக முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தல்

குளியாப்பிட்டி நகர சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையைத் தயாரிக்கையில், மூலதன செலவினங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்குவதற்காக, நகர சபை அதிகாரப் பிரிவில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து முன் மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், உங்கள் முன் மொழிவுகளை எழுத்துருவில், 2022 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர். நேரில், தபாலில், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் நகர சபைக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நகர சபையின் நிதி அலுவலரிடம் (037-4947850) பெற்றுக்கொள்ளலாம்.

குளியாப்பிட்டி நகர அபிவிருத்திக்கான உங்கள் பங்களிப்பை மெச்சுகின்றேன்.

**ஏ.எம். லக்ஷ்மன் அதிகாரி,**
**தலைவர்**
**குளியாப்பிட்டி நகர சபை**

**தொலைபேசி இல : 037-4947798/ 037-2281275**
**தொலைநகல் இல. : 037-2281114**
**மின்னஞ்சல் முகவரி: : kuliyauc@gmail.com**
**இணையத்தளம் : kuliyapitiya.uc.gov.lk**

# மத்திய சுற்றாடல் அதிகார சபை

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உபபிரிவு (2) இன் கீழான அறிவித்தல்

## முன்மொழியப்பட்ட நீர்கொழும்பு கழிவு நீரகற்றல் உட்கட்டுமானத்திட்டத்திற்கான

### சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு தா ம) அறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000மாம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 வ(1)ற்கு அமைவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட நீர்கொழும்பு கழிவு நீரகற்றல் உட்கட்டுமானத்திட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு. தா ம) அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை 30 நாட்களுக்கு பொதுமக்களின் பார்வைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொதுவிடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது

1. பிரதேச செயலகம் நீர்கொழும்பு
2. மாநகர சபை நீர்கொழும்பு
3. கம்பஹா மாவட்ட அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இல. 18411, கண்டி வீதி, யக்கலை
4. தேசிய சுற்றாடல் தகவல் மையம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, “பரிசரபியச”, 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
5. இணையம்: **www.cea.lk** பொதுமக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எழுத்தும் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**“பரிசரபியச”,**
**இல. 104, டென்சில்கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
## நெடுஞ்சாலைகள் அமைச்சு
# வீதி அபிவிருத்தி சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**2022/ 2023 வரையிலுமான 9 மாத காலப்பகுதிக்கு தெற்குதிசை அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் அதிவேக நெடுஞ்சாலை இயக்கங்கள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் வெளியக சுற்றுவட்ட நெடுஞ்சாலைக்கு பயணிகள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான அழைப்பு**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேலேயுள்ள பெறுகைக்காக (கீழேயுள்ள அட்டவணையிலுள்ள வாகனங்கள்) தகுதியும் தகைமையுமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக அதிவேக நெடுஞ்சாலை இயக்கங்கள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இங்கே இரு விலைமனுக்கள் அமைந்திருப்பதுடன் விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது இரண்டு விலைமனுக்களுக்கு தனித்தனியாக விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அமைந்துள்ளன.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வாகன இனம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | RDA/EOM/& M/PRC//2022/MECH/22 ( For Southern Expressway) | Van – 8 Seater | 03 |
| | | Van-5 Seater | 03 |
| | | Crew Cabs | 02 |
| | | Double Cabs | 02 |
| 02. | RDA/EOM & M/PRC/2022/MECH/23 (For Colombo-Katunayake Expressway & Outer Circular Highway) | Van 8 Seater | 04 |
| | | Crew Cabs | 01 |

2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி சபை, அதிவேகநெடுஞ்சாலை இயக்கம், பெறுகை பிரிவிலிருந்து (தொலைபேசி: 038-2289122, தொலைநகல்: 038-2289560) பெற்று அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
3. ஒவ்வொரு வாகனத்திற்கும் 10,000 ரூபா தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது நிபந்தனையற்ற வங்கி உத்தரவாத பாங்கில் புகழ்வாய்ந்த வங்கியிலிருந்து பெறப்பட்டதும் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, ‘மகநெகும மஹாமெதுர’, 216 ஆம் இலக்கத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாமல் இணைக்கப்படும் எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
4. 2022.05.20 ஆம் திகதியிலிருந்து 2022.06.03 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 1000 ரூபா + பெசேவ ஆகியவற்றை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி அதிகார சபை, EOM&M பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் சிங்கள மொழியிலுள்ள ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணங்களின் ஒவ்வொரு தொகுதியையும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.06.03 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பணிப்பாளர் (**EOM&M** பிரிவு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹட்டகஹாஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான ஒப்பந்த இலக்கத்தை தயவு செய்து குறித்துக்காட்டவும்.
6. பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி அதிகார சபை, **EOM&M** பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM & M பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (EOM & M பிரிவு) மே/ பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹாஹேன, வல்கம, பண்டாரகம.**

# பெறுகைக்கான அழைப்பு

## புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சு
## மத்திய கலாசார நிதியம்

**(மத்திய கலாசார நிதிய சீகிரி செயற்றிட்டத்திற்கான துப்புரவேற்பாட்டுச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்)**

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபா மில்லியன் | எதிர்பார்க்கப்படும் தகைமை | மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் விநியோகித்தல் | விலைமனுப் பிணை முறியின் செல்லுபடியாகும் காலம் மற்றும் பெறுமதி | விலை மனுக்கள் வழங்குதல் | விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி நாள் / நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | CCF/HQ/ Service/03/ 2022 | சீகிரிய செயற்றிட்டத்திற்கான துப்புரவேற்பாட்டுச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் | 12 மில்லியன் | வியாபார பதிவு மற்றும் 05 வருடத்திற்குக் குறையாத தொடர்ச்சியான சேவை அனுபவம் | ரூ. 3500.00 | ரூ. 120000.00 118 நாட்கள் வரை | 2022-05-20 - 2022-06-10 | 2022-06-15 பி.ப. 2.00 மணி |

01. விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் பணம் செலுத்துதல் - சீகிரிய செயற்றிட்டத்திற்கான துப்புரவேற்பாட்டுச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு இயைபான விலைக்கோரல் ஆவணங்களை இல. 212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 மத்திய கலாசார நிதிய பிரதான அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவில் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர், மத்திய கலாசார நிதியம், சீகிரிய செயற்றிட்டத்திலிருந்து 2022-05-20ஆம் திகதி முதல் 2022-06-10ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரையில் மேற்கொள்ளலாம்.
02. விலைமனுப் பிணை முறியை மேற்குறிப்பிடப்பட்ட வகையில் இந்த அலுவலகத்தின் சிறாப்பருக்கு பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலம் அல்லது இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் தரப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக பெற்றுக்கொண்ட விலைமனுப் பிணை முறியை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. இதற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விலைமனு படிவங்களை 2022-06-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மத்திய கலாசார நிதியம், இல. 212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இல. 530, வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரோ மாவத்தை, நாராஹென்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரியில் அமைந்துள்ள மத்திய கலாசார நிதியத்தின் தலைமை அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும்.
04. விலைமனுக்கள் 2022-06-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இல. 530, வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரோ மாவத்தை, நாராஹென்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரியில் அமைந்துள்ள மத்திய கலாசார நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
05. தாமதமான அல்லது பூரணமற்று கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
06. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112076361 வழங்கல் அதிகாரியிடமிருந்து மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் இணையதளத்தைப் (www.ccf.gov.lk) பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் செயற்றிட்ட முகாமையாளர், மத்திய கலாசார நிதியம், சீகிரிய செயற்றிட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இல. 066-2286945)

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய கலாசார நிதியம்.**

# 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

## சிலாபம் நகர சபை


1989 இல. 12 மாகாண சபைகள் (விளைவு விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 255ஆம் அதிகாரமான நகர சபை சட்டவாக்கத்தின் 193ஆம் பிரிவின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம், வட மேல் மாகாண கௌரவ ஆளுநர் ராஜா கொல்லூரே அவர்களினால் 2020.10.29 மற்றும் இல. 2199/15 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நகர சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதிகள் இல. 06 இன் பிரகாரம் சிலாபம் நகர சபையின் தலைவரான என்னால் 2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தித் திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்கு உத்தேசிக்கும் ஆலோசனைகள் (அபிவிருத்தி ஆலோசனைகள்) பொது மக்களிடமிருந்து கோரப்படுவதாக அறிவித்துக்கொள்கிறேன்.

உங்களது 2023ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் அல்லது ஆலோசனைகள் 2022.06.30ம் திகதிக்கு முன் எனக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

**டபிள்யூ.எம்.ஏ. துஷான் சத்துரங்க**
**தலைவர்,**
**சிலாபம் நகர சபை.**

**2022 மே 20ம் திகதி**
**சிலாபம் நகர சபை அலுவலகம்,**
**சிலாபம்.**


BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE


CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

### செயற்றிட்ட இல.: P163742

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (தென் மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOA-267179-CW-RFB/SP/DPDO/ Rehb.T(2)/2022/001 | வீரவில அடுக்கையிலுள்ள புஞ்சியப்பு ஜதுரவெவயின் புனரமைப்பு வேலைகள் | C5 முதல் மேல் | 4,500.00 | 400,000.00 | 20/09/2022 வரை |
| 2 | LK-MOA-267194-CW-RFB/SP/DPDO/ Rehb.T(3)/2022/002 | வீரவில அடுக்கையிலுள்ள சியம்பலகஸ்வெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 4,500.00 | 260,000.00 | |
| 3 | LK-MOA-267195-CW-RFB/SP/DPDO/ Rehb.T(34)/2022/003 | வீரவில அடுக்கையிலுள்ள உடவெவயின் புனரமைப்பு வேலைகள் | C5 முதல் மேல் | 4,500.00 | 425,000.00 | |
| 4 | LK-MOA-267161-CW-RFB/SP/DPDO/ Rehb.T(37)/2022/004 | வீரவில அடுக்கையிலுள்ள இத்தன்வேகடவெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 4,500.00 | 290,000.00 | |
| 5 | LK-MOA-267173-CW-RFB/SP/DPDO/ Rehb.T(85)/2022/005 | வீரவில அடுக்கையிலுள்ள கடவரவெவயின் புனரமைப்பு வேலைகள் | C5 முதல் மேல் | 4,500.00 | 480,000.00 | |
| 6 | LK-MOA-267206-CW-RFB/SP/DPDO/ Rehb.T(95)/2022/007 | வீரவில அடுக்கையிலுள்ள இலுக்குபெலஸ்ஸ வெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 4,500.00 | 210,000.00 | |
| 7 | LK-MOA-267181-CW-RFB/SP/ DPDO/ Rebh/2022/06 | வீரவில அடுக்கையிலுள்ள பாதவ்கெம வெவயின் புனரமைப்பு வேலைகள் | C6 முதல் மேல் | 4,500.00 | 280,000.00 | |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஹம்பாந்தோட்டை, நிர்வாகக் கட்டிடத்தொகுதி, 3ஆம் மாடி, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (தென் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 047-2256304, தொலைநகல்: 047-2256303) மற்றும் அதே இடத்தில் 2022 மே 26ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 மே 26ஆம் திகதி முதல் 2022 ஜூன் 22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2022 ஜூன் 02ஆம் திகதி மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஜூன் 22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (தென் மாகாணம்), 3ஆம் தளம், நிர்வாகக் கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2022 ஜூன் 22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (தென் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்),**
**3ஆம் தளம்,**
**நிர்வாகக் கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்டை.**
2022-05-20ஆம் திகதி.

CSIAP THE WORLD BANK

# பெறுகை அறிவித்தல்

### பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்)

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

### கடன் இல.: 6346LK

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) கிரயச் செலவிற்காகப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு விபரிக்கப்பட்டுள்ள புனரமைப்பு வேலைகளுக்கு தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (வடமேமா) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | தேவையான தரம் மற்றும் விசேடத்துவம் | ஒப்பந்தக் காலம் | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | விலை மனுப் பிணை முறி தொகை மற்றும் செல்லுபடிக் காலம் (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| LK-MOA-266094-CW-RFB | புத்தளம் மாவட்டத்திலுள்ள கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவு, தப்போவ ASC பிரதேசம், நெல்லிவெவ அடுக்கையிலுள்ள பன்சல்வெவ, மற்றும் வளஸ்வெவ, தேவாலகந்தவெவ, சாலியவெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 300 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 550,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-266145-CW-RFB | குருநாகல் மாவட்டத்திலுள்ள கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவு, நன்னேரிய ASC பிரதேசத்திலுள்ள பின் வெவ மற்றும் ஹல்மில்லவெவ, உட தோரவாவெவ மற்றும் அம்பன்பொல ASC பிரதேசத்திலுள்ள மாம்பிட்டிகமவெவ, கொரக்கஹவெவ, ரடேதரனகஸ்வெவ, முத்துபண்டாகேவெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 365 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 550,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA -265929-CW-RFB | குருநாகல் மாவட்டத்திலுள்ள அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவு, அம்பன்பொல ASC பிரதேசத்தில் அஸ்வெத்தும அடுக்கையிலுள்ள அஸ்வெத்துமவெவ, தெமட்டவெவ, மெடில்ல அமுன அடுக்கையிலுள்ள நலேவ வெவ, நாலவகுடா வெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C6 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 240 நாட்கள் | 2022 ஆகஸ்ட் 26ஆம் திகதி வரை | 300,000.00 2022 செப்டெம்பர் 23ஆம் திகதி வரை | 6,000.00 |
| LK-MOA-267064-CW-RFB | குருநாகல் மாவட்டத்திலுள்ள அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவு, அம்பன்பொல ASC பிரதேசத்தில் தம்மன்னாவெவ அடுக்கையிலுள்ள அங்குருப்புவவெவ மற்றும் பனதரகம வெவ, குடா வெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C6 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 240 நாட்கள் | 2022 ஆகஸ்ட் 26ஆம் திகதி வரை | 230,000.00 2022 செப்டெம்பர் 23ஆம் திகதி வரை | 6,000.00 |
| LK-MOA-266155-CW-RFB / | குருநாகல் மாவட்டத்திலுள்ள அம்பன்பொல ASC பிரதேசத்தின் பீல்லவெவ, அமதிவெவ மற்றும் அஸ்வெவ, நன்னேரிய ASC பிரதேசத்தின் மஹா தொராவ வெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 300 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 525,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-265553-CW-RFB / | புத்தளம் மாவட்டத்திலுள்ள வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவின் வனாத்தவில்லுவ ASC பிரதேசம், சமனலவெவ அடுக்கையிலுள்ள சமனலவெவ, பஹுன்வெவ மற்றும் மகா வீரக்குளியவெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 270 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 400,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-266117-CW-RFB / | குருநாகல் மாவட்டத்திலுள்ள அம்பன்பொல ASC பிரதேசத்தின் இஹல தந்திரியகம வெவ, பஹல தந்திரியகமவெவ, அபே வெவ, ஹிரியாலேகமவெவ, ஊரேவவெவ, படபெத்தேவெவ, எல்லபொடகமவெவ மற்றும் தங்கஹவெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 365 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 600,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-266099-CW-RFB | புத்தளம் மாவட்டத்திலுள்ள கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவின் தப்போவ ASC பிரதேசத்தின் நெல்லிவெவ அடுக்கையிலுள்ள தம்மன்னேவெவ மற்றும் ஜயந்தி வெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 270 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 400,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-265555-CW-RFB / | புத்தளம் மாவட்டத்திலுள்ள வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவின் வனாத்தவில்லுவ ASC பிரதேசம், சமனலவெவ அடுக்கை, கதிரானகடுவ வெவ, மகா தம்மன்குளமவெவ, தம்மன்குளம குடாவெவ மற்றும் புஞ்சிவீரக்குளியவெவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C5 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 300 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 585,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-266086-CW-RFB | புத்தளம் மாவட்டத்திலுள்ள கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவின் தப்போவ ASC பிரதேசத்தின் நெல்லிவெவயிலுள்ள நெல்லிவெவ கிராமம், சியபலவெவ, பலீகமவெவ மற்றும் பெரியவில்லுவ என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் | C4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு) | 300 நாட்கள் | 2022 ஒக்டோபர் 7ஆம் திகதி வரை | 625,000.00 2022 நவம்பர் 04ஆம் திகதி வரை | 8,000.00 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்காக தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் நிர்மாணத்துறையில் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்தை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (**CIDA**) கொண்டிருத்தல் வேண்டும்.
5. தகைமைத் தகவல்கள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் 5ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்பு, இல. 51, மிஹிந்து மாவத்தை, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **037-2227950**, தொலைநகல்: **037-2227950**, மின்னஞ்சல்: **dpdcsiapnwp@gmail.com)** மற்றும் அதே இடத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. 2022 மே 20ஆம் திகதி முதல் 2022 ஜூன் 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்பு, இல. 51, மிஹிந்து மாவத்தை, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. 2022 ஜூன் 10ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல. 51, மிஹிந்து மாவத்தை, யக்கஹபிட்டிய வீடமைப்பு, குருநாகல் எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பெட்டி பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் (வட மேல் மாகாணம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கமைய விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்களுடன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. 2022 மே 27ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்பு, இல. 51, மிஹிந்து மாவத்தை, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் (வடமேல் மாகாணம்) விலைமனுக் கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இதில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (வடமேல் மாகாணம்),**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP),**
**இல. 51, மிஹிந்து மாவத்தை,**
**யக்கஹபிட்டிய வீடமைப்பு,**
**குருநாகல்.**
**திகதி: 2022-05-20.**



பங்களாதேஷ் - இலங்கை

# முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு



இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி, தனது முதல் இன்னிங்சிற்காக இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 397 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அஞ்சலோ மெத்திவ்ஸ் 199 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்தார்.

இதன் காரணமாக அவர் தனது இரண்டாவது டெஸ்ட் இரட்டைச் சதத்தை ஒரு ஓட்டத்தால் தவறவிட்டுள்ளார்.

மேலும், தினேஷ் சந்திமால் 66 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 54 ஓட்டங்களையும் மற்றும் ஓசத பெர்ணான்டோ 36 ஓட்டங்களையும் இலங்கை அணி சார்பில் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

பந்து வீச்சில் நஹீம் ஹசன் 6 விக்கெட்டுக்களையும் சகிப் ஹல் ஹசன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

இந்நிலையில் பதிலுக்கு தனது முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்களையும் இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் தமீம் இக்பால் 133 ஓட்டங்களையும் முஸ்புகுர் ரஹீம் 105 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் விஸ்வா பெர்ணான்டோ உபாதை காரணமாக அவருக்கு பதிலாக அணியில் இணைந்த கசுன் ராஜித 4 விக்கெட்களையும் அசித பெர்ணான்டோ 3 விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தனர். தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி 6 விக்கெட்களை இழந்து 260 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அதனடிப்படையில் 5 ஆம் நாள் முடிவில் இலங்கை அணி 192 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த நிலையில் போட்டியை இடைநிறுத்தியது.

இலங்கை அணி சார்ப்பில் நிரோஷன் திக்வெல்ல ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் தைஜுல் இஸ்லாம் 4 விக்கெட்களை வீழ்த்தி இருந்தார். போட்டியின் ஆட்ட நாயகனாக அஞ்சலோ மெத்திவ்ஸ் தெரிவானார். இரு அணிகளும் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 22ம் திகதி

பங்களாதேஷின் மிர்பூர் நகரில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம் காயம் காரணமாக டெஸ்ட் தொடரில் ஆடமாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..................
வாக்களித்தவர் பெயர் : ..................
முகவரி : ..................
மொபைல் இல. : ..................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 21-05-2022 இல. 08




# 100 மீற்றர் இலங்கை சாதனையை மீண்டும் தவறவிட்டார் யுபுன் அபேகோன்

தெற்காசியாவின் அதிவேக வீரரும், இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரருமான யுபுன் அபேகோன், இத்தாலியில் கடந்த (18ம் திகதி) நடைபெற்ற *Savona International* 2022 போட்டித் தொடரில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

2022 பருவகாலத்தில் தனது முதலாவது 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட அவர், முன்னதாக நடைபெற்ற தகுதிச்சுற்றுப் போட்டியை 10.04 செக்கன்களில் ஓடி முடித்து இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

காற்றின் வேகத்திசைகாட்டியின் வாசிப்பு அனுமதிக்கப்பட்ட அளவினை விட +2.3 அதிகமாக இருந்த காரணத்தினால் யுபுன் அபேகோனின் நேரம் இலங்கை சாதனையாக கருதப்பட்டிருக்கவில்லை.

சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தின் விதிமுறைகளின் படி, குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் வீரரொருவர் போட்டியை நிறைவு செய்த பிறகு காற்றின் திசைகாட்டி இரண்டை விட குறைவாக இருக்க வேண்டும். அதற்கு மேலதிகமாக இருந்தால் வெற்றி மாத்திரமே வழங்கப்படும் தவிர, குறித்த காலப்பெறுமதி ஒருபோதும் சாதனையாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

யுபுன் அபேகோனில் நிலைநாட்டிய காலப்பெறுமதியானது 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் ஒருவரினால் எந்தவொரு காலநிலையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிசிறந்த தூரமாக பதிவாகியது.

அமெரிக்காவில் உஷான் திவங்கவுக்கு மற்றுமொரு வெற்றி

முன்னதாக, கடந்த ஆண்டு ஜேர்மனியின் டெஸாவு நகரில் நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுனர் போட்டியில் பங்குகொண்ட யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.09 செக்கன்களில் நிறைவு செய்து இலங்கையின் மின்னல் வேக வீரராக முத்திரை பதித்தார்.

காற்றின் வேகத்திசைகாட்டியின் வாசிப்பு அனுமதிக்கப்பட்ட அளவினை விட 2.2 அதிகமாக இருந்த காரணத்தினால் யுபுன் அபேகோனின் நேரம் இலங்கை சாதனையாக கருதப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தகுதிச்சுற்றை 10.04 செக்கன்களில் ஓடிய யுபுன் அபேகோன் அதனைத்தொடர்ந்து நடைபெற்ற இறுதிப்போட்டியை 10.16 செக்கன்களில் ஓடிமுடித்து நான்காவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.



குறித்த போட்டியில் முதலிடத்தை நடப்பு ஒலிம்பிக் சம்பியனான இத்தாலியின் மார்ஸல் ஜேகொப்ஸ் பெற்றுக்கொண்டார். போட்டியை அவர் 10.04 செக்கன்களில் ஓடி முடித்தார்.

இதனிடையே, இரண்டாவது இடத்தை ஆர்தர் சிஸ்ஸியும் (10.10 செக்.), மூன்றாவது இடத்தை ஜிம்மி விகௌட்டும் (10.14 செக்.) பெற்றுக்கொண்டனர்.

# 2023ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை ஹொக்கி அணி

பேங்கொக்கில் நடைபெற்று முடிந்த ஆசிய விளையாட்டுத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளின் மூலம் 2023ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான, ஹொக்கி தொடருக்கு இலங்கை ஆண்கள் ஹொக்கி அணி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.



அதன்படி தகுதிகாண் தொடரில் முன்னிலை பெற்ற ஆறு அணிகளில் ஒன்றாக இலங்கை ஆண்கள் ஹொக்கி அணி மாறியிருப்பதோடு, சீனாவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் விளையாடும் சந்தர்ப்பத்தினைப் பெற்றிருக்கின்றது.

இந்த தகுதிகாண் தொடரில் சிங்கப்பூரினை 52 என்கிற கோல்கள் கணக்கில் வீழ்த்திய இலங்கை ஹொக்கி அணி, பங்களாதேஷ் மற்றும் இந்தோனசியா ஆகிய நாடுகளுடன் தோல்வியைச் சந்தித்திருந்தது. இதன் பின்னர் தொடரில் 5 தொடக்கம் 8 ஆம் இடம் வரையிலான அணிகளை தெரிவு செய்ய நடைபெற்ற போட்டிகளில் ஹொங்கொங் அணியினை 52 என்கிற கோல்கள் கணக்கில் வீழ்த்திய இலங்கை, உஸ்பெகிஸ்தான் அணியுடனான மோதலை 33 என்கிற கோல்கள் கணக்கில் சமநிலைப்படுத்தியிருந்தது.

தகுதிகாண் தொடரின் மூலம் இலங்கையுடன் சேர்த்து ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான ஹொக்கி தொடருக்கு ஓமான், பங்களாதேஷ், தாய்லாந்து, இந்தோனேசியா, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில் இந்த தகுதிகாண் தொடரில் 7 கோல்களைப் பெற்றிருந்த இலங்கையின் விபுல் வர்ணகுல தொடரில் அதிக கோல்கள் பெற்றிருந்த வீரராக மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





சம்மாந்துறை ரியல் மெற்றிக் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்த அணிக்கு 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட நட்பு ரீதியிலான கடின பந்து கிரிக்கெட் போட்டி அக்கரைப்பற்று றோயல் விளையாட்டுக் கழகத்துடன் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் ரியல் மெற்றிக் அணி 3 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது.பிரதம அதிதியாக கலந்து கொண்ட நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவர், பொறியியலாளர் உதுமாங்கண்டு நாபீர் வெற்றி கிண்ணத்தினை வழங்கி வைத்தார். (படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.